# தமிழும் தமிழரும்

நாவலர், கணக்காயர், டாக்டர்

**ச. சோமசுந்தர பாரதியார்,** M. A., B. L., D. Litt.

நூல்வெளியீட்டாளர்கள்—விற்பனையாளர்கள்

**பசுமலை :: மதுரை-4**

திருத்திய பதிப்பு: செப்டம்பர் 1967.
நாவலர்: 14.
உரிமை பதிவு
விலை ரூ. 4—00

TAMIZHUM TAMIZHARUM

BY

*Navalar, Kanakkayar,*
**Dr. S. Somasundara Bharathiar,** M.A., B.L., D.Litt.,

*Decimal:* 894·8114
*Colon :* 031:4

*Published by:*

NAVALAR PUTHAKA NILAYAM
Pasumalai, MADURAI-4.
Phone: 4559.

---

விவேகாநந்தா அச்சகம், மதுரை-1.

# பதிப்புரை

தற்காலத் தமிழுலகில் தமக்கு ஒப்பாரும் மிக்காரு மின்றி, ஏறுபோற் பீடுநடைகொண்டு ஏற்றம்பெற்று இலங்கியவர் நாவலர், கணக்காயர், டாக்டர் ச. சோமசுந்தரபாரதியாராவர். அவரெழுதிய நூல்களனைத்தும் தமிழ்ப் பெருமக்கட்குக் கிடைத்த அரிய கருவூலங்கள்! அவற்றுள், தண்டமிழின் தகவினையும், தமிழரின் தன்னிகரில்லாப் பண்பாட்டினையும், தமிழகத்தின் பழுதிலாத் திறத்தினையும், இன்ன பிறவற்றையும் கண்டு களிக்கலாம்; வீழ்ச்சியுற்ற தமிழகம் எழுச்சி பெறுதற்கும், விசையொடிந்த உடம்பு வீறு பெறுதற்கும் வழிவகை காணலாம்!

நாவலர் பாரதியார் அவ்வப்போது எழுதிய, அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் பலவாகும். அவற்றுள் ஒருசிலவற்றைத் தொகுத்துத் 'தமிழும் தமிழரும்' என்னுந் தலைப்பில் தமிழர்க்கு வழங்குவதில் பெருமையுறுகின்றோம்.

''தமிழ் நாட்டில், பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழியைக் கற்பவர்க்கும், தமிழ் தமிழ்ப்பண்பாடு பற்றி ஆய்வியல் நடத்துபவர்க்கும் உதவித் தொகை அளிக்க வேண்டும்'' என்ற நோக்கத்தால் 'நாவலர் சோமசுந்தர பாரதியார் கல்வி அறப்பணிக்குழு' ஒன்று 1963-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பெற்றது. அக்குழுவில், திருமதி வசுமதி பாரதியார், டாக்டர் திரு. சோ. இராசாராம் பாரதியார், L. M. P. (அறப்பணிக்குழு ஆட்சியாளர்). திருமதி. கி. இலக்குமி பாரதியார், திரு. சோ. இலக்குமி

ரதன் பாரதியார், M.A., B.L., திருமதி. ந. மீனாட்சி அம்மையார், M. A., டாக்டர் திருமதி லலிதா காமேசுவரன், M. B., B. S., Ph. D. (Lond), திரு கி. பழநியப்பன் (செயலர், மதுரைத் தமிழ்ச் சங்கம்) திரு. அ. கி. பரந்தாமனார், M.A., பண்டித வித்துவான் திரு. ச. சாம்பசிவன் (தமிழ் விரிவுரையாளர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை), புலவர் திரு. க. வெள்ளைவாரணனார் (தமிழ் ஆராய்ச்சித்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்) டாக்டர் திரு. மு வரதராசனார், M.A., Ph.D., (தமிழ்த்துறைத்தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம்) ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர்.

இந்நூலை வெளியிடும் உரிமையை எங்கட்கு அளித்த அறப்பணிக் குழு உறுப்பினர் அனைவர்க்கும், அதன் ஆட்சியாளர் திரு. சோ. இராசாராம் பாரதியவர்கட்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்நூலின் விற்பனை ஊதியம், தமிழ் வளர்ச்சிக்குப் பயன்படுமாதலால், தமிழ்ப் பெருமக்களனைவரும் பேராதரவு தருமாறு வேண்டுகின்றோம்.

பசுமலை,
10-9-1967.

**நாவலர் புத்தக நிலையத்தினர்.**

# உள்ளுறை


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | பழந்தமிழ்நாடு | 1 |
| 2. | நற்றமிழ் | 24 |
| 3. | தமிழும் தமிழரும் | 32 |
| 4. | தமிழர் கடவுட் கொள்கை | 36 |
| 5. | தொல்காப்பியன் | 40 |
| 6. | எது தமிழ் இலக்கியம் | 56 |
| 7. | இலக்கியத்தில் புதுமுறைகள் | 61 |
| 8. | நக்கீரரும் கருத்துரிமைப் புலமையறமும் | 68 |
| 9. | இருபெருங் கலைகள் | 75 |
| 10. | தமிழ் வேற்றுமை மரபு | 90 |
| 11. | மணிமேகலையின் காலமும் அதை இயற்றியவரும் | 99 |
| 12. | மெய்கண்டார் நூல் மொழிபெயர்ப்பா? தமிழ் முதனூலா? | 116 |
| 13. | கல்வியும் படிப்பும் | 129 |
| 14. | தாய்மொழியில் உயர்தரக் கல்வி | 150 |
| 15. | அறமும் தருமமும் | 156 |

# பழந்தமிழ் நாடு

மிகப் பழங்காலத்தில், இமய முதல் தெற்கே குமரி யாற்றளவும் தமிழ்நாடாகவே யிருந்ததாக ஆராய்ச்சி யாளர் கருதுகின்றனர். அதன் உண்மை ஆராய்ந்து தெளியத்தக்கது. தொல்காப்பியர் காலத்துக்கு முன் தொடங்கியே தமிழ் கூறு நல்லுலகத்துக்கு வேங்கடமலை வடக்கெல்லையாகவும், குமரியாறு தெற்கெல்லையாகவும் கூறப்பட்டு வருகின்றன.

இளம்பூரணர், நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார், புறநானூற்றுப் பழையவுரைகாரர் முதலியோ ரெல்லாரும் குமரி என்பதைக் குமரியாறு எனவே கொண் டனர்.

"கடல் கொள்வதன் முன்பு பிறநாடும் உண்மையின் தெற்கும் எல்லை கூறப்பட்டது......பிற இரண்டெல்லை கூறாது இம்மலையும் யாறும் கூறியது...அவை கேடிலவாத லானும், எல்லாராலும் அறியப்படுதலானும்" என்பது, "வடவேங்கடம், தென்குமரி, ஆயிடைத் தமிழ் கூறும்

நல்லுலகம்'' என்னும் தொல்காப்பியப் பாயிர அடிக்கீழ், இளம்பூரணர் தரும் குறிப்புரை.

இவ்வாறே, இவ்வடிக்கு நச்சினார்க்கினியரும், ''குமரி யாற்றின் தெற்கு நாற்பத்தொன்பது நாடு கடல்கொண்ட தாகலின்'' எனத் தரும் உரைக் குறிப்பும் குமரியை யாறு எனவே சுட்டுவது காண்க.

சிலப்பதிகார வேனிற்காதை யுரையில் அடியார்க்கு நல்லாரும் குமரியை ஆறெனவே குறிக்கின்றார். ''பெண் பாற் பெயரால் குமரி என்பதாயிற்று; ஆகவே, தென்பாற் கண்ணதோர் ஆற்றிற்குப் பெயராம்'' என்பது அவர் தரும் தெளிவுரையாகும்.

''தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்'' எனும் காரிகிழாரின் (6-ஆம்) புறப்பாட்டுக்கு, ''உட்குந் திறம் பொருந்திய கன்னியாற்றின் தெற்கும்'' என்று புறநா னூற்றின் பழைய உரைகாரரும் கூறுகின்றார்.

அதுவேபோல், ''அன்னச்சேவல்'' எனத் தொடங்கும் பிசிராந்தையாரின் (67-ஆம்) புறப்பாட்டிற்குள்ள பழைய உரையினும் ''குமரியாற்றின் பெரிய துறைக் கண்ணே'' என்றே கூறப்படுவதும் காண்க.

இனி, சிலப்பதிகார வேனிற்காதையில்,—

''நெடியோன் குன்றமும் தொடியோள் பெளவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புனல் நன்னாட்டு''—1

1. நெடியோன் குன்றம்-வேங்கடமலை; தொடியோள்-குமரி; பெளவம்-கடல்; வரம்பு அறுத்த-எல்லையாக வரையறுக்கப்பட்ட; தண்புனல்-குளிர்ந்த நீர்.

என வரும் அடிகளில், குமரி தொடியோள் பௌவம் எனக் குறிக்கப்படுகிறது. குமரியை யாறு என்னுது பௌவம் (கடல்) என இளங்கோவடிகள் குறித்தது குமரியை யாறெனவே கொண்டு கூறிவந்த பழைய கொள்கைக்கு மாறியிருப்பதனுல், அவ்வாறு அவர் கூறியதற்குரிய காரணத்தை விளக்கும் அடியார்க்கு நல்லார், வேங்கடமும் குமரிக்கடலும் வரம்பறுத்த தமிழ்நாடு, கடல்கோளுக்குப் பிற்காலத்துச் சிலப்பதிகாரக் கதைக் காலத் தமிழகமே யாமென விளக்கி, முன்னிருந்த பஃறுளி முதல் குமரி வரை தமிழகத்தில் பாண்டி நாட்டின் தென்பகுதி நிலம் கடல் கொள்ளப்பட்டதாலும், அக்கடல்கோளுக்குப் பின் குமரிக் கடலே தமிழகத்தின் தெற்கெல்லையாய் அமைந்ததாலும், தமிழ்வரம்பறுத்த தண்புனனுட்டுத் தெற்கெல்லை தொடியோள் பௌவமெனக் கூறப்பட்டது என்ற வரலாற்றையும் கூறிப்போந்தார்.

அந்தக் கடல்கோள் வரலாற்றை இளங்கோவடிகள்,

> 'வடிவே லெறிந்த வான்பகை பொருது
> பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
> குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
> வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு
> தென்றிசை யாண்ட தென்னவன்' [2]
>
> (காடுகாண்காதை 18–22)

என்று சுட்டியிருக்கிருர்.

எனவே, தற்காலக் குமரிக் கடலின் தெற்கே பழந் தமிழ் நிலப்பரப்பு இருந்ததும், அத் தென்தமிழ் நிலப் பரப்பில் பஃறுளி, குமரி முதலிய யாறுகளும், பல மலைத்

2. வான்-பகை, பன்மலை அடுக்கம்-பல பக்க மலைகள்; தென்னவன்-பாண்டியன்.

தொடர்களும், அத்தமிழ் நிலத்துக்குத் தெற்கே பிறநாடு களும் இருந்து கடல்கொள்ளப்பட்டதும் தேற்றமாம்.

கொடுங் கடற்கோளினையும் அதனால் தமிழ் நிலத்து ஒரு பகுதி அழிந்ததனையும் சிலப்பதிகாரம் போலவே முல்லைக்கலியும்,

'மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த
கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்'[3]
(செய்-4)

என்று கூறுகிறது.

இக்கடல்கோள் குறிக்கும் பழம்பாடல்களிலும் உரைகாரர் குறிப்புக்களிலும் காணப்படும் குமரி, யாறன்று; மலையே யாதல் வேண்டுமென்று காலஞ்சென்ற சோழவந் தான் அரசஞ்சண்முகனார் எழுதியுள்ளார். இக்கருத்துக்கு அவர் காட்டும் ஆதரவு, 'வடிவேலெறிந்த...தென்னவன்' எனச் சிலப்பதிகாரத்துக் காடுகாண்காதையிலிருந்து மேலே எடுத்துக்காட்டிய அடிகளேயாகும்.

இதில், 'பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள' என வருவதாலும், தெற்கே தானிழந்த ஒரு யாற்றுக்கும் மலைக்கும் ஈடாக 'வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு ..... ஆண்ட தென்னவன்' எனக் குறிக்கப்படுதலாலும், தமிழகத்தின் பண்டைத் தெற்கெல்லை குமரி மலையேயாதல் வேண்டுமென அவர் துணிந்தனர்.

---

3. திரை-அலை; வௌவலின்-பறித்துக்கொள்ளுதலின்; மேவார்-பகைவர்; கிளர்-விளங்கும்; சீர்-புகழ்.

ஆனால், அதற்கு மாறாகப் பழைய வுரைகாரர் பலரும், இக்காலத்துப் பெரும் புலவரெல்லாரும் பண்டைக் குமரியை யாறெனவே கொண்டனர்.

இவற்றுள் எது பொருந்துவது என்பது தெளியத் தக்கது.

குமரிக்கோடு என்ற சிலப்பதிகாரத் தொடரால், தமிழகத்தின் தெற்கெல்லையாகக் கூறப்பட்ட குமரி, யாறன்றெனத் துணிதற்கில்லை. கோடு எனுஞ் சொல் மலை யுச்சியினையும் யாற்றின் கரையினையும் குறிக்கும். அன்றி யும், இழந்த தென்னிலப் பரப்புக்கீடாகப் பாண்டியன் கொண்டு ஆண்டது, தன்னாட்டை யடுத்திருந்த புலி விற் கொடிகளின்கீழ் விளங்கிய சோழ சேர மண்டலங்களே என்னும் மெய்வரலாறு, மேற்காட்டிய முல்லைக்கலி யடிக ளால் விளங்கும்.

கங்கையும், இமயமும் அவன் வெற்றி குறிக்கும் அறி குறிகளே யன்றி, அவை அவனாட்சிக்குட்பட்டனவல்ல வென்பது, அவர் காட்டும் காடுகாண்காதை யடிகளி லேயே, 'வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு ஆண்ட' என்னாது, 'வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு தென்றிசையாண்ட தென்னவன் வாழி' என வரும் தொடரால் விளங்கும். இதில், தென்னவன் கொண் டது வடதிசைக் கங்கையும் இமயமும் எனினும் அவ னாண்டது தென்றிசையினையே என்னும் உண்மை வலி யுறுத்தப்படுகிறது.

அன்றியும், தான் இழந்த யாற்றுக்கும் மலைக்கும் ஈடாக, ஒரு யாறும் மலையும் கோடலே தென்னவன் கருத்தாயின், தன்னாட்டையடுத்துள்ள சேர சோழ மண்

டலங்களில், கொல்லி, நேரி முதலியவற்றுள் ஒரு மலையையும் பேரியாறு, காவிரி யாறுகளுள் ஒரு யாற்றினையும் கொண்டு ஆளக் கருதாமல், பல மலையும் யாறும் கடந்து நீளிடை நீந்திச் சென்று வடதிசைக் கங்கையும் இமயமும்கொண்டு அவற்றையும் ஆளாமல், மீட்டும் தென்றிசையையே ஆண்டு வந்தான் என்னும் தென்னவன் செய்தி சண்முகனார் கருத்துக்குப் பொருத்தமற்றதாயிருக்கிறது.

'தென்னவன் வெற்றி வேட்கையால் இமயம் வரை படையெடுத்துச் சென்று வென்று மீண்டான்' என்பதே இங்குஇளங்கோவடிகள் கூறும் கருத்தாகும். சேர, சோழர்களும் இமயம் வரை சென்று வென்று விற்கொடியினையும் புலிக் கொடியினையும் இமயத்துப் பொறித்த செய்தி கூறும் சிலப்பதிகார வரலாறுகள், அவ்வரசர் வென்றியை மட்டும் குறித்தல் போலவே, ஈண்டும் தென்னவனுடைய வென்றியையே கூறியதாகும். அஃதன்றி, இழந்த யாற்றுக்கும் மலைக்கும் ஈடாக இமயமும் கங்கையும் தென்னவன் ஆளக் கொண்டதாகக் கூறும் கருத்து இளங்கோவடிகளுக்கு இல்லை என்பதும் தெளிவாகும்.

இன்னும் பழங்குமரி மலையுமன்று; கடலுமன்று; யாறே என்பது,

**'வேங்கடம் குமரித் தீம்புனல் பௌவமென்**
**றிந்நான் கெல்லை தமிழது வழக்கே'**

என்னும் சிகண்டியார் கூற்றானும் வலியுறும். ஈண்டுக் குமரித்தீம்புனல் என்பது குமரியென்னும் உண்ணத் தக்க இனிய நீரையுடைய யாற்றினையே குறித்து நிற்றல் வெளிப்படை.

இவ்வடிகளை, 'வேங்கடம், குமரி, தீம்புனற் பௌவம்' எனப் பாடங்கொண்டு, தீம்புனல் என்பதனைப் பௌவத்துக்கு அடையாக்கிப் பொருள்கொள்வாரும் உளர். அவர் பாடத்திற் குமரியே பௌவமெனக் கொள்ளப் படினும், குமரியல்லாத பிறிதொன்று பௌவமெனக் கொள்ளப்படினும், தீம்புனல் என்னும் அடை பொருந்தாமை தேற்றம். உவர் நீரையன்றித் தீம்புனலையுடைய பௌவம் தென் தமிழ் நிலத்தை யடுத்து என்றுமில்லாமை யாவர்க்கும் ஒப்பமுடிந்தது. அன்றியும், பௌவத்தைக் குமரியொடு புணர்த்திக் "குமரித் தீம்புனற் பௌவம்" எனக் கூறுமிடத்து, வேங்கடமும் குமரிப்பௌவமும் என இரண்டெல்லையே கூறி அடுத்து இவற்றை 'இந்நான் கெல்லை' என்று சுட்டுவதும் பொருந்தாக் கூற்றாம். ஆதலால் 'தீம்புனற்பௌவம்' என்று பாடங் கொள்வது எவ்வாற்றானும் பொருந்தாதாகும்.

எனவே, 'வேங்கடம், குமரித்தீம்புனல், பௌவம்' என்ற பாடமே இந்நான்கெல்லை யென்பதனோடு பொருந்தி முடியும். இதனால் சிகண்டியார் இங்குக் கூறிய நான்கெல்லை வடக்கண் வேங்கடமும் தெற்கண் குமரித் தீம்புனலும் கிழக்கும் மேற்கும் பௌவமும் ஆதல் வெளிப்படை. இவவுண்மை,

'தென்குமரி வடபெருங்கற்-குணகுட கடலாவெல்லை'[4]
(புறம்-17; மதுரைக் காஞ்சி-அடி 70, 71 )

என வரும் குறுங்கோழியூர் கிழார், மாங்குடி மருதனார் என்னும் இவ்விரு பெரும்புலவர் பழங்கூற்றானும் வலியுறும். இவ்வாறே காரிகிழாரும்,

4. குணக்கு-கிழக்கு; குடக்கு-மேற்கு.

'வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅ துருகெழு குமரியின் றெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்'[5]
(புறம்-6)

என எல்லை கூறிப்போதல் காண்க.

தொல்காப்பியப் பாயிரவுரையில், இளம்பூரணர், 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம், என்னும் அடியில், நான்கெல்லை கூறாது இரண்டெல்லையே கூறியதற்குக் காரணங் காட்டுமுகத்தான் 'வடக்கும் தெற்கும் எல்லை கூறினார், அவற்றின் புறத்துப் பிற நாடுண்மை பற்றி; கிழக்கும் மேற்கும் கடலே எல்லையாதல்பற்றி எல்லை கூறிற்றிலர்', என விளக்குதலும் இங்கு நோக்கத் தக்கது.

இதுகாறும் கூறியவற்றால், பண்டைத் தமிழகத்தின் தெற்கெல்லையாகிய குமரி, தீம் புனலையுடையதொரு யாறே யென்பதும், அதன் தெற்கண் தமிழல்லாத பிறநில மிருந்ததென்பதும் வெளியாம்.

இனி, குமரி என்பது யாறு? அன்றி மலையா? என ஒருதலையாத் துணிவது இவ்வாராய்ச்சிக்கு இன்றியமையாத தன்று. எதுவேயாயினும, குமரி யாண்டையதென்பதே இங்கு ஆராய்ச்சிப் பொருளாகும்.

பண்டைப் பெரும் புலவர்களும் பழையவுரைகார ரெல்லாரும் 'குமரி'யை யாறெனக் கொண்டதனோடமையாது, அதுவே தொன்று தொட்டுத் தமிழகத்தின் தெற்

5. வடாஅது-வடக்கின்கண் உள்ளதாகிய; வரை-மலை; உரு-அச்சம்.

செல்லையெனவும் கொண்டுள்ளார்கள் என்பது, மேற்காட்டிய மேற்கோள்களால் தெளிவாகின்றது.

மகாமகோபாத்யாய சாமிநாதையரவர்கள் சிலப்பதிகார அரும்பத வகராதியில் 'குமரி தென்பாற் கண்ணதோராறு; இது முக்காலத்தே கடல் கொள்ளப்பட்டது' எனக் கூறிக் குமரிபற்றிய பழங்கொள்கைக்குத் தம்முடம்பாடு தந்துள்ளார்கள்.

ஆனால், அவர்கள் தரும் மற்றொரு குறிப்பு, குமரியே பண்டைத் தமிழகத்தின் தெற்கெல்லை யென்னுங் கொள்கையில் சிறிது ஐயம் விளவிக்கின்றது. 'பஃறுளியாறு குமரியாற்றுக்குத் தெற்கின்கண் ஓடிய ஓராறு' என்பது அவர்கள் எழுதும் மற்றொரு குறிப்பு.

பஃறுளியாறு பாண்டிய நாட்டில் கடல் கோளுக்கு முன் ஓடிய ஓராறு என்பது புலவருலகில் அனைவருக்கும் ஒப்ப முடிந்த செய்தியாகும். முதுகுடுமிப் பெருவழுதியைப் பாடிய நெட்டிமையார்,

'எங்கோ வாழிய குடுமி........
... ...... ..........................
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே' 6
(புறம் 9)

என வாழ்த்துதலால், பஃறுளி யாறு என்பதும் அது பண்டைப் பாண்டி நாட்டது என்பதும் தெளிகின்றோம்.

'பஃறுளி யாற்றுடன்........
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள'
(காடுகாண்காதை. அடி 19, 20)

---

6. கோ-அரசன், குடுமி-பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதி.

என்னும் சிலப்பதிகார அடிகளால், கடல் கோளுக்கு முந்திப் பாண்டிய நாட்டை வளப்படுத்திய அவ்வாறு, பின் கடல் கொள்ளப்பட்டொழிந்தது என்பது தேற்றம்

இவ்வளவில் ஐயரவர்களின் பஃறுளி பற்றிய குறிப்பில் ஐயம் எதுவுமில்லை. ஆனால், குமரியாற்றின் தெற்கின்கண் ஓடியது பஃறுளி என அவர்கள் குறிப்பது சரியானால், குமரி தமிழகத்தின் தெற்கெல்லையென்பது பொருந்துமாறில்லை. குமரி தமிழகத் தென்கரையெல்லையாதலான், குமரிக்குத் தெற்கே பாண்டியனுடை பஃறுளியாறு ஓடிற்றாயின் அந்த யாறும் அது ஓடிய பாண்டியன் நிலமும் தமிழ் வரம்பறுத்த நல்லுலகத்தின் புறம்பே இருந்தனவாகக் கொள்ளல் வேண்டும்.

'வடவேங்கடந் தென்குமரி-யாயிடைத் தமிழ் கூறு நல்லுலகத்து' என்னும் தொல்காப்பியப் பாயிர அடிகள், பழந்தமிழ் நாட்டின் தெற்கின் கடைசி யெல்லை குமரியென ஐயமறக் கூறுகின்றன.

குறுங்கோழியூர் கிழாரும் பண்டைத் தமிழகத்தின் வரம்பை,

> 'தென்குமரி வடபெருங்கல்
> குணகுட கடலா வெல்லை'[7] (புறம்-17)

என்னும் அடிகளாற் கூறலானும், குமரியே தமிழகத்தின் தெற்கெல்லை யென்பது வலிபெறுகின்றது.

குமரி தெற்கின் கடைசி யெல்லையாகவே, தமிழ் நிலமனைத்தும் அதன் வடக்கிருத்தல் முறையாமன்றி, யெனைத்தளவும் தமிழ் நிலப்பரப்பு, குமரியின் தெற்கேயிருந்ததெனக் கூறுதல் அமைவுடைத் தன்று.

7. பெருங்கல்-இமயமலை

பாண்டிய நாட்டழிவு குறிக்கும் சிலப்பதிகார அடிகள், 'பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்து'த் தன் நிலப்பரப்பைக் குமரிக் கோட்டளவுங் கடல்கொள்ள, அக்காலப் பாண்டியன் அதை இழந்தான் என விளக்குவதால், பஃறுளி பாண்டிய நாட்டது என அறிகின்றோம்.

நெட்டிமையாரின் மேற்குறித்த புறப்பாட்டில், முந்நீர்விழவெடுத்த நிலந்தருதிருவினெடியோனாகிய வடிம்பலம்பநின்ற பாண்டியனால் பஃறுளியாறு உண்டாக்கப் பெற்ற செய்தி,

'எங்கோ வாழிய குடுமி!

........................ ......

முந்நீர் விழவி னெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே'[8] (புறம்-9)

என்னும் அடிகளால் குறிக்கப்படுகின்றது. இதனாலும் பஃறுளியாறும், அவ்யாறு பாய்ந்த நிலப்பரப்பும் பாண்டி நாட்டின் பகுதியென்பது தேற்றமாகின்றது.

பாண்டிநாடு தமிழ்கூறு நல்லுலகென்பதில் ஐயமேற்படுவதற்கில்லை. 'தமிழ்கூறு நல்லுலகின் நாற்பெயரெல்லைகளின் அகத்தது வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' எனத் தொல்காப்பியர் தம் செய்யுளியற் சூத்திரத்தில் (79) தெளியக் கூறுதலானும், தமிழகத்தின் அந்நாற் பெயரெல்லைகள் 'வடமலை, குமரி, கடலிரண்டு' எனக் குறுங்கோழியூர் கிழார் தம் புறப்பாட்டிற் கூறுதலானும், 'தமிழ்நிலை பெற்ற தாங்கருமரபிற் ....செழியன்' என நத்தத்தனார் விளக்குதலானும், 'பாண்டியன் (பொதியிற்) குன்றமுண்டாகு மளவும்',

8. முந்நீர்-கடல்; விழவு-விழா.

"தண்டமிழ் வேலித் தமிழ்நாட் டகமெல்லாம்
நின்று நிலைஇப் புகழ் (பூக்கும்)"[9]

எனப் பரிபாடலில் கூறுதலானும்,

'...தமிழ் நாடன்...தென்னவன்
..........................................
..........................................
பொதியப் பொருப்பன் ......
..............கோப்பாண்டியனே'[10]

எனச் சேந்தனார் திவாகரத்தில் தெளிவிப்பதாலும், பாண்டியருடைய தமிழ்நாடு முழுதும் தமிழ்கூறு நல்லுலகத்தின் தென்பகுதியாய்க், குமரியாகிய தமிழகத்தின் தென்பேரெல்லையினகத்து அடங்கியிருத்தல் வேண்டுமென்பது தேற்றமாகிறது.

குமரியெல்லையின் புறத்ததெதுவும் பாண்டியரின் தமிழ் நாடாகாது. இது மறுக்கொணா வுண்மை யென்பது, சோழ நாட்டின் தனிப்பெருந் தமிழ்ப் புலவராய்ச் சோழ மன்னரால் சிறப்புப்பெற்று விளங்கிய கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பரும் பாண்டி நாட்டையே தமிழ் நாடெனச் சுட்டும் குறிப்பாலும் துணியப்படும். தெற்கே சீதையைத் தேடச் செல்லுபவர்க்குக் கூறப்பட்ட எல்லைப் புற விவரங்களைக் குறிக்குங்கால், தென்னாட்டை நன்கறிந்த கிட்கிந்தை மன்னவன் வாயால், கம்பர்,

'......துறைகெழுநீர்ச் சோணாடு கடந்தாற் றெல்லை
..............................................................
பிறக்கமுற்ற மலைநாடு நாடியகன் தமிழ்நாட்டிற்
[பெயர்திர் மாதோ.'

---

9. வேலி-எல்லை; நிலைஇ-நிலைத்து. 10. பொருப்பு-மலை.

'தென்தமிழ்நாட் டகன் பொதியில் திருமுனிவன்
தமிழ்ச்சங்கம் சேர்கிற் பீரேல்
என்றுமவ னுறைவிடமாம்..............காண்டிர்' [11]
(கிட்கிந்தா, நாடவிட்ட படலம். 30, 31)

என்று கூறுகிறார்.

இச்செய்யுளடிகளில் சோணாட்டுக் கம்பர், சோழ, சேர நாடுகளைத் தமிழ்த்தொடர்பு குறியாமல், வாளா சோணாடு மலைநாடு என அவ்வந் நாட்டுப் பெயராற் சுட்டுவதும், பாண்டிநாட்டைப் பாண்டி நாடென்னுமல் 'தமிழ் நாடு' 'தென்தமிழ்நாடு' எனவே சுட்டுவதும், பாண்டிநாடு தமிழ் நாடென்றற்குச் சிறப்புரிமையுடையதென்பது தேர்ந்து தெளியப்பெற்ற செய்தி என்பதை வலியுறுத்தும்.

இனி, பஃறுளியாறு பாண்டி நாட்டின் தெற்கிலுள்ளதொரு பகுதிக்கு வடவெல்லையாக இருந்ததென்று வேனிற்காதையுரையில் அடியார்க்கு நல்லார் கூறுதலான் அறிகின்றோம்.

"அவர் (பாண்டியர்) நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வட வெல்லையாகிய பஃறுளி யென்னு மாற்றிற்கும் குமரி யென்னு மாற்றிற்கும் இடையே, எழுநூற்றுக்காவத வாறுங் கடல்கொண்டொழிதலால், 'தொடியோள் நதியு' மென்னுது, 'குமரியாகிய பௌவ' மென்றார் என்றுணர்க' என்பது அடியார்க்கு நல்லார் எழுதும் உரைக் குறிப்பாகும்.

---

11. துறைகெழுநீர்-துறைகளில் விளங்கும் நீர்; பிறக்கம்-விளக்கம்; பெயர்திர்-சேருங்கள்; பொதியில்-பொதிய மலையில்; திருமுனிவன்-அகத்தியன்.

இதில், பஃறுளியையும் குமரியையும் பாண்டியரின் கடல்கொண்ட தென்பாலி நிலத்தின் இருபேரெல்லையாக ஒரு சேரக் குறித்து, பஃறுளியை, முதலூழியிறுதியிற் கடல்கொண்ட அவர் தம் தென்பாலிமுகத்தின் வட வெல்லையென விளக்கி, குமரியை இடம் குறியாது வாளா கூறியுள்ளார்

இவ்வுரைக் குறிப்பிற் கூறப்படும் குமரி பஃறுளி யாற்றுக்கு வடக்கோடிற்றா? அன்றித் தெற்கோடிற்றா? என்பது ஈண்டு ஆராய்ந்து துணியத் தகும்.

ஐயரவர்கள் தம் அரும்பத வகராதிக் குறிப்பில் 'பஃறுளி குமரிக்குத் தெற்கின்கண் ஓடியதோராறு' என வரைந்ததற்குத் தாம் கண்ட ஆதாரம் யாதென விளக்கி ஞர்களில்லை. அவர்கள் கூறியாங்குக் குமரியின் தெற்கே பஃறுளி யிருந்ததாயின், தெற்கெல்லை பஃறுளியென்னுமல் அதன் வடக்கோடிய குமரியாற்றைக் கூறியது உண் மைக்கு முரணுவதை யெடுத்துக்காட்டி, அவர்கள் கொள் கைக்குரிய ஆதரவை விளக்கி என் ஐயமகற்றுமாறு அவர்களுக்கு யான் கடிதமெழுதி வேண்டினேன்.

வேனிற்காதையில் அடியார்க்கு நல்லார் தரும் உரைக் குறிப்பையும் தம்மால் சிட்டமாகச் சொல்ல முடியாத ஏதோ ஆதாரத்தையும் கொண்டு பஃறுளியைக் குமரிக் குத் தெற்கின்கண் உள்ளதாகத் தாம் அப்போது கருதிய தாயும், ஆனல் அதன் உண்மை ஆராய்ந்து தெளிய வேண் டியதொன்ருகுமெனவும் ஐயரவர்கள் எனக்கு அறிவித் தார்கள்.

அவர்கள் கருத்துக்குரிய பெருமதிப்பை நன்குணர்ந்த யான் பலவாறு துருவி இவ்விரு யாற்றினையும் பற்றிய

பழஞ்செய்யுட்களின் குறிப்புக்களையெல்லாம் ஆராய்ந்து பார்த்தேன். அக்குறிப்புக்களெல்லாம் பஃறுளியைக் குமரியின் தெற்குள்ளதாக யாண்டும் எனைத்தளவும் சுட்டுமாறில்லை. அதற்கு மாறாகக் குமரியின் வடக்கிருந்ததெனக் கொள்ளவைக்குங் குறிப்புக்களே காணப்படுகின்றன.

அடியார்க்கு நல்லார்க்குக் காலத்தான் முந்திய சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர், 'பஃறுளியாறு குமரிப் பக்கத்ததோர் யாறு' எனக் கூறினாரன்றிக் குமரிக்கு எப்பக்கத்தது எனக் குறித்தாரில்லை.

அடியார்க்கு நல்லாரோ, பாண்டிநாட்டின் தென்பாலிமுகத்து வடவெல்லை பஃறுளி' யெனச் சுட்டி, அப்பஃறுளிக்கும் குமரியாற்றுக்கு மிடையே எழுநூற்றுக் காவதவளவுள்ள பாண்டியரின் தமிழ்நாட்டுத் தென்பகுதி முதலூழியிறுதியிற் கடல்கொண்டழிந்தது என்று கூறுகின்றார்.

முதலூழியில் புலவர் புணர் கூட்டுண்ட புகழ்சால் சிறப்பிற் பாண்டியர் தமிழ்வளர்த்த தலைநகரம் கடல்கொள்ளப்பட்ட தென் மதுரை எனக் களவியலுரையில் நக்கீரரும், சிலப்பதிகாரவுரையில் அடியார்க்கு நல்லாரும் மதுரைக் காஞ்சியில் மருதனாரும் கூறுதலால், முதலூழியிறுதியிற் கடல்கொண்டழிந்தது தென்மதுரையுள்ளிட்ட பாண்டிநாட்டின் தென்பகுதியென்பது தேற்றமாகும். களவியலுரையைத் தழுவியே தாம் எழுதுவதாக அடியார்க்கு நல்லாரும் சுட்டுகின்றார்.

இவ்விரு பெரும் புலவருரையாலும், பிற சில குறிப்புக்களாலும் அப்போது அழிந்த நாட்டினளவு ஏழு நூற்றுக் காவதமென்றும், அதன் வடக்கும் தெற்குமாகிய ஈரெல்லைகள் பஃறுளியும் குமரியும் எனவும் அறியலாம்.

பாண்டி நாட்டில் முதலூழி யிறுதியில் அழிந்த தென் பாலி நிலத்தின் வடவெல்லை பஃறுளியென விளக்கும் அடியார்க்கு நல்லார் குறிப்பில், குமரி தெற்கெல்லையென்று கூறப்படாவிடினும், அழிந்த நிலத்தின் மற்றோரெல்லை யெனச் சுட்டப்பட்டுள்ளது.

பஃறுளியும் குமரியும் ஈரெல்லையாக, இடைப்பட்ட நாடு கடல்கொண்டதென்றும், அந்நிலத்தின் வடவெல்லை பஃறுளியென்றும் குறிக்கப்பெறுதலால், அதன் தெற் கெல்லை குமரியென்பது கூறாமலே தேறப்படுமன்றோ?

இதனால், அழிந்த தமிழ் நிலத்தின் வடவெல்லை பஃறுளியும் அதன் தெற்கெல்லை 'தடநீர்க் குமரி வடபெருங் கோடு'ம் என அடியார்க்கு நல்லார் கருதினார் என்பது ஒருதலை. அடியார்க்கு நல்லாரின் இக்கருத்து, தொல்காப் பியப் பாயிரம் தந்த பனம்பாரனார், குறுங்கோழியூர் கிழார், மாங்குடி மருதனார் முதலிய பழம்பெரும் புலவர் களும், இளம்பூரணர் முதலிய பேருரையாசிரியர்களும் குமரியைப் பண்டைத் தமிழ்நாட்டின் தெற்கெல்லையா கவே ஒருபடியாகக் கூறிய கொள்கையோடு பொருந்தி யமையும் செவ்வியும் இங்குச் சிந்திக்கத் தக்கது.

குமரி தென்கடல் கொண்டழிந்த பாண்டிநாட்டின் தென்கடையெல்லையாயின், அவ்வாறழிந்த நிலப்பரப்பைக் குமரி முதல் பஃறுளியாற்றின்காறும் எனக் கூறுவதே முறையாமன்றி, வட பஃறுளி முதல் தென்குமரியாற்றின் வடகரை வரையெனக் கூறுதல் அமையாது; இளங்கோ வடிகளும், அடியார்க்கு நல்லாரும் பஃறுளியை முதலிற் கூறி, அவ்வாற்றுடன் குமரியளவும் கடல்கொண்ட தெனவே சுட்டுதலால், பஃறுளி குமரியின் தெற்கோடிய

தெனக் கொள்ளுவதே பொருத்தமாகும் என வாதித்தல் கூடும். அவ்வாறு கொண்டால், பஃறுளி முதல் குமரிவரை யென்பதே அமையுமாதலின் 'தடநீர்க்குமரி வடபெருங் கோடு' என்பது பொருளற்ற கூற்றாகும். தெற்கிருந்து வந் தழிக்கும் கடல், குமரியின் தென்கரையைத் தொடாமல் வடக்கே மட்டும் அழித்துப்போதல் கருதொணாது. அன் றியும், குமரிக்கு வடகரை கூறுவதாயின் பஃறுளியின் தென்கோடு தொட்டுக் குமரியின் வடகோட்டளவும் எனக் கூறல் வேண்டும். அவ்வாறு கூறாமல் குமரிக்கு மட்டும் வட.கரை குறிக்கச் சிறந்த காரணம் வேண்டும்.

குமரியே தெற்கெல்லையாய்ப் பஃறுளி அதன் வடக்கே பாண்டியர்தம் தமிழ்நாட்டினிடை யொழுகிய யாறுமேல்மட்டும், அடியார்க்கு நல்லார் குமரியின் வடக் கெல்லையை, அழிந்த தமிழ்நிலத்தின் ஓரெல்லையாகக் குறித்தது பொருத்தமாகும்.

குமரியாறே தமிழ்நாட்டின் தெற்கெல்லையாகவே, அதன் தெற்கே நாடிருத்தலும் அது தமிழ்நாடாகாமல் பிறநாடாதலும் இன்றியமையாததாகும். யாறெதற்கும் இருகரையும் இருபுற நிலப்பரப்பும் இருத்தல் வேண்டும். ஒருபுறம் நிலமும் மற்றொருபக்கம் கடலுமாய் யாறொழுகல் கூடாமை வெளிப்படை.

குமரியின் தெற்கில் பிறநாடு உண்மையால் அது தமிழ் நாட்டிற்கும் பிறநாட்டிற்கும் வரம்பறுக்கும் எல்லை யாகக் கூறப்பட்டது என்பதை இளம்பூரணவடிகள் விளக்கியுள்ளார்.

"கடல் கொள்வதன் முன்பு (தமிழ் நாட்டிற்குத் தெற்கே) பிறநாடும் உண்மையின் தெற்கும் எல்லை

கூறப்பட்டது: கிழக்கும் மேற்கும் (கடல்களேயன்றிப்) பிறநாடின்மையின் (எல்லை) கூறப்படாவாயின" என்பதனுல், கடல் கொண்டதெனத் தமிழ் நாட்டிற்கும் அதன் தெற்கே முன் இருந்து அக் கடல்கோளால் அழிந்த பிற நாட்டிற்கும் இடையே அவற்றைப் பிரித்துநின்ற எல்லை குமரியாறு என்பது தெளியப்படுவதோடு, தமிழ் நிலம் அக்குமரியின் வடகரையளவே நின்றது என்பதும் விளக்கமாகும். எனவே முதலூழி யிறுதியில் அழிந்த தமிழ் நாட்டுப் பகுதியின் வடவெல்லை பஃறுளியென்பதும், அதன் தெற்கெல்லை குமரியாற்றின் வடகரையென்பதும் தெளிவாம்.

இவ்வழிவைக் குறிக்கும் சிலப்பதிகாரச் செய்யுளடிகள் அவற்றை யாக்கிய இளங்கோவடிகளின் நோக்கத்தைச் செவ்விதிற் புலப்படுத்தி நிற்கின்றன. அடியார்க்கு நல்லாரும், அவருக்குப் பல நூற்றுண்டுகட்கு முன்பிருந்த இளங்கோவடிகளும் குறிப்பது, அவ்விருவருக்கும் பலப்பல நூற்றுண்டுகட்குமுன் கடல் கோளால் அழிந்தொழிந்த பாண்டியரின் தமிழ்நாட்டுப் பகுதியாகும். அவ்வாறழிந்த நிலத்தளவு கூறுதற்குப் பஃறுளியையும் குமரியையும் இரண்டெல்லையாக அவர் கொண்டனர். அவற்றுள் ஒன்ருகிய பஃறுளி அப்போதழிந்த பாண்டியரின் தென்பாலி நிலத்தின் வடவெல்லை யாதலின், அதன் இருபுறமும் இருந்தது தமிழ் நாடேயாகும். குமரி யாற்றிற்கோ அதன் வடக்கில் தமிழ்நாடும் தெற்கில் பிற நாடுமே யிருந்தன.

அழிந்ததன் வடக்கேயுள்ள பிற்கால தமிழ் நிலத்துப் புலவர், தெற்கே முன் அழிந்த நிலத்தைக் குறிக்குங்கால், தங்களுக்கு அணித்தாயிருந்த பஃறுளி

யைச் சுட்டி, 'அதுமுதல் அதன் தெற்கே தமிழ் நாட்டின் தென்கடை யெல்லையாகிய குமரி வடகரைவரை யிருந்த பழம் பாண்டிநாட்டின் தென்பகுதி நிலம் முதலூழியிறுதி யிற் கடல்கோளால் அழிந்தது' எனக் குறிப்பது இயற்கை யும் பொருத்தமுமாகும்.

குமரியின் வடகரையளவே பாண்டியரின் தமிழ் நாடும் அதன் தென்கரை தொட்டுப் பிறநாடும் இருந்த தனுலும், பிறநாட்டழிவளவு சுட்டுதல் அவர் செய்யுளில் வேண்டப்படாமையாலும், தமிழ் நாட்டின் அழி வொன்றே கூறவந்த அவ்விரு பெரும் புலவரும் குமரி யின் வடகரையை அப்போதழிந்த பாண்டித் தென்னிலப் பகுதிக்குத் தெற்கெல்லையாகச் சுட்டி, அமைவுபெறக் கூறினர் எனத் தெரிகின்றேம்.

இனி, குமரி முனையிலிருந்து இம்மண்ணுலகின் தென் துருவமே ஏழாயிர மைலுக்குட்பட்டிருக்கக் கடல் கொண்ட தமிழ் நாட்டினளவு மட்டுமே எழுநூற்றுக் காவதமென்பது நகைக்கிடனுய் உண்மைக்கு மாறுபடுங் கூற்ருகுமெனத் தற்கால ஆராய்ச்சியாளர் சிலர் கூறுகின் றனர்.

முதலூழியிறுதியில் கடல் கொண்ட தமிழ் நிலமே குமரிமுனையை யடுத்தன்று அதன், தெற்கே நெடுந்தூரத் திலிருந்து இரண்டாமூழியிறுதியில் அழிந்த கபாடபுரத் தைத் தலைநகரமாகக்கொண்ட தமிழ்நாட்டின் பரப்பிற்கும் தெற்கே. பஃறுளி முதற் குமரிவரையிருந்த ஒரு பகுதியே முதலூழியிறுதியில் அழிந்ததென்பது தமிழ்ப் புலவர் கூறும் மரபு. ஆதலின், குமரிமுனை முதற் பஃறுளி வரை யிருந்த நிலத்தளவும், பஃறுளி முதல் அதன் தெற்கே குமரி வரை யிருந்தழிந்த எழுநூற்றுக்காவதத் தமிழ் நிலத்தள

வும், முதலிலழிந்த குமரியின் தெற்கேயிருந்தொழிந்த பிற நாட்டினளவும், அவையனைத்திற்கும் தெற்கே அவற்றைக் கொண்டழித்த தென்கடற் பரப்பளவும் கூட்டின், ஒரு எழுநூறோடு நில்லாது, எண்ணிறந்த பல எழுநூற்றுக் காவதங்கள் எண்ணல் வேண்டும். ஒரு காவதத்தின் அளவு பத்து மைலாகக் கொண்டாலும், இவ்வளவு பலப் பல ஆயிரம் மைல்களாகுமாதலால், இந்நிலங்களெல்லாம் புலவர் படைத்துக் கூறும் புனைந்துரையாவதன்றி, உண்மையாதல் ஒல்லாதென ஆராய்ச்சியாளர் எடுத்துக் காட்டி நகைக்கின்றனர்.

இவ்வாறு கூறுபவர்கள், ஒரு நிலத்தினளவு அதன் நீளத்தையும் அகலத்தையும் பெருக்கிய பரப்பளவாவ தன்றி, அகலத்தை அறவே மறந்து நீளத்தின் தனியள வால் ஒரு நிலத்தைக் குறித்தல் இயற்கையன்று என்பதை மறந்து பேசுவது வியப்பன்றோ! தமிழ்நாட்டில் எழுநூற் றுக் காவதம் அழிந்ததென்றால், அழிந்த அந்த நாட்டுக்கு அகலம் ஒன்றும் இல்லாமல் ஊசிய வடையை விள்ள அதனூடு தோன்றும் இழைபோல ஏழாயிரம் மைல் நீளமட்டுள்ள நிலம் என்பது பொருளாமா? அழிந்தது ஒரு நாடு எனவே, அது அகலமற்ற ஒரு நெடிய கோடு எனக் கொள்ளுதல் அமையாதாகலானும், நாட்டிற்கு நீளத் தோடு அகலமும் வேண்டப்படுமாதலானும், அவ்வீரளவும் பெருக்கிய சதுரத்தளவே நிலத் தளவாமாதலானும், எழு நூற்றுக்காவதம் அல்லது ஏழாயிரம் சதுரமைல் பரப்பே முதற் கடல்கோளால் அழிந்த தமிழ் நிலப் பகுதியின் அளவு எனக் கொள்ளுதலில் வியப்பும் ஐயமும் எழுவதற் கில்லை.

ஏறத்தாழ ஒரு மாவட்ட அளவுள்ள சேரர் மலைநாட் டின் ஒரு பகுதியான தற்காலத் திருவிதாங்கூர் வரைப்பு

மட்டுமே 6000 சதுர மைலாகிறது என அறியும் நாம், சிலப்பதிகாரம் குறிக்கும் ஏழாயிரம் சதுரமைல் அளவுள்ள ஒரு தமிழ் நிலப்பகுதி முதலூழியிறுதியிற் கடல் கொள்ளப்பட்டு அழிந்ததுடன், அதன் பிறகே மீண்டும் மற்றொரு கடல்கோளால் முல்லைக்கலி குறிக்கும் பாண்டியரின் இடையூழிக் கபாடபுர நிலப்பரப்பும் அழிவுற்றது என்பதில், அளவொன்றே கொண்டு அதனை மறுத்தற்குரிய தடையெதுவும் காணுதற்கில்லை.

முதலூழியில் கடல்கோளால் அளவறியாத பிற தென்னாட்டுடன் அழிந்த தமிழ் நிலப்பரப்பு, தெற்கே குமரியின் வடகரை முதல் அதன் வடக்கே பஃறுளி யாற்றளவும் எழுநூற்றுக் காவதம் அல்லது ஏழாயிரம் சதுரமைல் அளவு என்பதும், அந்நிலத்தின் கிழக்கும் மேற்கும் முன் கடல்களே எல்லையாயிருந்தன என்பதும், அழியுமுன் குமரிக்குத் தெற்கே தமிழ் வழங்காத பிற நாடேயிருந்த தென்பதும், அம்முதற் கடல்கோளால் அழிந்தவை அப்பிற நாடும் பாண்டியரின் தமிழ்நாட்டில் குமரி முதல் பஃறுளி வரையுள்ள தென்பகுதி மட்டுமேயென்பதும், அடியார்க்கு நல்லாருரையாலும் மற்றும் பழம் புலவர்கள் கூறும் செய்திகளாலும் ஒருங்கே தெளிந்து துணியப்படும் உண்மைகளாகும்.

முதலில் அழிந்தது பாண்டியர் நாடென்னுதை அவர் நாட்டுத் தென்பாலிமுகம் எனப்படுதலான், அது அக்காலப் பாண்டி நாட்டின் தென்பகுதி நிலத்தையே சுட்டுவது வெளிப்படை. அந்நிலமிழந்த பாண்டியர் இரண்டாம் ஊழியில் அதன் வடக்குள்ளதாய் அழியாதெஞ்சிய தம் நாட்டுள், கபாடபுரத்தைத் தலைநகராக்கிக் கொண்டு அதிற் புலவரைக் கூட்டித் தமிழ் பேணும் தங்கள் அறமரபு போற்றி வந்தார் என்பது, நக்கீரர் களவியலுரையா

லும், அடியார்க்கு நல்லாருரைக் குறிப்பாலும் கூறப்படு கின்றது.

கபாடபுரமே பாண்டியரின் இடையூழித் தலைநகர மென்பது, மிகப் பழமை கூறப்படும் வடமொழியில் ஆதி கவியாகிய வான்மீகர், சீதையைத் தெற்கே தேடவிடுத்த தன் தானைத் தலைவருக்குச் சுக்கிரீவன் சுட்டிய எல்லைக் குறிப்பாக விளக்கும் வடமொழி இராமாயணப் பகுதியால் வலிபெறுகின்றது.

அசோகனுக்கு முன் பாடலிபுரத்தில் கி. மு. நான்காம் நூற்றாண்டில் ஆண்ட சந்திரகுப்த சக்கரவர்த்தியின் அமைச்சனாகிய சாணக்கியன் இயற்றிய அர்த்த சாத்திரத் தில் முத்தைக் 'கபாடகம்' எனச் சுட்டும் குறிப்பாலும் இவ்வுண்மை தெளியப்படும்.

பொருள்களுக்குச் சுவையுண்டாகுமிடங்களால் பெய ரமைவது இயல்பு. மாயூரத்தின் ஒரு பகுதியாகிய கொரு நாட்டில் நெய்யப்படும் சேலைகள் 'கொருநாடு' எனப்படுத லும், இராயபுரியிற் செய்யப்படும் சருக்கரை 'இராயபுரி' யெனப்படுதலும், மாம்பழங்கள் 'சேலம்', 'பங்களூர்' என அவையவை உற்பத்தியாகும் ஊர்ப் பெயர்கொண்டு வழங் கப்படுதலும், இன்ன பிறவும் இவ்வுண்மையை விளக்கும்.

பழங்காலத்துப் பாண்டியரின் தென்கடலொன்றி லன்றி யாண்டும் முத்துண்டானதில்லை என்பது உலக சரிதம் கூறும் உண்மையாகும். அப்பாண்டியரின் தலைநக ரான கபாடபுரத்திலிருந்து பாடலிபுரத்தில் வந்து விற்கப் பட்ட தமிழ்க் கடல்படு பொருளாகிய முத்துக்குக் கடற் றொடர்பே யில்லாத ஆரியரின் நடுநாட்டு வடமொழியில் முன் பேரில்லாமையால் அதைத் தங்கள் நாட்டுக்குமுதலில்

அனுப்பிய பாண்டியரின் பேரூராகிய கபாடபுரத்தால் கபாடகம் எனப் பெயரிட்டது வெளிப்படை. பிறகு நாளடைவில் அதன் இயற்கைத் தமிழ்ப் பெயர் முத்து என அறிந்தபின் அப்பெயரைத் திரித்து முக்தா எனத் தங்கள் மொழியில் ஆரியர் பெயரிட்டுக்கொண்டனர் என்பது, சாணக்கியன் நூலில் அப்பெயர் கூறப்படாமல் முத்தைக் கபாடகம் என்றே கூறுதலானும், சாணக்கியனுக்குப் பிற்கால நூல்களிற் காணப்படுவது போல அதற்கு முற்பட்ட வடமொழி நூல்களில் முக்தா எனும் பெயர் பெருவழக்கில் காணப்படாமையானும் இவ்வுண்மை விளக்கமாகும்.

கபாடபுரமும் அதைச் சூழ்ந்த பாண்டியநாடும் இரண்டாமூழி யிறுதியில் மீண்டும் ஒரு கடல் கோளால் அழிந்ததென்பதும், அதன் பிறகே குமரி முதல் சோணாட்டளவுள்ள தற்காலப் பாண்டி நாட்டை யமைத்து வையைக் கரையில் தமிழ்கெழு கூடல் எனும் மதுரையைத் தலைநகராக்கிப் பாண்டியர் ஆண்டு வந்தனர் என்பதும், யாவரும் அறிந்த செய்தியாகும். இச்செய்தியே முற்காட்டிய முல்லைக்கலிப் பாட்டுக் குறிப்பாகும்.

இதுகாறும் கூறியவற்றால், முதற் கடல்கோளுக்கு முன்னிருந்த பழந்தமிழ் நாட்டின் தெற்கெல்லை குமரியாறென்பதும், அக்குமரியே பிற தென்னாட்டைத் தமிழ் நாட்டிலிருந்து பிரித்த பேரெல்லை யென்பதும், பஃறுளி முதலிய பிற தமிழ் நிலத்தடங்கிய பகுதியனைத்தும் அழிந்த குமரியாற்றின் வடக்கே யிருந்தனவேயாம் என்பதும், ஒருதலையாத் துணியப்படும் உண்மைகளாகும்

# நற்றமிழ்

'தமிழ்' இயல், இசை, நாடகம் என மூவகைப் படும். இயற்றமிழும், 'செய்யுள் மொழி' அல்லது புலவர் (இலக்கியத்) தமிழ் எனவும், 'தேமொழி' அல்லது மக்களின் பேச்சுத் தமிழ் எனவும், இரு திறப்படும். செய்யுள் என்பது பாட்டு மட்டும் அன்று. சிறந்த கருத்துக்களை விளக்க அறிஞர் கையாளும் பாட்டு, உரை, பிசி, மூதுரை போன்ற நடை வகை அனைத்தும் செய்யுளில் அடங்கும். அதை (செய்யுளை) இலக்கியம் என்பது, இக்கால வழக்கு. பேசுந் தமிழிம் கற்றூர் பேச்சும் கல்லார் பேச்சும் வேறுபடும். புலவர் பேச்சு, பிழையின்றித் தமிழக முழுதும் மாறாத சொற்றொடர் நடையில் என்றும், எங்கும் நின்று நிலவும் நல்ல தமிழாகும். கல்லாப் பொதுமக்கள் பேசும் தமிழ், இடத்தாலும், காலத்தாலும் வேறுபடுவதோடு, உருச் சிதைந்தும், ஒலி குலைந்தும், வழு மலிந்தும், மரபு இறந்தும் வரும் சொற்களால் அவ்வவ் வகுப்பினர் அல்லார்க்கு மயக்கமும், நகையும் பயப்பதாகும். நாகரிக மக்கள்

அதைக் கொச்சைப் பேச்செனக் கேட்கவும் கூசுவர். பேசும் நோக்கம், கேட்பவர்க்குப் பேசுவோர் கருத்தை எளிதில் தெளிவாக விளக்குவதே. ஆதலின் உருத் திரிந்து பொருள் தெளியா அருமொழிகள் மலிந்து, நாடு தோறும் வேறுபட நடப்பது நல்ல தமிழ் ஆகாது. கற்ற வர் பேசுவதும் எழுதுவதும் பிழையற்ற தமிழாதலால், அதுவே நல்ல தமிழாகக் கொள்ளத்தகும். நல்ல தமிழைக் கட்டளைத் தமிழ் என்னலாம். தமிழில் 'கட்டளை' என்பது வரம்பு இகவா யாப்புறவுற்ற நடைவகை அனைத்துக்கும் பொதுப்பெயர். கட்டளைக்கலி, கட்டளைவெண்பா, கட்டளைவஞ்சி என அளவறுத்த அடி தளைகளால் ஆய வற்றைக் கூறுவது தமிழ் மரபு. அம்முறையில் வழுவற்ற சொற்களால் மொழி இயல் முடிபு பிழையாமல் திரிபற்ற தெளிவுடைய நடையைக் கட்டளைத் தமிழ் (Standard Tamil) என்னலாம்.

கட்டளை அல்லது நல்ல தமிழ் நடைக்கு, எளிதில் பொருள் விளங்கும் தெளிவு இன்றியமையாதது. இயல் வழக்கில்லா அருஞ் சொற்களும் பொருள் பல குறித்து மருளவைக்கும் பொதுச் சொற்களும் விரவும் நடையைச் செய்யுள் வழக்கில் ஒருவரும் விரும்பார். எளிமையும், தெளிவும் எழுத்திலும், பேச்சிலும் எம்மொழி நடைக் கும் இனிமையும, எழிலும் என்றும் உதவும் என்பது எல்லார்க்கும் உடன்பாடு.

"எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு."[12] (திருக்குறள் 424)

என்பது ஆன்றதமிழ்ச் சான்றோர் கண்ட உண்மை. எனினும, எளிமையும் இனிமையும்உடைய தமிழ், கல்லார்

12. எண்பொருளவாக-எளியபொருளினவாம்படி; செல-மனங்கொள்ள.

வழக்கில் சொல்லும், பொருளும் எல்லாம் சிதைந்து உருவமும், முடியும், மரபும், அழிந்து கொச்சை மாந்தரின் எச்சிலாய் இயங்கும் பேச்சு எனக் கொள்வதும் தவறு. எளிமையை இகழ்ந்து அருகிய வழக்கும், கருகிய கருத்தும், அமைந்த முறுகிய கடுஞ் சொல்லை அடுக்கித் தொடுக்கும் இடைக்காலப் பண்டிதர் நடை பயன் அற்றது. ஆனல், வழுமலிந்து முடிபு ஒவ்வாக் கீழ்மக்கள் கொச்சைக் குழறலை மொழிநலம் விரும்புவோர் நல்ல தமிழெனக் கொள்ள இசையார். மாரிக்காலத்து நீரில் கத்தும் தவளைகள் போல, சந்தையில் — தெருவில் சனங்கள் பேசும் சழக்குரை எல்லாம் தமிழெனக்கொண்டால் அழகிய எழுத்தும், ஐந்து இலக்கணமும் நிரம்பிப் பழுத்த செந்தமிழ் பாழாய்ப் போய்விடும். பல பத்திரிகை வித்தகர்கள் 'செலாவணி' செய்யும் புதிய மொழி நடை, கால் முடமும், உடல் நோயும் காட்டுகிறது. அது போதாமல், இலக்கணத்தை எரித்து விட்டு, ஊரார் பேசுகிறபடி எழுதுவதே நல்லதமிழ் என்று சிலர் கூசாமல் கூறவும் கேட்கிறோம். இவர்கள் 'யார் பேசுகிறபடி எழுத வேண்டும்?' என விளக்குகிறார்கள் இல்லை. ஊர் தோறும் பேச்சு வேறுபடுகிறதே! ஓர் ஊரிலும் வகுப்புவாரி, தொழில் வாரி, இனவாரியாக உரு அழிந்து பல்வகை மொழிகள் உலாவுகின்றனவே. ஒலி உருவும், வரி வடிவும் அற வேறுபட்ட எழுத்துக்களின் இயைபும், பயனும் அறியாமல், எல்லாம் குழம்பிக் கதம்ப நடை தொடுப்பதைக் காணுகிறோம். வல்லின 'ற'கரத்தையும், சிறப்பு 'ழ'கரத்தையும் நாடாமல் நாடு அகற்றி, 'ர'கர 'ள'கரங்கட்கே ஊராண்மை தருபவர் பலர், ஆவர். அதன்மேல், 'ழ'கரத்தைச் சுட்டு, 'ய'கரமாய்ச் சமைத்து விற்போர் சென்னையிலும், பிற பல நகரங்களிலும் புதுமொழிப் பண்டமாற்றுப் புரிந்து வருகின்றனர்.

பழத்தைப் 'பயம்' எனவும், கிழவி என்பதைக் 'கியவி' எனவும், பழக்க வழக்கங்களைப் 'பயக்க வயக்கம்' எனவும் வழு உணர்ச்சியும், நாணும் சிறிதுமின்றி வாரி வழங்கக் கேட்கின்றோம். 'வந்துக்கினு'... 'போயிக்கினு'...எனக் 'கினு' எனும் புதிய அனுவினைப் படைத்துக் கூட்டி நவீன அகத்திய குலத்தார் தமிழைக் கொடுமைப்படுத்து கின்றனர். இப்பேச்சு அங்காடிகளில் யார் கூறும் சொற் சரக்கைக் கொள்வதெனப் புதுமொழித் தரகர் துணி வரோ? அறியோம். அவற்றின் தராதரத்தை மதித்து அளந்து முடிவு கட்டும் கட்டளை யாதோ? ஒரு வீட்டி லேயே தலைமக்கள், பணியாட்கள், இளம் சிறுர், முதி யோர்கள் பேச்சுக்கள் வேறுபடும். யார் பேச்சைக் கட்டளை ஆக்குவது? வரம்பின்றி வழுமலியும் பேச்சுக்கு நிலையில்லை; மதிப்பில்லை.

நாகரிக உலகில் எந்த மொழியிலும் வழு மலியப் பேசும் வகுப்பார் உண்டு. ஆனால் அவர் பேச்சு எதுவும் எழுத்தாளர் கொள்ளமாட்டார். 'வலைச்சியர் புலைமொழி' (Billings Gate) போன்ற கொச்சை மொழிகளை மேல்நாட் டார் இகழ்ந்து விலக்குவதை யாவரும் அறிவர். அம் மொழிமரபு அறிந்தோ அறியாமலோ, 'கேட்பார் கேட்ப தைக் கேட்டபடி கொள்வதே தமிழ் வளர்ப்பதாகும்' எனத் துணியும் புதியர் தமிழ்ப்புலமையை வியப்பதா, நகைப்பதா, என்பதைத் தமிழ் மக்களே தேர்ந்து தெளி யட்டும்.

இனி, நல்ல தமிழ் இன்னது என்பதை அறுதியிட்டு வரம்பு கட்டல் எளிதன்று. அழகுக்கு எல்லை இல்லாதது போலவே, நடை நலமும் மதிப்பவர் மனப்பாங்கையும், சுவைத் திறத்தையும், பொறுத்துப் பலவகைப் படலாம்.

சிலர் ஓசையை விரும்பலாம்; பிறர் எதுகை, மோனை, முரண் தொடைகளை வியக்கலாம்; மற்றவர் சொல் ஒழுக்கே நல்லது என நினைக்கலாம்; பலர் பல அணி புனைவதைப் பாராட்டலாம். இன்னும் இறுக்கம், நெகிழ்வு, செறிவு, இளக்கம், திட்பம், எளிமை, ஒலி நலம், ஒழுக்கு—இவை போன்ற பண்புகளால் மொழி—அழகு பல திறப்படுவது இயல்பு. இவற்றுள் இதுதான் நல்ல நடை எனச் சொல்லி முடிவுகட்ட வல்லார் இல்லை. வண்ணம், வடிவு, உறுப்பு, அமைதி ஒவ்வொன்றும் அழகுக்கு வேண்டுவதே. ஒன்றை விலக்கி மற்றவை போதும் எனல் அமையாது. அதுபோல, எளிமை, தெளிவு, இனிமை, ஒலி, ஒழுக்கு—எல்லாம் நல்ல நடைக்கு வேண்டப்படும். அவற்றின் அளவு, அமைதி பலர் பலவாறு கொள்ளலாம். அதனால் நல்ல நடையும் பலவகைப் படலாம்.

என்றாலும், நடை நலமும், சுவையும் பலதிறப்படினும் நல்ல தமிழுக்கு ஓர் எல்லை உண்டு. மொழி நடை நல்லதெனக் கொள்வதற்கு யாவரும் உடன்படும் சில பொது இயல்பும் வரம்பும் வேண்டும். அவற்றுள் சில எவ்வகைச் செவ்விய நடைக்கும் இன்றியமையாதன. கருதும் பொருளை மருளற விளக்கும் தெளிவு நடை எதற்கும் பொதுஉடைமையாகும். சொற்களின் உருவமும் முடிவும் பிறழாது அமைதலும் பேணல் வேண்டும். மரூஉச் சொல்லாட்சியை மறுப்பார் இல்லை. ஆன்றோர் வழக்கும், அறிஞர் ஆட்சியும் பெற்றவை அனைத்தும் நற்றமிழ் ஆகும். மற்றிடத்து எல்லாம் சொல் உருவோடு பொருள் முடிபின் அடைவும் போற்றுதலும் வேண்டும். கொச்சை வழக்கு எதுவும் கொள்ளல் கூடா. எடுத்துக் காட்டினும், நாடக வழக்கினும் இயைபும், தகுதியும் நோக்கி, இழி வழக்கு ஒழித்து, ஏற்பன ஏற்புழி அருகி வழங்கல் பிழை

ஆகாது. அங்கும் அதனைப் பெருவழக்காக்கும் பிழையைக் காத்தல் யாவர்க்கும் கடனாம். யாண்டும் ஐயமும் திரிபும் அகற்றல் வேண்டும். சொற்கள் தொடரும் இடங்களில், ஓசையும் ஒழுக்கும் மாசுபடாமல், மொழி இயலடைவு முரண்படாமல் ஓம்புதல் வேண்டும். அருமைப் புணரியல் தமிழில் இல்லை. ஆரியம் போன்ற பிறபல மொழிகளில் செயற்கை விதிகள் திகைக்கச் செய்யும். தமிழில், ஒலியியல் நிலையே உதவு கோலாகப் புணர்ச்சி விதிகள் அமைவதை அறியலாம். வல்லொற்று இரட்டலும், நிற்கும் மெய்மேல் வரும் உயிர் ஏறலும் எல்லா மாந்தரும் கல்லாது செல்லுவர். இயற்கையோடு முரணி வெறுக்க விட்டிசைக்கும் எழுத்துப் புணர்ச்சியும் பிரிப்பும் வழுவாம். தமிழ் மொழி இயல்பைச் சிதைக்கும் வழக்கை எங்கும் கொள்ளாது தள்ளல் வேண்டும். இவை அனைத்தும் நல்ல தமிழ் நடைக்கு இன்றியமையாதன.

அன்றியும் தமிழில் பிறமொழிச் சொல் எதுவும் புகல் ஆகாது எனப் புகல்வாரும் உளர். இது மொழி வளர்ச்சிக்குத் தடையாகும். புதிய கருத்துக்களும், பொருள்களும் சுட்டத் தமிழில் பிறமொழிச் சொற்களை எடுத்தாளுவது தவறாகாது. ஆனால் அச்சொற்களைத் தமிழ் இயல்புக்கு இயையச் செப்பனிட்டுச் சேர்த்தல் வேண்டும். ஆன்ற பழந்தமிழ்ச்சான்றோர் இவ்வுண்மை அறிந்தே வடசொல், திசைச் சொற்களை விலக்காமல் தமிழில் கொண்டு வழங்கத் தக்க இயல்முறைகளைத் தம் மொழி நூலில் வகுத்து விளக்கியுள்ளனர். இந்நன்முறையை இகழ்ந்து இக்காலப் பெரியார் சிலர் தமிழ் மொழி மரபு—சொல்லாக்க நல்லியல்புகளுக்கு முழுதும் முரணாகப் பிறமொழிச் சொற்களைத் தமிழுக்கு இயையா அவ்வம் மொழிச் சிறப்பெழுத்து ஒலிமுறைகளுடன் கூட்டித் தமிழைப் பாழ்

படுத்துகின்றனர். புதுமையைப் புறக்கணியாமல் விரும்பும் மேல்நாட்டவரும் தத்தம் மொழியில் பிற சொற்களை ஏற்றபடி மாற்றியே ஆளும் இயல்பை அறிகின்றோம். மெய் முதலாகத் தொடங்குவதும், இணையாப் பல மெய்கள் தொடருவதும், தமிழில் இல்லா ஒலி இயல்புகளை உடையதுமான பிறமொழிச் சொற்களை அப்படியே கொண்டு வழங்குவதும் தமிழ் இயல்பையே மாற்றிவிடுமாதலால் தவறாகும். அக்கேடு புகுத்தாமல் தமிழைப் பேண வேண்டும்.

இனி இவ்வழுக்களை விலக்குவதோடு, இனிமையும் சுவையும் இலகுதற்கான எழில்வளம் ஊட்டிப் பல்லாற்றானும் நல்ல தமிழ் நடையை வளர்ப்பது எல்லா வகையிலும் ஏத்துதற்குரியது. பழைய உரைகளில், திட்பமும் செறிவும் திகழும் தமிழ்நடை பரிமேலழகரின் தனிப் பெரும் சிறப்பாம். ஒலியும் ஒழுக்கும் அடியார்க்கு நல்லார் உரையில் காணலாம். தற்காலப் புலவருள், பாட்டிலும் உரையிலும் பலப் பலர் எளிமையொடு இனிமையை இயைத்து எழுதுகின்றனர். காலம் சென்ற கவியரசர் பாரதியாரின் பாட்டும், உரையும் எளிமையில் இனிமைக்கு எடுத்துக்காட்டாய் இலங்கக் காண்போம். அவர் பாக்களின் பெருமையைப் பாராட்டாதவர் தமிழ் மணம் அறியார். ஆனால் அவரது உரைநடை நலத்தை உணர்ந்து சுவைப்பவர் மிகச் சிலராவர். அவர்க்குப்பின் பாரதிதாசன் போல்வார் பாக்களும், திரு. வி. கலியாணசுந்தரனார் போல்வார் உரைநடைகளும் படிப்பார் உள்ளத்தைக் கவருந்திறனை யாவரும் அறிவர்.

நல்ல தமிழ் நடை வல்ல புலவருள் சிலரை மட்டும் சுட்டிக்காட்டினேன். இவண் குறித்தற்குரியார் இன்னும் பலர் உளர் என்பதை யாவரும் அறிவர்.

கட்டளைத் தமிழ் அட்டவணையைத் தெற்றென விளக்கி முற்றுப்புள்ளியிட நான் முன்வரவில்லை. கொடுத்த சிறு நேரத்தில் சில சொல்லிப் பல நினைக்கத் தூண்டுவதே என் குறிக்கோள்.* இயல்வதும் அதுவே.

---

* இது திருச்சி வானொலி நிலையத்தில் 1--5--1947 அன்று ஒலிபரப்பப் பெற்றது.

# தமிழும் தமிழரும்

தமிழர் தாமே புறக்கணித்துப் பொருளாக்கொள்ளாத தமிழ் தற்காலம் நாகரிகப் பிறமொழியாளரால் எள்ளப்படின் இழுக்காமோ? "தற்செய்யார்", இனந்தாழ நிலை மாற்ற 'அறிவறிந்து ஆள்வினை' மேவாத் தமிழரிடைத் தளராது தமிழணங்கு தழைவதெங்ஙன்? உள்ளமிலார், உடைமையிலார், 'வள்ளிய மென்னுஞ் செருக்கு' மில்லாத் தமிழ்ப் பெரியார் பலர்தாம், இந்நாள் தம் இழிவைத் தமிழ்க்கேற்றி அதனழிவு சூழுகின்றார். அறிவு ஏற்றம் அடைதற்கும், தமிழ் மொழியே இடையூறென்று இயம்புகின்றார். மேனாட்டார் பயின்றுவரும் பௌதிக நற் பல்கலையும், இறைமை நலத் துறைவகையும் தமிழ்மொழியாற் பெறவொணாவெனப் பேசுகின்றார். இந்தியர் ஓரினக் குடிமை யுணர்வுற்று, ஒற்றுமைபெற்று உயர்தற்குத் தமிழ் வளர்த்தல் தடையெனவும் முழங்குகின்றார். மடிமேல் தமிழர் மயக்கத்தால் தம் முன்னோர் குன்றாதகுடி விளக்க மறந்து, தங்கள் அடிமைநிலைத் தளர்வால் தம் உரம் அற்று ஆழ்ந்து உறங்குபவர் தமக்கிரங்காத அவர் கூற்றைப் பொருட்படுத்தல் தவறுமன்றோ?

'குமரி முதற் பனிவரைமட்டுறுபவர்கள் ஒரு மொழி கொண்டன்றி ஒன்ருகார் என்பதற்கு நியாயமுண்டோ? பல மொழிகள் நிலவு தனிப் பெருநாடு உலகில் ஒருமையுடன் பெருமையுற்று உயரக் காண்போம். ஐக்கியநாடுகள் என்னும் அழகிய பெயர்படைத்து நாகரிக உலகத்தின் நாயகமாய்த் தலை நிற்குந் தனியரசில், பல மொழிகளுடையாரே குடிமையாள்பவர். மேலைப் புத்துலகத்தின் வடதலையிற் கானட நன்னுட்டினிலும், ஆங்கிலம் பறங்கியுமென்றிரு மொழிகளும் மருவி வளர்ந்தியங்கக் காண்போம். வானவர் நாடென வழங்குஞ் சீனர் பழம் பெருநாட்டில் தொன்றுதொட்டு இன்றளவும் பல்வேறு நல்மொழிகள் பயிலுகின்ருர். இன்ன பெரு நாடனைத்தும், நிலப் பரப்புங் குடிப் பெருக்கும் இந்திய நாடதற்கு எனைத்துங் குறையாமை கொண்டுடையவேனும், ஒற்றுமை நல்லுணர்வு நிதி பல்வேறு மொழிபயில்வார் நிதம் வளர்க்க, வளம் பெருகிச் செழுமைசெறி செருக்குடனே நிலவக் காண்போம். எனவே, ஒருமையரசின் உயர்வுக்குத் தமிழாட்சி இந்நாட்டில் தடைதரற்கு நியாயமில்லை.

இனி மேனுட்டிற் பௌதிகமும் புதுக்கலைகள் பலவும் எழுந் துலவு முன்னர் நிலவி நின்ற மொழிகளை, அம்மொழியுடையார் புத்தறிவுப் பெருநறவுக்கு உதவாத கலன்களெனப் புறக்கணித்துப் புது மொழிகள் தேடி அவர் வளர்க்கவில்லை. அறிவு உரிமைக்கு உறைவிடமாய்க் கருதிவரும் இக்கால ஆங்கிலமும், செர்மனியம் பறங்கியெனும் மொழிகளும், புதுக்கலையும், புத்தறிவும் வளர்ந்து அவற்றை வளஞ்செயுமுன், இலக்கணமும் இலக்கியமுமில்லாத இளஞ்சிறிய குழவிமொழி நிலையில் நெடுங்காலம் அவை நிலவியுளவாம். புத்தறிவை நத்திய

அம்மொழியுடையார் தம்மொழியில் அறிவுதரும் புதுக் கலைகள் புகுத்தி நலம்படைத்த தல்லால், குறை மொழி மேற் கூறிவைத்துத் தம்மிழிவு பேணிபழி பூண்டாரல்லர். அவர் மொழிபோலல்லாமல், அறிவெட்டாத் தொல்லரிய பழமையொடு ஆக்கவளம் பெற்றிலங்குந் தமிழினிலே புதுக்கலைகள் தவழ்ந்திலகி வீறுபெறத் தமிழ் நலமுங் கலைவளமு மொருங்கோங்குந் தகையவாகும். ஓர்ந்துணரார் இதை மறுப்பர்; உண்மை இஃதே!

நாட்டின் நலம் வளர்ப்பதற்கு நாட்டினர் எவ் வகுப்பினரும் உயர்தல்வேண்டும். மொழி வளப்பம் இல்லார்பால் அறிவாக்கம் உயர்வதில்லை. அகன்றாழ்ந்த அறிவொட்பம், ஆன்ற அறநூற்றிட்பம், மாண்ட மனையாக்கமொடு வேண்டும் அரசேற்றமும் உற்று மக்கள் பெருமை பெறுவதற்கெல்லாம் முன்னர் முதலுதவுவது மொழி வளப்பம். குதலை மொழி மிழற்றிய தங்குலமொழிபோல் அறிவு, திரு, ஆற்றல் வளம் பெருக்குதற்கு இதனில் பிறிதில்லையாகும். தொல்வளமும் இலக்கண நற்செவ்விகளும் அமையாத சிறுமொழிகளாமேனும், தம்மொழியே மதிநுட்பம் நூலாக்கம் சான்றாண்மை சமுதாய வெறுக்கையெலாம் தழைவிக்கத் தக்கதாகும். நாகரிகமென் றெழுந்தது, அன்றுள செந்தமிழுடையார் தளர்வடையின், அவரியலின் சோர்வல்லால் மொழியிடையோர் குறையுமில்லை. செந்தமிழ்த் தாயும் அவளீன்ற சில குதலைமொழி மாருமன்றி நம் நாட்டுள மொழிகளனைத்தும் வடபெரு மொழியின் வழிவந்த தொடர்புடைய. அவை பயில்வார் பெரும்பாலும் பிணக்கற்ற மொழி யொருமையியல் இணக்கம் பேணற் பாலர். தமிழ் உழுவற்றொல்லுரிமை வடமொழியே வழுத்தி நிற்கும். குறையாத வளமுடைய வட சொல்லும், பிழையாத கன்னிமையார் தமிழ்ச் சொல்லும்

எல்லையறு தொல்லை முதல் இன்றளவு மருவியொன்றி நிலவும் நமது இந்திய நாட்டிலேதான் மொழி யீசல்போற் பறந்து தூற்றுமிழி வேக்கம் வந்ததின்று. மொழிபேணார் முன்னேற்ற வேகநல முணரொணாதார். நாட்டினலம் நமதாக்கம் இரண்டில்லை, ஒன்றேயாகும். பெருநலம் நம்மவர் வேண்டின் தெருவெல்லாந் தமிழ் முழக்கஞ் செய்ய வேண்டும்.

---

# தமிழர் கடவுட் கொள்கை

பண்டைத் தமிழர் கொண்ட கடவுட் கொள்கை யாது? தற்காலத் தமிழக வழிபாட்டு முறைகள் பெரும் பாலும் ஆரியர் கொள்கைகளுடன் தொடர்புடையனவா கவே தோன்றுகின்றன. இனம், மனம், நடையுடை, பழக்க வழக்கங்களில் எல்லாம் ஆரியரின் வேறுபட்ட தமிழருக்குத் தம் பழைய வழிபாட்டு முறையும் வேறாக இருந்திருக்க வேண்டும் என எதிர்பார்த்தல் இயல்பாகும். உலகில் உடையின்றி நடமாடும் மனித இனத்தாரும் தெய்வம் தொழுபவரா யிருக்க, தொல்காப்பியரும், திருக்குற ளும் எழுந்த மொழியுடைய தமிழர்க்கு மட்டும் கடவுள் வழிபாடறியாப் பழி சுமத்தல் மனித இயல்புக்கும் அறிவு வரலாற்றுக்கும் பொருந்தாது. ஆதலால், ஆரியர் தமிழ ரொடு பழகுமுன்னே தமிழகத்தில் வழங்கிய கடவுட் கொள்கையாதென ஆராய்தல் அவசியமும், அறமும் ஆகும்.

வேத கால ஆரியர் இந்திரன், சந்திரன், வருணன், வாயு போன்ற சிறு தெய்வங்களையும் பஞ்சபூதங்களையும் வணங்கினர் என்பதவர் வேதங்களே ஓதுகின்றன.

பின்னரே அவர்களிடம் மும்மூர்த்திகளும் முப்பத்து முக்கோடி தேவர்களும் வழிபாடுபெறலாயினர். ஒரு பிரமக் கோட்பாடும் வரலாயிற்று. அதுபோல வட ஆரியர் தொடர்புபெறுமுன் தென் தமிழ்நாட்டு மக்கள் கொண்டு கையாண்ட கடவுட் கொள்கை என்ன? என்று தெரிய முயல்வது தமிழருக்கு அறிவறமும், கடமையுமாகும்.

சங்ககாலப் பழம் புலவர் தரும் பல பாட்டுத் திரட்டான தொகை நூல்கள் அனைத்துக்கும் காலத்தால் முந்தியதும் அப்புலவர் எடுத்தாளும் பெருமையுடையதும் வள்ளுவர் திருக்குறள் என்பதை வள்ளுவர் வரலாறு பற்றிய என் ஆராய்ச்சிகளில் முப்பதாண்டுகளுக்குமுன்னரே* வற்புறுத்தி விளக்கி உள்ளேன். சற்றேறக்குறைய இருபத்தைந்து நூற்றாண்டுகளுக்கு முன் எழுந்த திருக்குறளில் உலகோடுயிர்களுக் கெல்லாம் முதலாம் ஒரு தெய்வக் கொள்கை விளக்கப் பெறுவதைக் காணுகிறோம். அனைத்துலக மொழிகளிலும் நெடுங்கணக்கு என்ற எழுத்துக்களின் ஒலியும் வரிசை முறையும் வேறுபடினும், அவை அனைத்துக்கும் முதலாவது "அ"கரமே ஆகக் காண்போம். அதுபோலப் பல்வேறுபட்ட உலகு உயிர்கள் அனைத்துக்கும் முதலாவதொரு தெய்வம் உண்டென்பதும் அது உணர்வற்ற அறிவு மயமாம் என்பதும், அதுவே அற ஆழி ஆமென்பதும், திருக்குறள் முதலதிகாரத்திலேயே கூறப்படுகின்றன, பூத வழிபாடுகளும், பிற சிறு தெய்வ வணக்கங்களும் இறந்து மறந்து பிறகெழுந்த ஒரு தெய்வக் கொள்கை வள்ளுவருக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே தமிழர் கொண்டு கையாண்டனர் என்பது தேற்றமாகும். அத்தகைய அனைத்துலக முதற் கடவுள் காலம் இடமற்ற, உரு உணர்வு எதுவுமில்லா அறிவுமயமாம் என்றும், அது மக்கள் மனத்தால் அறுதி

*இக் கட்டுரை 1958-இல் எழுதப்பட்டது.

யிட்டளந்தறிய ஒல்லாததென்றும் கொண்டனர். அதனால் மனிதர் மனம் அல்லது உள்ளம் கடந்த அம்மூல முதற் பொருளைத் தமிழறிஞர் கடவுள் எனப் பெயரிட்டழைக்கலாயினர்.

கடவுளை அறிவுமயமாகக் கொண்டதனால், அதுவே அறமுதலும் ஆமெனத் துணிவதே முறையாகும். நீது அனைத்தும் அறிவுக்கு முறணுகும் மறமெனப்படும். நீது ஓரீஇ நன்றின்பால் உய்ப்பதே அறிவின் இயல்பாதலால், அறிவுமயமான கடவுள் அற ஆழியாம் என்பதன் உண்மை பெறப்படும். அறமும் அறிவும் என்றும் தம்முள் வேறு படாது இயைவது வெளிப்படை. அறிவுமயமான கடவுள் அறமுதலாவர் என்பது தேற்றமாகும். அதனால் கடவுளை "வாலறிவன்" என்று கொண்ட தமிழர் அவனை அற ஆழி எனக்கொண்டு பேசுதல் இயல்பும் இன்றியமையா உண்மையுமாகும்.

உருவற்ற கடவுள், உணர்வற்றவராதல் வேண்டும். தனக்கு எதுவும் வேண்டுவது உணர்வுடைய மக்கட் பண்பு அஃதற்ற தம் கடவுளைத் தமிழறிஞர் பொறி ஐந்து அவித்தவன் என்றும், உணர்வு அறவே எதனையும் வேண்டுதல் ஒழியும் ஆதலான் உணர்வற்ற கடவுளை "வேண்டுதல் வேண்டாமை யிலான்" என்றும் கூறுவார் ஆயினர். அடிப்பட்ட அப்பழங் கொள்கைகளைப் பொய்யில் புலவரான வள்ளுவர் தம் மெய்நூலில் எடுத்தாளக் காணுகிறோம்.

உளவாம் தன்மையால் ஒருப்பாடுடைய கடவுள் வினையால் வேறுபடுதலும் இயல்பில்லை. வினையின் வகைகள் பலவேறுபடலாம் எனினும் பண்பால் அவை எல்லாம் ஒன்றுதல் மெய்ம்மையும் முறையும் ஆகும். பொருண்மை

யால் ஒன்றேயாம். கடவுள் வினைவகையால் வேறுபட வேண்டாது ஒன்றுதல் இயலறம். ஆக்கல், அளித்தல், அழித்தல் எல்லாம் வகையால் வேறுபடினும் வினையறத் தால் ஒன்றேயாய் முடியும். அவ்வினையற முறைகளை வெவ் வேறு தொழிலாக்கி அவை ஒவ்வொன்றுக்கும் பிரமன்-விட்ணு-உருத்திரன் என வெவ்வேறு கடவுள்களை ஆரியர் படைத்துக்கொண்டனர். அவர் தமிழரொடு பழகிய பிறகே தம் உருத்திரனைத் தமிழரின் சிவனோடு புணர்த்திச் சிவனைத் தம் மும்மூர்த்திகளில் ஒருவராகச் சேர்த்துக் கொண்டனர். சிவன் என்பது நல்ல தமிழ்ச் சொல். செம்மை, செவ்வை, செவ்விது என்று வழங்கும் எல்லாம் தனித் தமிழ்ச் சொற்களாவது வெளிப்படை. ஆரியரின் ஆதி வேதங்களில் உருத்திரனை யன்றி, சிவன் என்னும் பெயரே கேட்கப்படாமையும் ஈண்டு உற்று உணரத் தக்கது. அவர்தம் உருத்திரன், அழிக்கும் ஒரே தொழிலு டைய ஒரு தெய்வம், தமிழரின் சிவன் எல்லாம் வல்ல இறைவனுவன். மும்மூர்த்திகளையும் முப்பத்து முக்கோடி தேவர்களையும் படைத்துக்கொண்ட ஆரியரின் அற்புதக் கற்பனை வியத்தற்குரியது ஒன்றே கடவுள்; ஒருமையே அவன் அறம் என்பது பழந் தமிழர்கொண்ட கொள்கை களாம்.

பண்டைத் தமிழர் கொண்ட இக்கடவுட் கொள் கைகள் எல்லாம் தொல்காப்பியர், புறநானூறு போன்ற பழந்தமிழ் நூல்களால் பெறப்படுகின்றன. இயலும் பய னும் வேறுபாடும் இந்நூல்களின் நோக்கும் பண்பாட்டுப் போக்கும் தனித்தனியே ஆராய்ந்து துணியவேண்டியவை யாகும். ஈண்டவற்றின் சிறப்பியல்புகளைத் திரட்டிச் சுருக்கிக் குறிக்க லாயினேன்.

# தொல்காப்பியன்

பெரும் பழங்காலத்தில் அருந்தமிழ் நூலியற்றிய புலவர் பலரெனத் தெரிகின்றோம். ஆயினும் அவர் பெயரும் அவரியற்றிய நூற்பெயருங்கூடச் சரியாய் அறியாதிருக்கின்றோம் அவர் தந்த சேம நிதியான பொருவரு நூற் கருவூலங்களைக் கற்றுப் பேணிக் காவாமல், கடல் கவரவிட்டோம். (கடல் சுவர வேல் விடவும், யாற்றிலிட்டதை வேற்றுக் குளத்தெடுக்கவும், நீருள் ஏடு எதிர் நீந்தி ஊர்க்கரை ஏற வைக்கவும், அருந் திருவிளையாட்டாற்றும் ஆற்றல் பழங்காலத் தின்மையின், கைப் பொருளிழந்து, மேல் ஈட்டும் ஊக்கமுற்றுத் தாழ்மேமையர் வாழ்வடைந்துள்ளோம்.) நூல்வளம் குன்றவே, கற்றனைத் தூறு மறிவும், அறிவாளும் ஆக்கம் அனைத்துமின்றி, இக்காலத்தில் முயன்று முன்னேறும் புதிய ஏதிலார் நகைக்கு ஆளாய்த் தாழ்ந்துழலுகிறோம்.

இப்பழைய நாட்டில் ஆரியர் பேரரசு அசோகனுடசியே. அவன் தந்தை சந்திரகுப்தன் புகழ்படப் பாடலிபுரத்தை யாண்டது ஏசு தோன்றுதற்கு நான்கு

நூற்றாண்டின் முன்னாகும். அப்போது பாடலி வேந்தவை யில் யவன தூதனாயிருந்த மெகத்தனிசு எழுதிவைத்த நிகழ்ச்சிக் குறிப்பு இன்று நின்றது. அதில் தமிழர் பேரூர் மதுரை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மதுரையின் சீரும் சிறப்பும் நேரிலா வளமும் யாண்டுமில்லாத் தேக் கொடு அகிலும் தென்கடல் முத்தும் உப்பொடு உவப்புறு உணவும் பண்டமும் ஒப்பில் உடைகளும் உலகமெங்க ணும் நிலவ, வங்கமும் கால்நடை வகைகளும் சுமந்துத வும் பெருஞ் செல்வமும் சிறப்பும் பாடலி எட்டிய பாண் டியர் புகழும், தமிழர் தேய்விலாத் தூய வாழ்வும் பாராட் டிய யவனப் புலவன் குறிப்புரைகள் பழைய தமிழர் பெருமைக்கு இறவாச் சான்று தருகின்றன. அதனால், இற்றைக்கு இருபத்தைந்து நூற்றாண்டுகளுக்கு முன் னரே கூடல்—மதுரை பாண்டியர் தலைநகராய்ச் சிறந் தோங்கிய செய்தி அக்காலப் பிறமொழிப் புலவர் பலரும் பேசிய பழமை.

இனி, மதுரை தலைநகராகுமுன் நெடும் பல்லாண்டு பாண்டியராண்டது குமரி முனைக்குத் தெற்கே கடல் கொண்ட கபாடத்திலென்பது நம்மவர் மறப்பினும் பிற மொழிப் பழமைப் புலவர் பலரும் இறவாச் சான்றால் நிறுவிய உண்மை. இது கவிகள் கட்டும் கதை வகை யன்று. பண்டைத் தமிழ்ச் சான்றோர் செய்யுட் குறிப்புக் களால் தெளிக்கப்படுவது மட்டுமன்று; மூதறிவுடைய முதற் கவி யென்று ஆரியப் புலவர் பாராட்டிவரும் வான்மீகரும், சந்திரகுப்தன் மந்திரியாய்ப் புலமையும் புகழும் நிலவ வாழ்ந்த சாணக்கியரும், தங்கள் பெரும் பனுவல்களில் மிகப் பேசும் வாய்ப்புடையது. (இவ் வர லாறனைத்தும் தொல்காப்பியர் கால ஆராய்ச்சிக் கட்டு

ரையில் விரித்து விளக்கியுள்ளேன்; அதனால் மீண்டும் விரிக்க ஈண்டிடமும் விருப்பமும் இல்லேனுகையாலும், இனைத்தளவில் இதனை நிறுத்துகிறேன்.) இவ்வாறு அளவிட்டறியவொண்ணு அரும் பழங்காலத்துப் பெருந் தமிழ் நாட்டில், ஆரியத்தின் வேறுபட்ட சீரிய கலைச்சிறப்பும், செம் பொருட் செய்யுட் செல்வமும் நிறைந்து சிறந்த தமிழ் வழங்கிற்றென்பது வரலாறறியாத் தற்காலத் தமிழர் சிலர் ஐயுறினும், ஆரிய நூல்களும் பிற அயன் மொழிச் செய்யுட்களும் நற்சான்று கூறி வற்புறுத்தும் உண்மையாகும். எனவே, ஆரியர் இங்கு வருவதற்குப் பற்பல நூற்றுண்டுகளுக்கு முன்னரே இந்நாட்டில் செல்வமும் புகழும் சிறக்க வாழ்ந்தவர் தமிழர்; அறனறிந்து மூத்த அறிவும்; அகன்றுழ்ந்த அறிவு நூல் வளமும் நிறைந்து நின்றவர்; ஊழையும் உப்பக்கங் காணும் உலைவிலா ஊக்கமும் "திரை கடலோடியும் திருவினைத் தேடித்" தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்து மகிழும் ஆக்கமும் படைத்தவர்; "ஒழுக்கமே உயிரினு மோம்பற்குரிய" தென உணர்ந்து தம் மொழியியல் முறையிலும், வழக்கொடு செய்யுள் வகைப்படு பொருள் வரலாறுகள் அனைத்தினும் இணை வகுத்து உயரும் வாழ்க்கையை உவந்துகொண்டவர்.

அத்தகைய பழைய தமிழரின் வாழ்க்கை நிலை, ஒழுக்க நெறி, அடிப்பட்ட வழக்கு முறை, குறிக்கோள்கள், நூன்மரபு, மொழிமரபுகள் இவற்றை உள்ளவாறு இன்று நம்மவர் ஆய்ந்தறிய விரும்புவது இயல்பாகும். அவ்வாராய்ச்சிக்கு ஓரளவு உதவுவன பண்டைச் சான்றோர் செய்யுட்களே யாம். முதற் பெரு நூல் பல நீரினும் நெருப்பினும் போரினும் அழிந்து போயின.

எஞ்சிய சிலவும் துஞ்சிய நம்மவர் மடியும் மறப்பும் மடியவிட்டன. கபாடமுண்ட கடல் கோளில் தப்பிப் பிழைத்தது தொல்காப்பியன் நூல் ஒன்றேயாகும். அந் நூலில் வரும் குறிப்புக்களால் தொல்காப்பியனுக்கு முன் தமிழில் மொழியியற் பகுதிகள் தனித்தனிப் பிரித்து நுனித்து விரித்து விளக்கிய பெருநூல் பலப்பல உண் டென உணருகிறோம். "ஒத்தென மொழிப உயர் மொழிப் புலவர்" "தோன்று மொழிப் புலவர் அது பிண்டமென்ப" "நூலென மொழிப நுணங்கு மொழிப் புலவர்" "நல்லிசைப் புலவர் செய்யுளுறுப்பென......... வகுத்துரைத்தனரே" "யாப்பென மொழிப யாப்பறி புலவர்"—"மறையென மொழிதல மறையோராறே," "சொல்லியற் புலவரது செந்தொடை யென்ப," என்று இவ்வாறு ஆங்காங்கே சுட்டுதலால், அவ்வப் பகுதி பற்றிய முந்து நூல் பல வுண்மை குறிக்கப்படுதல் வெளிப்படை. மொழியியல் முழுதும் வகைபெறத் தொகுத்த நூலுடையதாயின் அதுவே ஒரு மொழியின் சிறப்புக்கு அறிகுறி; அதன்மேல் ஒரு மொழியில் எழுத்துச் சொற்பொருளின் இயற்பகுதிகளைப் பிரித்து விரித்து ஆராயும் தனிப் பெரு நூல் பல எழுமாயின், அவை அம்மொழி செஞ்சொற் செறிவுக்கும், புலனெறிச் செய்யுள் நிறைவுக்கும் பேரெல்லை யெய்திய பெருமைக் குச் சான்றாகும். தமிழ் அறப் பழங்காலத்து அந் நிலை யுற்றிருந்த செய்தி தொல்காப்பியனாரின் தெள்ளிய குறிப்பால் தேற்றமாகிறது. (எனவே இடையிருட் காலத்தே நம்மவர் புறக்கணிப்பாலும் இறவாத தொல் காப்பியன் நூல் தனி முதல் நூலன்று. கும்பவம்பக் குறுமுனி ஒருவரின் ஒரு நூற் சார்பாம் வழி நூலுமன்று.)

தமிழியற் பகுதிகள் தனி விரித்தெழுதிய நுண் பெரு நூல் பல பெருகிய நிலையில், அனைத்தையும் பயின்று

சொல்லியல் தேர்தல் மாணவர் பலருக்கு மலேவினை விளைக்கும். ஆதலின், அவையெலாம் துருவி முற்றும் கற்ற மூதறிவாளன் திரட்டச் சுருக்கி, இளைஞர் முயன்று மொழியியல் முழுதும் எளிதிற் பயின்று செய்யுளின்பச் செல்வம் நுகர்தற்கு உதவக் கருதி வடித்துக் கொடுத்தது தொல்காப்பியன் நூல். முதற் படியாயிது முற்றுங் கற்றபின், தனிப்பெரு நூல்களை ஆயத் தொடங்குவர் புலமையை விரும்புவோர். தொடங்கி, எழுத்தும், சொல்லும், யாப்பும் அணியும் பொருளிரு வகையும் மருளறத் துருவித் தெளிவர்.

அவ்வழக் கொழிந்து தொல்காப்பியனைப் பேரளவின்றி நூல் நுனித்தறியா நிலே தமதாகப் புலவருலகம் பெருமிதமடையும் காலம் வந்துளது. பேரும் சரியாய்த் தேருநர் உளரோ என்று ஐயம் எழவும் இடமாயிற்று. இந்நிலே, தமிழரறிவைப் பறிகொடுத்து வறியராய் ஆரிய மோகினிக்கு அடிமையானதன் பயனாகும்.

மட்டின்றி மதுவுண்டார் மதிமயங்கித் தமை மறப்பது இயல்பாகும். பிறகு அவர்கள் வெறி குறைந்து தெளிவுறத் தங்கள் முன் மயக்கிற்கு வெட்கமும் வெறுப்பும் எய்தலும் இயல்பே. சென்ற 1500 ஆண்டுகளாக ஊறியேறிய புதிய ஆரியக் களியால் தமிழர், தமிமையும் மறந்து, முன்னோர் பெருமையும் உரனும் துறந்து, பிறர் நகைப்புக்கு ஆளாயினர். உலகமெலாம் கெட்டிருள் நீங்கி வெட்டென விடிந்து அறிவொளியேறு மிக்காலத் தமிழிளைஞரும் நாட்காலேத் தூயகாற்றைச் சாலமோப்பாராயினர். கனித்த ஆரியம் புளித்தபின், அதில் அருவருப்பும் தமது பழந்தமிழ்த் தூயவாழ்வினை மீள மேற்கொளும் பெரு விருப்பும் ஒருங்குணர்வாராயினர். இப்

புதிய நன் முயற்சிக்குப் பழைய நூல்களே துணையாமாதலின், முன் மறந்து துறந்த செய்யுள்களைத் தேடத் தொடங்கினர்; துருவிக் கண்டு உருவும் செல்லரித்த சுவடிகளைத் துடைத்துப் புதுக்கித், தம் முன்னேற்றக் கருவியாகக் கருதுவர். அவற்றுள் தொல்காப்பியன் நூலே தொன்மையும் தூய்மையும் உடையதாகவே, அதனைப் பேணிக் கற்கப் பலர் விரும்புவர். ஆனால், அதன் நடையும், உரைகளின் முடையும், அதை முழுது மூடிய பொய்க் கதை முட்புதர்களின் தொடையும், அவர்களை அச்சுறுத்தி அலமரச் செய்கின்றன. ஆரியர் மறையைப் பொருளறியாமல் போற்றுதல்போலத், தமிழிளைஞர் எதையும் விழிகண் குருடராய் விழுங்க இணங்கார். புலவருலகில் நிலவும் பல கட்டுக் கதைகளும் அறிவை முட்டி அலமருத்தும் உரைகளும் இந்நூலின் நோக்கையும் சொற்றொடர்ச் செம்பொருட் போக்கையும் அறிய இடம் தாராமையால் அவர்கள் மயங்குகின்றனர்.

இதனால், இந்நூல் இன்றளவும் கற்றோரும் முற்றுந் தெரியாத மூடுமந்திரமாய் இருந்துவருகிறது. இந்நிலையில் இது பழந்தமிழ் வாழ்வினைப் புதுக்க விரும்புவோர்க்கு உதவுவதெப்படி? (உள்ளவாறு உட்பொருளுணராத கள்ளப் புகழ்ச்சி என்னாற் குறித்து.) 'ஏட்டில் எழுதா' மறை கூடப் பார்ப்பன வகுப்பார் சுற்றுக் கனம் சொல்லி விற்றற்கு உதவுகிறது. வேதப் பொருள் பற்றி வாதமில்லை. தொல்காப்பியன் நூலோ பிற்கால உரைப் பிரையால் திரைந்து, அருந்த வொண்ணாப் பாலாயிற்று. அறியா வட நூற்கு அஞ்சி மெய்விதிர்த்து அறிவொடு வாயும் புதைக்கும் போலிப்புலவர் புனையுங் கதைகளால் இந்நூல் அறிவு நுழையா அரும் புதராகத் தோன்றுகிறது; புலமை புகுதாப் பெரும்புற்றாயிற்று; நுண்ணறிவினரும் நிலையா

நீந்தா அலையாழியாயிற்று; அயனொடு மாலும் அடிமுடி யறியா அண்ணுமலைபோலப் புலவரும் மருளும் பொல் லாக்கலைப் பாழியாயிற்று. (பாழி—மலை)

இவ்வளவும் போதாமல், எனைத்தளவும் இது தனித் தமிழ் மரபு தாராதெனவும், வடித்த வடநூல் முடித்த முடிபே தொடுத்து யாத்ததோர் பார்ப்பனப் பனுவலெனவும், தொல்காப்பியம் எனும் இந்நூற் பெயரே தத்தி தாந்தமாய்க் காவியக்குடியான் செய்த நூலெனக் காட்டும் எனவும் வாய்ப்பறை கொட்டும் வம்பரும் பலருளர். அதனுல், தமிழர் மயங்கித் தெள்ளிய சொற்பொருள் தேராது விடுகின்றனர். கொள்ள அமையா ஆரியக் கொள்கையை அள்ளிநுழைத்துச் சூத்திரச்செந்தொடர்ச் சொல்லொடு மல்லிடும் பொல்லா உரைகள் கற்பவர்க்கு அல்லல் தருகின்றன. தொல்காப்பியன் ஆரியத்தைப் புகுத்தித் தமிழை அழிக்க வந்த ஆரியப் பார்ப்பனு? அன்றித் தமிழைப் பேணிய பழம் புலவனு? அவன் நூல், தளரும் தமிழ் வளர்தற்கு உதவும் தப்பா மருந்தாய்க், கொள்கை குறையாச் சேம நிதியுமாம் என்பார் மெய் பேசுபவரா? அன்றி, தோண்ட நாறும் வேண்டாக் குப்பைக் களஞ்சியம் இதுவென்பது உண்மையா? இதனைத் துருவி முடிவுகட்டுமுன், இவன் நூற் பெயரைச் சிறிது சிந்திப்பது மெய்காணு முயற்சிக்கு முதற்படியாகும்.

இன்று புலவர் இதனைத் தொல்காப்பியம் என வழங்குகின்றனர். 'தொல்காப்பியம்' என்பது தமிழ்ப் பெயரன்று; வழக்கொடு செய்யுளின் மரபோடியையாத வடநூல் தத்தித முடிவுடையது. இது இலக்கணப் புலவருக்கு இரும்புக் கடலையாத் தீர்க்கவொண்ணுப் புதுப்

பிசி (புதிர்) ஆகும். ஒரு நூலுக்கு அதனை ஆக்கியவர் பெயரோடு 'அம்' எனும் தத்தித விகுதி கூட்டிப் பெயர் தருவது வட நூன்மரபு; வான்மீகம், வாசிச்டம், பாணினீயம், பதஞ்சலீயம், யாக்கிய வல்கியம் போல்வன ஆக்கியோர் பெயரடியாய் வரும் வடமொழித் தத்தித இலக்கண வகையாலமைவன. தமிழில் அவ்வாறு நூற்பெயரமைக்க உதவும் ஆதரவு எனைத்துமில்லை; ஆட்சியிலும் ஆன்றோர் வழக்கிலும் யாண்டும் மேற்கோள் காண்டற்கில்லை. அவரவரின் சிறந்த செய்யுட்கள் அவ்வவ் புலவர் பெயரே தம் பெயராய்க் கொண்டமைவதே தமிழியல் முறைமையாகும் அதனை ஆகுபெயரென்பர் மொழியியற் புலவர் 'வள்ளுவன்', 'கம்பன்', 'கபிலன்'. 'சம்பந்தன்' என்பன அவ்வப் புலவர் பெருமக்களின் சிறந்த செய்யுட் பெயராய்த் தமிழில் வழங்குதலறிவோம். எனில், வள்ளுவம், கம்பம், கபிலம், சம்பந்தம், என்பன தமிழில் எஞ்ஞான்றும் யாராலும் கேட்கப்படாதபுதுமை. ஆகவே, வள்ளுவன் செய்த நூல் அவன் பெயரே கொள்ளுவது போலத், தொல்காப்பியன் ஆக்கிய தமிழ்நூலும் முதலில் அவன் பெயரால் 'தொல்காப்பியன்' என்றே வழங்கியிருத்தல் மரபும் முறையுமாகும். பின் தமிழை ஆரிய மயமாக்கிய பிற்காலத்தில், அவனைப் பார்ப்பனன் ஆக்கும் நோக்குக்கேற்ப. அவன் நூலுக்கும் வடமொழி மரபால் பெயரிட்டமைக்கப் பெற்றதென்பதும் வெளிப்படை இவ்வாறு கொள்ளாமல். இத்தமிழ் நூல் எழுந்த நாள் முதல் இதற்குத் தொல்காப்பியம் என வடமொழித் தத்திதப் பெயரே வழங்கிற்று என்பது நம்புதற்கில்லை. முதலில் தனித்தமிழ் மொழியில் பெரு நூலுக்கு அம் மொழி மரபொடு முரணி அந்நிய ஆரிய இலக்கண விதி கொண்டு பெயரமைப்பது பெருவியப்பாகும். மரபிறந்து முறைபிறழ்ந்து இவ்வாறு நூற்பெயரமைதல் தமிழுளவில் ஆட்சியற்ற ஆரிய மயக்கப் பேய்த்தேராகும்.

இனி, வான்மீகம் எனும் வடசொல்லைத் தமிழில் வழங்குதல்போலத், தொல்காப்பியமும் வட வழக்காய் எழுந்து, பின் தமிழில் வந்து வழங்கிற்றெனலும் கொள்ளற்கில்லை, வடநூற்கன்றித் தமிழ் நூற்கு அம்முறைவழங்காதாதலின் வட சொற்களும் தமிழில் வழங்குங்கால் தமிழ் மொழியியல்பே சுட்டலாயாகும்; ஒரோவழி, அவை வடமொழி யிலக்கண வகையின் அமைந்தவாறேகொள்ளினும் தவறில்லை. ஏனெனில், தமிழ்ச் சொற்றொடர்கள் எஞ்ஞான்றும் எனைத்தவும் தமிழ் மரபுக்கு மாறாகப் பிறமொழி யிலக்கண அமைதிகொண்டு வழங்கப் பெறா. தொல்காப்பியம் என்னும் தொடரில் தொல் என்பது நல்ல தமிழ் என்றே பொருள்படும். காப்பியமும் தனித் தமிழே என்பதைப் பின்னர்க் காட்டுவன். அது காவியம் என்னும் வடசொல் மரூஉவாகக்கொள்ளினும் அவ்வாறு தமிழுருப் பெற்றபின் தமிழ் மரபிகந்து வடமொழி யிலக்கண வரம் பின் நிற்றல் வழக்காறில்லை. வடமொழி நூல்களும் அப்படித் தன்னினம் இழந்து பிறமொழி தழுவிய சொற்களுக்குத் தம் இலக்கணத்தில் இடம் தரா. 'லோக'த்தின் அடியாகத் தத்திதமாய் 'லௌகீகம்' பிறக்கும்; லோகச் சொல், 'உலகம்' எனத் தமிழ் உரூஉக் கொண்டபின் வடநூல் விதிபற்றி 'உலௌகீகம்' என வராமை அறிக. இலௌகீகம் என்பது லௌகீகத்தின் தமிழ் உரூஉவாகுமன்றி, உலகச் சொல்லின் தத்திதமன்று.

அன்றியும், கவி என்னும் வடசொல், பாட்டுக்கும் சுக்கிரனுக்கும் பெயராகும்; அதனால், காவியம் என்பதும் பாட்டாலாயது, அல்லது சுக்கிரன் செய்தது எனப் பொருள்படும். சுக்கிரனின் வழி வந்தார் எல்லார்க்கும் கவி பொதுப் பெயராயின், அக் குடியினன் இன்னார் செய்ததெனச் சுட்டும் சிறப்பியற் பெயர் தத்திதமாவது முறையாகுமன்றி, ஆக்கியோனைக் குறித்துச் சுட்டாப் பொதுப்

பெயரால் நூற்பெயரமைவதற்கு மரபும் வழக்கும் வட மொழியிலும் காணலரிதே. மனு செய்த அறநூல் 'மானவம்' எனப்படும். மனுவின் வழிவந்தார் மானவராயினும், அவர் சிறப்புப் பெயர் சுட்டாமல் எவர் செய்த நூலுக்கும் 'மானவம்' என்று தத்திதம் அமைவதில்லை. இன்னும் 'காவியர்' வடசொல்லாக் கருதப்படினும், தொல்காப்பியம் நல்ல தமிழ்த் தொடராதலின், அவ்வாறு தத்திதம் அமையாது. ஆதிகவி என்பது வான்மீகருக்குத் தனியுரிமைப் பெயர்; அதனால் அவரியற்றியதை ஆதிகாவியம் எனல் அமையும். கவிகுலத்தார் பல பழங்குடிகளில் ஒருவராகலாம் ஆயினும் அவருள் யாருக்கும் புராணம் முதலிய பழமைச் சுட்டு, தனியுரிமை அன்று. அதனாலும் 'தொல்காப்பியம்' வடநூல் தத்திதப் பெயராகாது. இத்தகைய இலக்கண மரபும், ஆன்ற வழக்கும் பற்றிய துணிபுமே இதற்குப் போதிய ஆதரவாகும்.

இனி, ஆக்கிய புலவன் சிறப்பியற் பெயரே அவன் நூலுக்கு ஆகுபெயராவது தமிழ் மரபாதல் அங்கையிற் செங்கனிபோல் விளங்குமுண்மை அம் முறையில் தொல்காப்பியன் எனும் சிறப்புப் பெயருடையான் செய்த நூல் தொல்காப்பியன் எனப் பெறுதல் வழக்கொடுபட்ட மரபின் வழித்தாகும். குறளை 'வள்ளுவன்' எனவும், விருத்தத் தமிழ் இராமாயணத்தைக் 'கம்பன்' எனவும் அஃதைச் செய்தோன் பெயரால் கூறுதல் போலத், தொல்காப்பியன் செய்ததை அவன் பெயரால் தொல்காப்பியன் என்பதே பழைய வழக்கும் இயல் மரபுமாகும். இது கருதலளவையாற் காணும் மெய்ம்மையாதல் மட்டுமில்லை; நூற் சான்றாலும் உறுதிபெறும் உண்மையுமாகும். தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றி" எனும் பாயிரத் தொடர் இவ்வுண்மையை

ஐயமறச் செய்யும் அழியாச் சான்ருய் நிற்கவும், அதை மறந்து புதிய உரைகளால் மதிமயங்கி அல்லற்படுகின் ருேம். மொழியியல் முழுதும் பழுதறத் தொகுத்துத் தான் செய்த தமிழ்ப்பெரும் புது நூலுக்குத் தனிப் பெய ரிடாமல் தன் பெயரையே பெயராக்கி நிறுவிஞனெனத் தெளிக்கும் இப் பாயிரத் தொடருக்குத், தொல்காப்பி யத்தை ஆக்கியதால், தனக்கு அந்நூற் பெயரே அழி யாப் புகழ்தரும் பெயராக நிலைநிறுத்திக் கொண்டான் எனப் பொருள் பண்ணி மகிழ்வார் சில புதிய புலவர். அது பொருளாயின், அந்நூற் பெயர் தொல்காப்பியம் எனச் சுட்டாததேனே? அன்றியும் அந்நூலால் பெற்ற தொல்காப்பியன் எனும் புதுச் சிறப்புப் பெயரைப் புல வன் நிறுத்திஞன் எனக் கொள்ளின் எழும் ஏதங்கள் எத்தனை? நூற் பெயரை நுவலாததோடு, அதை ஆக்கி யோன் இயற்பெயரும் நூற்பெயரும் சுட்டுதல் வேண் டும்:—

> "ஆக்கியோன் பெயரே வழியே, எல்லை,
> நூற்பெயர், யாப்பே, நுதலிய பொருளே,
> கேட்போர், பயனே டாயெண் பொருளும்
> வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே."[13]
>
> (நன்னூல் 47)

இது, பாயிரம் பற்றிய பிறழாக் கட்டளை. இதனுல், பாயிரம் கூற வேண்டுவன எட்டனுள் ஆக்கியவன் இயற் பெயரும் இன்றியமையாதது எனத் தெளிக்கப்படுகிறது. அதன்படி பாயிரம் கூறும் தொல்காப்பியன் என்பது அவன் இயற்பெயராதல் தேற்றம். அஃதவன் இயற்

13. ஆக்கியோன்-நூல் செய்தோன்; வழி- நூல் வந்த வழி; எல்லை-நூல் வழங்கு நிலம்; யாப்பு-இயைபு; வாய்ப்ப-விளங்க; இயல்பு-இலக் கணம்.

பெயராதலின், 'குடிப்பெயர் தோற்றி' என்னுமல் 'தொல் காப்பியனெனத் தன் பெயர் தோற்றி' என விளக்கப்பட்டது. அவன் பெயரே ஆகுபெயராய் நூலுக்கும் பெயராயிற்றுதலின், இத் தொடர் நூற் பெயரும் கூறிற்றுதல் வெளிப்படை. இறவாப் பெரு நூலையாக்கி அதற்குத் தன் பெயரே பெயராக அமைத்து, அதனுல் மறவாது நிலைத்த புகழோடு தன் பெயர் விளங்கப் பண்ணிய பெருமை அப்புலவனது என்பதே இப்பாயிரத் தொடரின் தெள்ளிய பொருளாதல் ஒருதலை. தன் பெயரால் நின்று நிலவும் பெரு நூலைச் செய்த சிறப்பால் அவன் பெயரே அந் நூற் பெயராய், என்று மிறவாமல் தமிழ் கூறும் நல்லுலகில் விளங்குகிறது.

இனி, பழங் காவியக் குடியினனை திரணதூமாக்கினி எனும் பார்ப்பனன் இந்நூலியற்றியவன் எனும் கட்டுக் கதை வடநூலாதார வற்றதும், அறிவால் மறுக்கப்படுவதுமான பொய்க்கதை, தென்னுட்டிலொரு பகுதியில் இழிவழக்குகளை யேற்றி மக்களைப் பழிபடு வாழ்வினுக்காளாக்கிய சிறுமை பரசுராமன் மேற் சுமத்தும் கட்டுக்கதை, மேற்கடலோரத்தைக் கீழ்மைப்படுத்திய செய்தி கேட்கின்றோம் அவனுக்குத் தமிழைக் கொடுக்கத் தலைப்பட்ட தம்பி ஒருவனுண்டென வடநூலெதுவும் குறிக்கவுமில்லை இவ்வம்புக் கதை வள்ளுவனுள்ளிட்டு நல்ல தமிழ்ப் புலவரெல்லாரும் ஆரியரெனக் கூறித் தமிழரைப் பழிக்கும் பார்ப்பன மாக்களின் குறும்பின் விளைவாகும். இரண்டாம் ஊழித் துவக்கத்தில் இளைய இராமனை எதிர்த்த முதிய பரசுராமன் தம்பி மூன்றும் ஊழி முடிவில் முடிந்த கண்ணனிடம் சென்று வேளிரைக் கேட்டு வாங்கிக் கூட்டிப் போந்த அகத்தியனுக்கு மாணவன் என்பது கால முரணுல் கருதவொண்ணுப் பொய்ம்மையாதல் வெளிப்படை.

பழந் தமிழுலகில், காப்பியன் எனும் இயற்பெயருடை யார் புலவருள்ளும் பலருண்மை தொகை நூற்பாக்களாக் கிய புலவர் பெயர் வரிசையிற் பரக்கக் காணலாம். அப் பெயருடையார் பலராகவே, அவருள் வேற்றுமை விளங்க ஒவ்வொருவர் பெயருக்கும் அவரவர் சிறப்பியல்புகளால் அடைகொடுத்துத் தெளித்தல் மரபொடுபட்ட தமிழ் வழக்காம். இன்னும், கருப்பன் என்பார் பலரிடை. குட்டைக் கருப்பன், நெட்டைக் கருப்பன், சின்னக் கருப் பன், பெரிய கருப்பன் என்று ஏற்புடை அடையால் கூறு தல் காண்போம். அதுவே போலக், காப்பியப் பெயரினர் பல பெரும் புலவர் பண்டைக் காலத்திருந்தனராதலின், காப்பியாற்றுக் காப்பியனார், சேந்தன் தந்தை காப்பியனார், பல் காப்பியர், தொல்காப்பியர் எனப் புலவர் பெயர்கள் பல பழம் செய்யுளியற்றியோராகத் தொல்லை ஏடுகள் சொல்லத் தேர்கின்றோம். பண்டைப் புலவருட் காப்பியப் பெயருடையார் பலராதலின், அவரனைவருக்கும் காலத் தால் முற்பட்ட இப்பெரு நூலியற்றியவர் பழமை தோன்ற இவரைத் தொல்காப்பியன் எனும் சிறப்படை யால் சுட்டிப் பிரித்து, மற்றையோரையும் அவரவர்க் கேற்ற வேறு அடை புணர்த்திக் குறித்தனர் போலும். காப்பியாறு எனும் ஊர்ப் புலவரொருவருக்குக் காப்பிய னார் எனும் பெயருண்மையால், காப்பியப் பெயர் அக் காலத் தமிழ் மக்களது இயற்பெயராவதன்றி, காப்பியக் குடி எனும் ஊர்த் தொடர்பு சுட்டும் சிறப்புப் பெயராகா மையும் தேற்றமாகும். எனவே. இத்தமிழ்ப் பெரு நூலாக் கியவர் ‘காப்பியன்’ எனும் பழைய தமிழ் இயற் பெய ருடையதொரு பண்டைத் தமிழ்ப் புலவரேயாவார் என் பது கடியலாகா முடிவாகும்.

இனி, ‘ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்’ என்றத னால், இவர் பார்ப்பனரென்பார் கூற்றையும் ஆராய்

வோம். ஐந்திரம் என்ற பண்டை இலக்கணம் தமிழன் பயிலத் தடை கிடையாதே. பார்ப்பனரன்றிப் பிறர் பயிலாத மறைபோலன்றி, பிற வடநூல் யாவும் யாவரும் கற்றற்குரியன வன்றோ? வேடன் வான்மீகனும் சமணரும், தமிழரும் வடமொழி பயின்று பெருநாலியற்றிப் புகழ்பட விளங்கியது உலகறிந்த உண்மையன்றோ? இன்னும் இந்நூலைக் கேட்ட அதங்கோட்டாசான் பார்ப்பனன் என்பது விளங்க 'அறங்கரை நாவின் நான்மறை முற்றிய' எனச் சுட்டும் பாயிரம், தொல்காப்பியனை 'ஐந்திரம் நிறைந்தான்' எனமட்டும் கூறிய குறிப்பும் கருதற்குரியது. ஐந்திரம் யாருக்கும் சிறந்துரிய உடைமையன்று. அன்றியும், அப்புலவன் பார்ப்பனப் பண்டிதனாயின், அக்கால வடமொழி நூலான ஐந்திரத்தை அவன் நன்கு பயிலுதலில் தனிச் சிறப்பில்லை; இலக்கணமறியார் பண்டிதராகார். அவன் தமிழனாயின், தன் மொழியளவில் தொன்னூற் புலமை நிரம்பியதோடு, ஆரியர் பழைய பெருநூலதையும் முழுதும் பழுதறப் பயின்று தேர்ந்திருப்பின், அஃதவன் சிறந்த பெருமையாகும். அதனால் 'ஐந்திரம் நிறைந்த' எனும் அடையே அவன் அந்நூல் பயிலும் இயல்புடைய பார்ப்பனப் பண்டிதனாகாமல், அதைக் கற்க வேண்டாத பிறமொழிப் புலவனாதலையும், அந்நிலையில் அவன் அதைக் கற்றுவல்லுநனை சிறப்பையும் ஒருங்கு சுட்டும். இதுவே அவ்வடையின் கருத்தாம் என்பது உற்று நோக்கி உணரற்குரியது. பின், பொய் மலிந்த புராண காலத்தில், மற்றத் தமிழ்ப் பெரியாரோடு இவனையும் பார்ப்பனனுக்கும் நோக்குடைய பண்டிதர் இவனுக்குத் திரணதூமாக்கினி எனப் புது நாமம் சூட்டி, காப்பியத் தமிழ்ப் பெயரைக் காவியமெனும் வடசொல்லின் தற்பவமாக்கி, இத்தமிழ்ப் பெருமகனை ஆரிய கவி குலத்தானாக ஒரு கதையும் புனைந்து, அரச விசுவாமித்திரரை

யும் ஆகாரென விலக்கிய மறைக் குடியிற் புகுத்தி முடித்தார். தமிழை யிழிவாக்கக் கூசாது எதையும் கூறத் துணிந்த இவர்கள் ஆரிய நூலில் இதற்காதாரமின்மையை ஒரு தடையாகக் கருதமாட்டார். தன்னிகரற்ற தமிழ் மூதறிவினன் இவனை ஆரியனாக்கி, தமிழருள் யாரும் இத்தகவினராகாரெனுந் தருக்குரை நிறுத்த, இவ்வாதரவற்ற பொய்க்கதை போதிய சான்றாமோ?, புதிய தமிழகத்தில் பார்ப்பனப் பண்டிதர் பழந்தமிழ்ப் புலவரைப் பழிக்கு மிச்சமூக்குரைகள் மறுக்கவும் வேண்டாப் பழங் கதைகள்; இவைதாமே தம் பொய் சாற்றுந் தன்மைய எனில், ஆரிய மோகம் ஏறிய தமிழர் அறிவைப் பறி கொடுத்து இப்புரையுரைகளைப் பாராட்டும் புன்மை புதிது. சிறிதும் தாம் அறியா, அறியொண்ணா, அறிதற் கொவ்வா, தம்மினம் பழிக்கும் தன்மையவான ஆரிய மறைகளைக் கடவுளைக் கடந்த எழுதா மொழியென மருளும் தமிழர், புலவன் தொல்காப்பியனும் வேள்வள்ளுவனும் பார்ப்பனரென்னப் பகருதல் தவறென்றறியும் உணர்விலராதல் வியத்தற்கில்லை.

இனி, அளவுடைய பெருமைக் குரியாரை அவர் பெயரீற்றில் ரகர வொற்றைக் கூட்டிக் கூறுவதும், ஒப்புயர்வற்ற பெருந்தகையாரை ஒருமை முடிபால் உவந்தழைப்பதும், சான்றோராலும் ஆன்ற வழக்காகும். வள்ளுவன், கம்பன், கபிலன், என மக்கட் பெரியாரையும்; சிவன், முருகன், எனத் தலைமைக் கடவுளரையும் ஒருமை சுட்டும் னகரவீற்றால் அருமை தோன்ற இன்றும் அழைத்து மகிழ்வது தமிழ் வழக்காகும். 'கடவுள் கேட்பான்', 'முருகன் அருளுவன்', 'கம்பன் கூறுவன்' என்று இன்றும் வழங்குதல் யாவரும் அறிந்தது. இம்மரபு உணராத பிற்காலத்தில் பெரியாரெவரையும் பன்மை சுட்டும்

ஒற்றொடு பேசுதல் வழக்காற்றில் வந்துவிட்டது. அதனால் வள்ளுவன், கபிலன், கம்பன் எனத் தொல்லை மரபால் சொல்லுவதோடு, ரகர வொற்றுக் கூட்டி வள்ளுவர், கபிலர், கம்பர், என வழங்குவாரு முளர். அம்முறையில் தொல்காப்பியனையும் தொல்காப்பியர் எனவே பாராட்டி வரலாயினர் அதனால் தற்காலத் தமிழுலகில் 'தொல்காப் பியன்', 'தொல்காப்பியர்', எனும் இரண்டும் ஒரு நூலைக் குறிக்கும் ஆகுபெயர்களாகும் எனத் தெளிதலெளிது.

# ஏது தமிழ் இலக்கியம்

முதலாவதாக இலக்கியம் என்ற சொல் தமிழில் எப்படி வந்தது என்பதை ஆராய்வோம். இலக்கியம் என்பது லட்சியம் என்ற வடசொல்லின் திரிபு என்பர். ஆங்கிலத்தில் முருங்கைமரம் என்ற சொல் வழங்குவது போலவும், தமிழில் கங்காரு என்ற சொல் வந்து வழங்குவது போலவும் இலக்கியம் என்ற சொல் இரவல் கொண்டதென்பர். இடைக்காலத்தில் தமிழர்கள் தன்மதிப்பிழந்து பிறமொழியில் இருந்தால்தான் பெருமை என எண்ணி, மக்கள் பெயர்முதல் மரப்பெயர் ஈருக உள்ள எல்லாப் பெயர்கட்கும் வடமொழிப் பெயர்களை இட்டு வழங்கலாயினர். லட்சியம் என்ற சொல்லிற்கு இரண்டு மொழியிலும் கொள்ளும் பொருள் போதாது. இலக்கியம் என்ற சொல் லட்சியம் என்ற சொல் குறிக்கும் பொருளை உணர்த்தாது. இலக்கியத்தைச் செய்யுளென்பர் பண்டைத் தமிழர். ஆங்கிலேயர் Literature என ஆங்கிலத்தில் சொல்வர். எழுதப்பட்டதெல்லாம் Literature தான். உதாரணமாக, Literature about the horse etc. பாட்டு,

உரை எவையாயினும் ஒரு பொருள் பற்றி விரித்தெழு தும் அனைத்தையும் தமிழில் செய்யுள் என்பர். வட மொழியில் லட்சியம் என்ற சொற் பொருளை நோக்கின் செய்யுளின் பொருளோடு வேறுபடும். லட்சியம் என்ற சொற்கு நோக்கம் எனவும் பொருள் கொள்ளலாம்.

லட்சியம் என்பதற்கு நோக்கம் என்ற பொருளைக் கொண்டு, ஒரு நோக்கத்தோடு எழுதப்படுவதே இலக் கியம். அஃதும் புருடார்த்தம் நான்கைக் கருதிச் செய் யப்படுவதே யாக இருக்கும். “மக்கள் உணர்ச்சியினை வெளிப்படுத்துவதெல்லாம் இலக்கியமல்ல” என்பர் வடவர். இப்பொருள் பொருந்தாது. என்னை? புருடார்த் தம் நான்கைமட்டும் லட்சியமாகக் கொண்டு ஏனைய வற்றை லட்சியமாகக் கொள்ளாதிருத்தல் சிறப்பன்று. தவிர, ஏதாவ்து ஒரு கருத்தை நிலை நாட்டச் செய்வது இலக்கியமாகாது.

தமிழர்கள் இலக்கியம் என்பதை எத்தகைய பெய ரால் வழங்கினர் என்பதனை நோக்குழி அவர்தம் அறிவின் நுட்பம் விளங்கும். குறுகிய நோக்கின்றிப் பரந்த நோக்கு டன் செய்யுளென வழங்கினர். செய்யுளாவது யாது? விழுமிய கருத்துக்களை அவர் காலத்தில் சொல்லக் கேட்ட வற்றோடு ஒழியாமல் பிற்காலத்தார்க்கும் பயன்படுமாறு எந்த உருவத்தில் செய்யப்படினும் அதுவே செய்யுள். அப்பெற்றித் தாய செய்யுளே, உண்மையை வெளிப் படக் காட்டும். தழுவிச் செய்யப்பட்டோ, உண்மையை மறைத்துப் பொய் கலந்து செய்யப்பட்டோ இருப்பின் அஃது இலக்கியமன்று. அதனால் பயன் பெறலும் அரிது. சிறிது பொய் விரவினும், சந்தனத்தில் தீய நாற்றம்

கலந்தது போலவும், பாலில் நச்சுக் கலந்தாற் போலவும் கருதப்படும். அதன்கண் அடங்கிய உண்மை பலவும் மாய்ந்து மறையும். ஆதலின் பொய்கலவாது உண்மை வெளிப்படுவதே செய்யுள்; உணர்ந்ததைச் சொல்வதே புலவர் அறமும் ஆகும். பண்டைப் புலவர்கள் வடவர் போன்று புருடார்த்தம் நான்கை மட்டும் பொருள் என்று கொள்ளவுமில்லை. நோக்கத்திற்காகச் செய்யுள் செய்தனர் எனக்கருதுதலும் தவறேயாம். என்னை? உலகப் பொருள்கள் அனைத்தும் இந்நான்குவகையில் மட்டும் அடங்காவென்பதை நன்குணர்வர். பொருள் என்றால் எல்லாப் பொருளும் அடங்கும். பொருள் என்பதற்குச் செல்வம் என்று மட்டும் பொருள் கொள்ளின், கல்வி எத னுள் அடங்கும்? அஃதும் ஒரு பொருள்தானே கல்வி ஒரு சிறந்த பொருள்; அளவு கடந்த சுவை தருவது; எல்லையற்ற இன்னல்கள் முதலில் நேரினும் பிற் பயன் மிக்குளது என்பதை வாழ்வாங்கு வாழ்ந்து தமிழ்மறை கண்ட வள்ளுவன் காட்டியதொன்றே தக்க சான்றாகும். அஃது,

> **உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்**
> **கடையரே கல்லா தவர்.**[14] (திருக்குறள் 395)

என்பது.

இக்குறள் செய்த வள்ளுவன் உள்ளம் அறியாது பரிமேலழகர் உரைக்குக் குற்றங் காணுதல் பற்றி என் மேல் காய வேண்டாம். அவர் கருத்தே பொருத்தமானது எனின் தமிழாசிரியர்களெல்லாம் மிகக் கொடியவர்க ளென்றல்லவா நினைக்க வேண்டும்? புலவர்கள் பண்பு

---

14. இல்லார்-வறியர்; ஏக்கற்றும்-ஆசையினால் தாழ்ந்து நின்றும்; கடையர்-இழிந்தோர்.

தத்தகையது? தம்பாற் சார்ந்தோரை உள்ளன்புடன் ஏற்று உண்டியும், உறையுளும் கொடுத்துக் கல்வி வழங்கி நன்னெறிக்கண் நிறுத்துபவர் புலவர்களன்றோ? அவர் களைக் கொடியர் எனக் கூறின் எவரேனும் ஒப்புக்கொள் வாரோ? ஈண்டுக் கூறிய உடையார் என்பதற்குப் பொரு ளுடையர் என்ற பொருள் பொருந்தாது. சிந்தையின்கண் அறநெறி சிறந்தாரே உடையார் என்றது உணர்க. இக் குறட்பாவில் அமைத்த வள்ளுவன் கருத்தை யான் ஆய்ந்ததே பொருந்தும் என்பதுபோல் தோன்றுகின்றது. இக்குறட்குப் பரிமேலழகர் கொண்ட கருத்தோடு என் கருத்தையும் ஒப்பிட்டுக்காண வேண்டிச் சுருங்கக் கூறு கின்றேன்.

பரிமேலழகர், இக்குறளில் கற்றார் எனும் எழுவாய்க் குப் பயனிலையின்று எனக் கொண்டு உரை எழுதிப் போந் தார்.

அதை முதலிலேயே மறுக்கின்றேன். ஆங்கில, ஆரிய மொழிகளில், பயனிலையில்லாமலோ, எழுவாய் இல்லா மலோ எழுதுவதைப் பார்க்கலாம். ஆனால் தமிழில் எழு வாய் இல்லாவிடினும், பயனில்லை ஒன்று நின்றே எழு வாயை உணர்த்தும் ஆதலின், எழுவாயைக் காட்டினும் பயனிலை இன்றியமையாதது என்பது விளக்குகின்ற தன்றோ? அவ்வாறிருக்க, கற்றார் எனும் எழுவாய்க்குப் பயனிலையின்று என்ற கூற்றுப் பொருத்தமானதன்று.

இக்குறட்பாவிற்கு என் கருத்தை வெளியிடுகின் றேன். முதலடியில் உள்ள முதற்சீர் "உடையார்" என் பதைப் பயனிலையாகவும், இறுதிச் சீர் "கற்றார்" என் பதை எழுவாயாகவும் கொண்டு, உடையார் கற்றார் என நிறுத்துக. இச் சொற்றொடரின் பொருள் "எல்லாம்

உடையவர் கற்றவர்கள்'' என்பது. இக்கருத்து அறிவு டையார் எல்லாம் உடையார் என்ற பிறிதொரு குறளடி யால் தெளிவுறும். பயனிலை முன்வருவது எற்றுக்கு எனின் அது, 'கண்டனன் சீதையை.........' என்பது போலச் சிறப்புத் தருதற்கென்க. இல்லார்போல் என்று கூறினார். 'இன்மையின் இன்மையே இன்னாதது' எனப் பிற் கூறுகின்றமையின் 'வறியரைப்போன்று' என்பது கருத்து. முன் என்றார் கற்குமுன்னே இல்லார் படும் துன் பம் போல அடைய நேரினும் என்றற்கு. இனி இரண்டா மடியில், முதலடியிற்போலப் பயனிலையை முற்கூறி எழுவா வாயைப் பின் வைத்தார் 'கடையரே கல்லாதவர்' என. இப்பொருளே வள்ளுவர் உள்ளங்கொண்டிருப்பர் எனத் துணியலாம்.

# இலக்கியத்தில் புது முறைகள்

கூட்டுறவற்ற தனிவாழ்வு மக்கள் இயல்பில்லை. அத னால் கூடிவாழும் நாகரிகமாந்தர் மொழி எதுவும், தன் அளவில் அளவிலா வளமுடையதாயினும், தன்னோடு நெருங்க நேரும் பிறர் மொழிகளொடு தொடர்பு கொள்வ தும் இயல்பாகும்.

ஞால மொழிகளில் தமிழ் காலத்தால் மிகப் பழைமை யும், தோலாச் செய்யுட் செல்வச் சீலத்தால் தன்னிகரற்ற தனிச்சிறப்பும் உடையது. எனினும் பிறமொழி மாந்தர் நிறைமொழி நலங்களை அறவே வெறுத்து இகழ்ந்து விலக்கி வளம் வறண்டு வாழ்விழந்த சில பிறமொழிகள் போலாது, தமிழ் தன் சொல்லியல் கெடாமல் எல்லா மொழியிலும் ஒல்லும் வாயெல்லாம் நல்லன கொண்டும் கொடுத்தும் உறவறம் ஓம்பும் திறம் குறையாச் சிறப் பொடு நின்று நிலவுகிறது.

அறப்பழங்காலச் சிறப்பொளி மிளிரும் தனித்தமிழ்க் கனியொடு மலர்கள் கமழும் செய்யுள் பல உள. பின்னர்ப்

பன்னூலும் தன்னொடு பழகிய ஆரியர் யவனர் சோனகர் சீனர் போற் பிறமொழியாளர் உறவினைச் சுட்டும் குறிகளும் தமிழில் செறியக் காண்குவம்.

தமிழரொடு பழகிய பிற மொழியாளருள் நெடுந் தொடர்புடையார் வடபுல ஆரியர். அவர் மொழி, நிரம்பிய இலக்கணமும் திருந்திய இலக்கணமும் பொருந்திப், பெருமையும் வளமும்பெற்றிருந்தது. அதனால் தமிழ் ஆரியத் தொடர்பால் துறை தொறும் அடைந்த பல நலங்களும் சில கெடுதியும் முளையும் களையுமாய் விளையலாயின.

முதலில் ஆரியச் சொற்கள் அளவிறந்து தமிழில் புகுந்து வழங்குகின்றன. அரிய புதுக்கருத்துக்களுக்குரிய சில சொற்களைக் கொண்டதோடு அமையவில்லை. எல்லாத் துறையிலும் பல்லாற்றானும் தமிழரொடு ஆரியர் பழகவும், நாடொறும் தமிழை ஆரியர் பயிலவும் தொடங்கினர். அன்றியும் மதம் கலை அறிவியல் வாழ்க்கைத் துறைகளில் இருவரும் நெருங்கி வாழவும் நேர்ந்ததால், ஆரியச் சொற்கள் அளவிறந்து தமிழில் வழக்கு, செய்யுள் இரண்டினும் விரவிப் பெருகலாயின. துவக்கத்தில் வடசொல் தமிழின் எழுத்தியற்கேற்ப உருவமாறியும், மொழிமரபு தழுவியும், மருவியும் திரிந்தும் அருகி ஆங்காங்கே அறிஞரால் மட்டும் ஆளப்பட்டன. பிறகு ஆரியர் தமிழில் கவிதைகள் புனையவும், வடமொழிக் கதைகளை மொழி பெயர்த்திடவும் முயன்றனர். அதனால் நாளடைவில் எண்ணிறந்த வடசொற்கள் தமிழிற் கலந்தன. எனினும், நெடுங்காலம் அவை தமிழிலக்கண அமைதி மாறாமலும் மரபு வழுவாமலும் இருந்துவந்தன. காலம் கழியக்கழிய, வடநூல் வல்ல பார்ப்பனரும் சமணரும் தமக்கினிய வடசொற்றொடரையும் தமக்கு எளிய அம்மொழி நூல்

முடிபையும் மரபு கருதாமல் தமிழில் முடைந்து மகிழ்வ ராயினர். தமிழ் மரபுணர்ந்து பேசாத வடநூல்வல்ல உரைகாரரால் இத் தகவிலா வழக்குப் பெருகி, தமிழ் ஒரு தனிமொழி அன்றெனை இகழும் பிரயோக விவேகம், இலக் கணக் கொத்துப் போன்ற பனுவல்களும் தமிழில் எழுதப் பட்டன.

அன்றியும், தராதரமின்றித் தத்தம் கொள்கையும் புனைகதைகளும் தமிழ்ப் பாட்டோடு உராயப் பரப்பியும், வேறு பலவற்றையும் விரகொடு புகுத்தியும் கவிகளும் காவியங்களும் சிலராற் புனையப் பெற்றன. இதனால், கவிதைத் கருவூலத்தோடு, குப்பையும் சில குவியலாயின.

அரும்பழங் கூத்தும், 'பொருநர்' 'நடிகர்' கலையும் மறையலாயின. இயல்—இசை—கூத்து எனும் மூவகைத் தமிழில், முதலது திரிந்தது; மற்றவை இரண்டும் பெயரளவல்லால் வாழ்வை இழந்தன. பண்ணும் கூத்தும் எண்ணுவாரின்றிப் பயிற்சியற்று இறந்தன. அவற்றிற்கு மாறாய், உலக வாழ்வினில் உவர்ப்பை ஊட்டி, முயற்சி யில் அயர்ச்சியும் வினைகளில் வெறுப்பும் விளைத்து. வாழ் வையே இகழும் தகவிலாக் கவிகள் தழையலாயின. இவ் வாறு, வடவர் தொடர்பால் தமிழில் வளம்பல வளர்ந் தன; உளம் தளர் கெடுதியும் ஒருசில புகுந்தன.

இனி, யவனர், கிரேக்கர், எகிப்தியர் போல்பவர் தொடர்பினால் தமிழர் வாணிபத் துறையிலும், அலைகடல் நீந்தும் கலத்திற வகையிலும், சிலை-கலை-சிற்ப முறையி லும், புதிய சொற்களும் பொருள்களும் இருமருங்கும் கைமாறிக் கலக்கலாயின.

''கலமிசை யவனர் ஓதிம விளக்கும்'';
''வாலுளைப் புரவியொடு வடவளந் தரூஉம் நாவாயும்';
''வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்,
புலித்தொடர்விட்ட புனைமாண் நல்இல்–விளக்''கும்;
(முல்லைப் பாட்டு 61-62)
''......உரையா நாவிற்; படம் புகு மிலேச்சரும்;
(ஷை 65-66)
''யவனர் இயற்றிய வினைமாண் பாவை,
பரூஉத்திரி கொளீஇய குரூஉத்தலை நிமிர்எரி
..........................................................
......வெள்ளி அன்ன விளங்கும்''
(நெடுநல் வாடை 101, 103, 110)
''பொன்னொடு வந்து கறியொடு பெயரும்''
யவனர் கலங்களும்''[15]

சிலைகளும், ''பளிங்கும்'' பழந் தமிழ்ப் பாக்களில் வழங்கக் காண்போம்.

ஆனால், யவனச் சொற் பல தமிழில் புகாமல், தமிழ் அம்மொழிக்குத் தந்த சொற் பலவாம். அரிசி 'ரிசி–ரைஸ்', இஞ்சி–'ஜிஞ்சிபர்' போன்ற பண்டப் பெயர்களைப் பண்டை யவனர் தண்டமிழ் மொழியில் கொண்டு மகிழ்ந்தனர். 'ஓரை' போன்ற தனித் தமிழ்ச்

15. கலம்-கப்பல்; யவனர்-உரோம் நாட்டினர்; ஓதிம விளக்கு-அன்ன வடிவ விளக்கு; வால்-வெண்மை; உளைப்புரவி-தலையாட்டத்தை யுடைய குதிரை; நாவாய்-கப்பல்; வலியுணர் யாக்கை-வலிகூடின உடம்பு; வன்கண்-வீரம்; புலிதொடர் விட்ட-புலிச் சங்கிலி விடப் பட்ட; இல்விளக்கு-வீட்டு நிலைவிளக்கு; உரையா நா-சொற்களைச் சொல்லாத நா (ஊமை); படம்-சட்டை; பரூஉத்திரி-பருமையான திரி; கொளீஇய-பந்தங்களில் கொளுத்திவைத்த; குரூஉ-நிறம்; நிமிர்எரி-மேல் நோக்கி எரியும் விளக்கு; கறி-மிளகு.

சொற்களைப் பொருளறியாத பிறமொழி வாணர் யவனம் என்றெண்ணி மயங்கிக் கூறினர். ஆயும் அறிவுபோய சில தமிழரும் அதனை அப்படியே ஆளலாயினர்.

யவனருக்குப் பிறகு, சிரியக் கிறித்தவர், சோனகர் (அரபியர்) தமிழகம் புகுந்து தங்குவாராயினர். விரிமனத் தமிழர் பரிவொடும் அவரை நல்வரவேற்று (உபசாரம்), வேளாண்மை செய்து, தாயக உறையுளும் நாயக உரிமையும் தந்து, தமர்போல் உறவும் உதவினர். வந்தவர்தம் மொழி வளமிலாமையினால், செந்தமிழ் அவர்தம் சேர்க்கையால் பெற்ற ஊதியம் பேசப்போதா. அவர்க்குப் பின் இவண் உற்ற மகமதியர் ஆட்சியில், அவர்மொழி சிலபல தமிழிற் புகுந்தன. பசலி, ஜமாபந்தி, பைசல், மகூதி, நிக்கா, ஜில்லா, சாகிபு, தாசில், சுல்தான் போன்ற சொற்களும் கருத்தும் தோன்றி வழங்குவ. சட்டை, உருமால், குல்லா, தொப்பிகள் எல்லாம் புகுந்தன. தர்பார், சர்க்கார், கொத்துவால், சாவடி, தொத்தத் தொடங்கின. சலாமிடல் தமிழில் சலுகை பெற்றது.

மகமதியர் ஆட்சியின் வீழ்ச்சியோடு மேற்புல அயல் மொழியார் பலர் தோன்றத் தொடங்கினர். போர்த்து கேசியர், டச்சு மொழியாளர், ஆங்கிலர் ஒருவர்பின் ஒருவராய் வாணிப வேட்கையால் வந்து புகுந்தனர். அவர்தம் உறவால் சில ஐரோப்பியச் சொற்கள் தமிழிற் கலந்தன. சன்னல், சாவி, அலமாரி, போத்தல், கோப்பை, பித்தான், பிராந்தி, பென்சில், பேனா என்னும் சொற்பல பின்னிப் பிணைந்தன.

இவருள், ஆங்கிலர் இறுதியில் இங்கே இருந்து அரசாண்டனர். அவர்தம் தொடர்பால் ஆங்கிலச் சொற்

களும், அரசியல் அறிவுத் துறைகளிற் பல புதுக்கருத்தும் கொள்கையும் தமிழில் புகுந்து வளம் தருகின்றன. சிவில் -கிரிமினல் சட்ட திட்டங்களும், எல்லா மாந்தர்க்கும் ஒத்தியல் முறைகளும், உரிமை உணர்ச்சியும், புத்தகசாலே, தந்தி, தபால், மோட்டார் வண்டியும், இருப்புப் பாதை நெடுந்தொடர் வண்டியும், விண்ணூறு விமானம், வானொலி வகைகளும் எண்ணிறந்தனவாய் எழுந்திடம்பெற்று இயங்கித் தமிழுக்குப் பயன் தருகின்றன. தெருட்டத் தேருக் குருட்டுப் புலமையின் மூட நம்பிக்கைகள் முடம் படலாயின. உண்மையில் ஊன்றி உவக்கும் பழந்தமிழ்ப் பண்பு மீட்டும் இளைஞர்பால் இந்நாள் தழையக் காணுவம். இளைய ஆங்கில இலக்கியத் தொடர்பால் முதிய தமிழ்மொழி, புத்துயிர்ப் பெருவளம்பெற்று வளர் கின்றது. அதன் பயனாகத் தமிழ் மறுமலர்ச்சி தழையத் தொடங்கி இலக்கிய உலகில் இருள் கெடுத்து இன்னொளி இலகி வருகின்றது.

விஞ்ஞான அறிவொளி வீசத் தமிழ்ப் பயிர் வீறு பெறுகின்றது. அடிமையில் மோகமும் அச்சமும் ஒழித்து, குடிமையின் பெருமையும் உரிமையும், உழைப்பால் ஆக்க மும் தேட ஊக்குவர் இளைஞர். அரசியல் வாழ்க்கை, சமுதாய ஆட்சி, பொருள்நிலை அனைத்திலும் அறவள ஆட்சியின் மாட்சியை அவாவுகின்றனர். பழைமையில் பிழைகளைப் பரிவின்றிப் பறிக்கின்றனர். புதுமையில் நல்லன போற்றி ஏற்ற வருகின்றனர். பிளவும் பகைமை யும் வளர்க்கும் வழக்கினைத் தளரா முயற்சியால் தகர்த் தெறிகின்றனர். சமயப்பெயரால் தழையும் சதிகளைக் குமைக்கும் முயற்சியில் குதூகலிக்கின்றனர் சாதிபேதச் சடங்குகள்போன்ற பேதைமைஒழிக்கும் பெருமித உணர் வால் மேதகு புலவர் தீதிலாப் புதிய வேதமந்திரம் ஓது

கின்றனர். இவையெல்லாம் தமிழில் சுவைமிகு புதிய இலக்கிய உருவெடுத்து உலவுகின்றன. பாரதியார் நவ சாம கீதங்களும், பாரதிதாசர் புதிய கீதையும் இடை இருட்காலத் தமிழர்பால் வந்த 'நெடுநீர்-மறவி-மடி-துயில் -நான்கு கெடுநீர்க்' குற்றமும் அடும் அறக் கனிக்கடல் அமுத கலசங்களாம். இக்கவிகளைப் போலவே புதிய கட்டுரைகளும் தமிழர் உளத்துறை அடிமைமோகப் பேய் களை மீட்டும் குடிபுகா தோட்டும் குறிக்கோள் உடையன. புதிய தமிழிலக்கியப் பொழில்கள், உணர்ச்சி வேகமும் உண்மைசால் உரனும் பூத்து, வண்ணமும் மணமும் கண்முதற் பொறிகளைக் கருத்தொடும் கவர்ந்து, எண் ணரும் எழில்நலம் ஈத்துவக்கின்றன. உயிரிலா உரு வெளிப் புலமையைப் புத்திளங்கவிகள் முதுமைத் தாழி யில் மூடித் தாழ்த்து ஆழப்புதைத்தினி அடக்கம் செய்யும் அரும்பணி துணிந்துளர். அவ்வுரப்படப்பையில் தமிழ் மறுமலர்ச்சி தழைந்து வருகின்றது. *

---

* திருச்சி அனைத்திந்திய வானொலி நிலையத்தில் பேசிய பேச்சு—11-7-47.

# நக்கீரரும் கருத்துரிமைப் புலமையறமும்

நாகரிக மக்கள் பயிலும் கலைகளெல்லாம் உயர்ந்த நோக்கும் சிறந்த பயனும் உடையவாகும். எனினும், அவை பண்பாலும் பயனாலும் பலதிறப்படும். ஓவியம் இசை போல்பவை பொறியுணர்வால் இன்பம் பயப்பவை. கவிகளோ பொறிப் புலன்கள் தரும் சுவையோ டமை யாமல், அறிவு துணையாகத் தூய கருத்தின்பம் தருப வைகள். ஓவியம் கட் புலனைக் கதுவி அழகுணர்வாற் சுவையூட்டும் கலையாகும். இசைக்கலை செவி துணையாக உளங் குளிர்வித்து இன்பந்தரும் இயல்பிற்று அவ்வாறே மணமும், ஊறும், உணவும் முறையே மூக்கும், மெய்யும், நாக்கும் துணையாய் மனங்கனிவித்து இனிப்பிக்குந் தன்மையவாம். சான்றோர் செய்யுளோ இவை போலன் றிப் பொறித் துணையின்றியும் கருத்தி னுறைத்து மனங் கனிவித்து அறிவின்பம் அளிக்கும் கலையாகும். பொறிப்புல னுதவும் சுவைகள் உணர்வொடு புணர்ந்து உள்ளங் குளிர்வித்து உவப்பூட்டும் பெற்றியன. அவற்றின் சுவை

நுகர்வால் உவகை பெறுவது உளத்தளவேயாகும். ஆனால் ஆய்தொறும் தூய அறிவின்பம் அளிப்பது செய்யுட் செல்வமெனும் கவிக்கலையின் தனிச் சிறப்பாகும்.

இனி, கலைகளால் பெறுமின்பம் நல்லதும் அல்லதும் என்று இரு வகைத்தாம். மனவெழுச்சி தருமுறையில் சுவையனைத்தும் ஒருமைப் பண்புடையவேனும், அவை அவ்வச் சுவைப் பயனால், அச்சுவை விளைவிக்கும் இன்பப் பண்பால், நயனும் கயமையும் நல்கு மியல்பால், தூயவும் தீயவும் என இருதிறத்தவாய் வகுக்கப்பெறும். அப்பாகுபாடு அதனதன் பயனோக்கும், பொருட்போக்கும் பற்றியதாம். உளங்களிக்கும் கலைச்சுவைகள் போலவே, கவிதரும் அறிவின்பமும் விழுமமும் (துன்பமும்), விழுப்பமும் (மேன்மையும்) தழுவுவதுண்டு. கேவலம் காமக்களி வளர்த்து மனம் மாசுபடுத்துங் கவியினம் அறிஞரால் வெறுக்கப்படும்; ''தீதொரீஇ நன்றின்பாலுய்க்கும்'' செய்யுள்கள் நன்மக்களாற் பொன்னேபோற் போற்றப்படும்.

இன்னும், இயற்பாக்கள் குற்றமற்ற இன்புதவு மியல்பும், இயற்றும் புலவர் நோக்கும் கொண்டு, பல வேறு நலமீயும் பெற்றியவாம். சிலகவிகள் பலநலம் பயக்கும் பரிசுடையவாமேனும், அவற்றுள் சிறந்து மிகும் குறிக்கோளால் அவ்வவற்றை வகுத்தமைத்தல் மரபாகும். இயற்கையெழில் நயப்புணர்த்தல், அறமுரைத்தல், மனங் கனிய மகிழ்வூட்டல், நவையறு சுவையால் அறிவின்பமளித்தல், இகலறு நகை விளைத்தல், தூயன வாய்ந்து துணியத் தூண்டல், செயற்கரிய செய்வித்தல் போன்ற புலவர் கருத்துவேறுபாடுகளால் கவிகள் பலவகைப்படும். இவ்வேறுபாடுகளுக்கு அடிப்படையாவது அவ்வக் கவியியற்றும் புலவரின் உளப்பாங்கும், குறிக்கோளுமே

யாம். நாகரிக மொழிகளிலுள்ள இலக்கியம் (அதாவது செய்யுட் செல்வம்) எல்லாவற்றிலும் அவ்வப்புலவரின் சிறந்த குறிக்கோளால் அவரவர்களின் தனிப்பெருமை கொள்ளக் காணலாம். நோக்கால் நன்மை குறிப்பன வெல்லாம் நீக்காது கொள்ளப்பெறும் எனினும், தறுகண் முதலிய பெருமித வகையோடு உவகை, அவலம், நகை, மருள், அச்சம், தீதறுவெகுளி, பழிபடா இளிவரல்போன்ற சுவைகளை விளக்கும் சிறப்பியல்புகளால் ஒவ்வொரு புல வனின் செய்யுட் குறிக்கோள் சிறப்புடையதாகும். பரணி களால் அறப்போர்மறமும் வெற்றிப் பெருமிதமும், அகத் துறைகளால் தூய காதலுவகையும், அங்கதவகையால் நகையும் இளிவரலும் எழுவது இயல்பு. சயங்கொண் டார் கவிகள் அறமறமும் வென்றிப் பெருமிதமும் விளக் கும். கபிலர் கவிகள் கடவுள்காதல் கனிவிக்கும். உலோச் சனர் பாட்டு இயற்கை யெழில்வளம் கிளக்கும். வள்ளு வர் வெண்பா இறவா அறமும், கம்பர் விருத்தம் மக்கட் சால்பும் மணக்கும்.

அவ்வாறே, நக்கீரர் பாட்டின் தனிச்சிறப்பு அஞ்சா நெஞ்சுரனும் கருதியது கரவா உள்ளப் பெருமையு மாகும்.

இப் பழம்புலவரின் செய்யுட் சிறப்பை ஆராயுமுன், ஆய்ந்தறிய வேண்டுவ தொன்றுளது. அப்பெயருடைய புலவர் தமிழகத்தில் பலர் வாழ்ந்தாரெனத் தெரிகிறது. முற்காலத் தொகைநூற் புலவர் வரிசையில் முதலிடம் பெற்ற நக்கீரர் ஒருவர்; பிற்காலத்தில் திருமுறைத் தொகையில் முருகாறொழியப் பிறபிரபந்தங்களியற்றிய நக்கீரர் வேறொருவர். யாப்பு நூலியற்றிய இடைக்கால நக்கீரர் இன்னும் வேறு ஒருவர்; நாடகம் பாடிய நக்கீரர்

மற்றொருவரென்பாரும். உளர். பண்டைக்காலத்தும், அப் பெயரோடு வரும் செய்யுளனைத்தும் செய்தவர் ஒரே நக்கீரர் எனக் கருதுதற்கில்லை. ஆராய்ச்சியாளர், முருகாற்றுப்படை பாடிய நக்கீரர் வேறு; நெடுநல் வாடையும் பிற பழம்பாட்டும் இயற்றிய நக்கீரர் வேறுதல் வேண்டுமெனக் கூறுகின்றனர். இந்த ஆராய்ச்சியில் இங்கு நான் இறங்கவில்லை. சிவபிரான் நுதல் விழி நெருப்பையும் அஞ்சாமல், அவர் கடவுட் கவியிலும் குற்றங் கூறிய நக்கீரர் கவிநோக்கும் கருத்துரிமைத் தனிச் சிறப்பும் மட்டுமே இன்று இங்குப் பேசுமாறு பணிக்கப்பட்டுள்ளேன். அவ்வரலாறே, நிகழாத பிற்காலக் கட்டுக்கதை எனக் கருதுவாரும் உளர். அதனுண்மை யாதாயினுமாகுக. அவ்வரலாற்றுக்கு மூலமாயிருந்த நக்கீரர் யாராயினுமாகுக. அவர்கால முடியுடைப் பாண்டியனும் அடிதொழ, அவன் மன்றப்பெரும்புலவரனைவரும் மதித்து வணங்கிப் பாராட்டும் கடவுட் புலவரான இறையனார். அவ்வேந்தன் கோமாட்டியின் கூந்தற் சிறப்பை வியந்து நயம்படப் பாடினர்:—

**கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி**
**காமஞ் செப்பாது கண்டது மொழிமோ**
**பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்**
**செறியெயிற் றரிவை கூந்தலின்**
**நறியவும் உளவோ நீ அறியும் பூவே.**[16]

(குறுந்தொகை : 2)

---

16. கொங்கு-பூந்தாது; தும்பி-உயர்சாதி வண்டு; காமம் - விருப்பம்; மொழிமோ-சொல்க; கெழீஇய-பொருந்திய; இயல்-சாயல்,மென்மை; எயிறு-பல்; அரிவை-பெண்; நறியவும்-நறுமணங்கொண்ட மலர்களும்.

என்பது அப்பாட்டு. நலம் புனைந் துரைத்தல் எனும் அவ் அகத்துறைப் பாட்டில் நக்கீரர் அற்றம் நோக்காது குற்றம் கூறினார். அதற்குச் சினந்த இறையனார் அழலெழ விழித்ததற்கஞ்சாமலும், வெறுத்த வேந்தன் வெகுளியை மதியாமலும், தாம் கூறிய 'குற்றம் குற்றமே' என வற்புறுத்தி வாதிக்கமுற்பட்ட நக்கீரரின் துணிவு வியப்போடு நயக்கத்தக்க பண்பல்லவா? வேந்தன் வெறுப்பையும், மன்றத்தா ரவமதிப்பையும், இறையனார் சினத்தையும் பொருட்படுத்தாமல், தான் மெய்யெனக் கண்டதைப் பொய்பட மறையாமல் உட்காதுரைத்த புலவனின் உண்மையிலூன்றிய உள்ளத்துரனும், கருதியது கரவாதுரைக்கும் கருத்துரிமைப் பெருமையும் பேணிச் சிறந்த அப்புலவர் திறத்தை வியந்து பாராட்டுவது அறிவறமாகும்.

தான் மதிக்கும் தன்காலப் புலவரெலாம் பிழையான்றெனப் புகழும் இறையனார் பாட்டில், தான் கண்ட தவறுரைக்கத் துணிந்த தமிழ்ப் புலவன் அறிவுரத்தினழகு போற்றற் பாலதன்றோ? இங்ஙனம் அவர் கூறியது, பிறர் புகழ் பொறாத அழுக்காறுபற்றி யன்று. மகளிர் குழலில் 'இயற்கை மணமின்மை உலகறியும் உண்மையன்றோ? அதற்கு மாறாக, மன்னவன் தலைவி கூந்தல் மட்டும் மட்டவிழ் நறுமணம் வாய்ந்துள தென்பது வாய்மையாகாதே? மன்னனை மகிழ்விக்கச் சொன்ன இப்பாட்டிலுள்ள பிழையைக் கரவாதுரைத்து உள்ளத்தால் பொய்யாதொழுகிய பெருமை வாய்ந்தவர் நக்கீரர் என்பது இக்கதையால் மட்டும் அறியப்படுவதன்று. மதுரைப் பட்டி மண்டபத்தில், 'தமிழ் தீதென வுரைத்த காரியத்தால்' வேள் குயக் கொண்டானை மாளப் பாடி பிறகு சான்றோர் வேண்டச் செந்தமிழ்ச் செய்யுளால் அவன் உயிர்

மீளப்பாடிய நக்கீரர் கதையும் அவர் உள்ளப் பான்மை யையே உரைப்பதாகும்.

இன்னும் இவர் பெருமை விளக்கும் சான்று வேறொன்றுளது. "தண்டமிழ் வரைப்பில் வண்புகழ் மூவர்" முடிவேந்தர் வெகுளியை இகழ்ந்து, அம்மூவரும் வெறுக்கும் குறுநிலம் ஆண்ட வேள்பாரியை,

**'ஏந்து கோட்டியானை வேந்த ரோட்டிய**
**கடும்பரிப் புரவிக் கைவண் பாரி'**[17]

(அகநானூறு 78: 21-22)

என்று, அவன் பெருமை பாராட்டி 'நலந்தலைக் கானத் தாளியஞ்சி' எனும் அகப்பாட்டாற் புகழ்ந்து பாடிய புலத்துறை முற்றிய தலைத் தமிழ்ப் பாவேந்தரான நக்கீர ரின் அறிவறச் சிறப்பை நயவாதவரும் நானிலத் துளரோ? அகத்தழுக்கற்ற அவர் அறமறவா உளப் பெரு மைக்கு, அவர்கால அந்தணக் கபிலரின் செந்தமிழ்க் கவி நலம் நயந்து புகழும் அவர் சால்பொன்றே சான்று பகரும். தொன்றுபுகழ்ப் பாண்டியன் மன்றத் தீண்டிய புலவருள் தலைமை தாங்கி, 'வாய்மொழிக் 'கபிலன்' என்று குன்றமொன்றுடை வேள்பாரியின் நண்பனை பார்ப் பனப் புலவனைப் பாராட்டி, என்று முள செந்தமிழில் இனிய கவி பாடிப் பொன்றுதல் அறியாப் புகழ்மிகு மிவர்தம் பெருமை, பிறர் புகழ் பொறுத புலவர்க்கென் றும் அறிவறமுணர்த்தப் பிறந்தவர் இவரெனச் சிறந்து விளங்கும்.

---

17. ஏந்து-உயர்ந்த; கோடு-தந்தம்; கடும் பரி-விரைவாகச் செல்லும்; புரவி-குதிரை.

மாயாத வாய்மையும், கரவறியாக் கருத்துரிமைத் தனிச் சிறப்பும், இவர் செய்யுட் செவ்விக்கு ஏற்றம்தரும் ஊற்றமாகும். அரியபெரிய உண்மைகளைத் திட்ப ஒட்பத் திறம்பட அஞ்சா துரைக்கும் அறிவறம் துறந்து புலவரைச் "சொன்னதைச் சொல்லும் கிள்ளைகளாக்கும்" கொள்கையும் வழக்கும் வெறுக்கத்தக்கவை. நல்லவையெல்லாம் சொல்லற் குரியவை. கல்லார், கற்றார் எல்லார்க்கும் நல்லது, மெய்யெனக் கண்டதை பொய்யாதுரைக்கும் கருத்துரிமை. இச்சால்புடைய புலவர் எல்லாமொழிகளிலும் என்ஞான்றும் சிறந்து விளங்குவர். பழந்தமிழுலகில் அத்தகவுடைய வித்தகர் பலராவர். வள்ளுவர் வாய்மையும், கபிலரின் மெய்ம்மையும் வியவாத நாள் இல்லை மக்களுக்குள்ளே பிற்காலத் தமிழகத்தும் கம்பர், சேக்கிழார் போன்ற மெய்ப் புலவர்க்குப் பஞ்சமில்லை. இவர் போல்வாரெல்லோரும், தத்தம் செய்யுளில் நித்தமும் நிலைத்தவுண்மைகள் கரவாதுரைக்கும் பொய்யில் புலவராவர். எனினும் கண்டது மொழியும் கவிக் கருத்துரிமையைக் கையாண்ட பெருமையோ டமையாமல் அவ்வுரிமைக்காக அஞ்சாமல் யாரொடும் போர்புரிந்து அப்புலமை அறத்தைப் போற்றிய தனிப்பெருமை நக்கீரருக்கே உரியதாகும். அவ்வறிவறம் மறந்ததால் பிற்காலப் புலமை வறங்கூர்ந்தது, தமிழளவில் தற்காலம் அத்திறம் புதுக்கிய வித்தகர், நாட்டன்பூட்டித் தமிழர் செவியில் தன் பாட்டின்பத் தேன் பாயவைத்த பார்புகழ் கவிஞர் பாரதியாராவர். கருத்துரிமை எல்லார்க்கும் நன்றாம்; கவி யியற்றும் புலவருக்குத் தனிச் சிறப்பாம்.*

---

*திருச்சி அனைத்திந்திய வானொலி நிலையத்தில் பேசிய பேச்சு. 14-4-43.

# இரு பெருங் கலைகள்

## பகுதி க.

ஒவ்வொரு மக்கள் வகுப்பின் உயிர்ப்பண்பும் அதன் கலையறிவில் நன்கு வெளிப்படும். அதன் மெய்ம்மைத் தோற்றம் அதன் இலக்கியத் தொகுதியிற் காணப்பெறும். முன்னேற்றம் முழுதும் தளர்வில்லாத இயற்கைப் பண்புகளாகிய பசி, பாற்பிரிவு இவற்றால் உந்தப்பெற்று நிலையுறுகின்றது. அதுதான், ஏற்றம் பெற்ற மக்கள் தொகுதியுள் காதற் காப்பியங்களாகவும் போர்ப் புறப்பாட்டுக்களாகவும் அவர்கள் இலக்கியங்களுள் மலர்கின்றது. பழங்காலத் தமிழர் கலையறிவின் வரலாறுதானும் இப்பொது விதிக்குப் புறனடையன்று. உண்மையில், தமிழ்ச்சங்கப் பழம் பாடல்கள் அல்லது நூற்றொகுதிகள் யாவும் அகம், புறம் என்னும் இருபெரும் பிரிவில் அமைந்தமையை நாம் காண்கிறோம். அகம் என்பது காதல் உள்ளப் பாங்கினையும் அதன் பிற சார்புகளையும் வெளிப்படுத்தமையும் செய்யுட்களை முறையால் வரைந்து காட்டுகின்றது. அதுபோன்று புறம் என்பது இல்லின் புறத்தன ஆகும் மக்கள்

ஊதியங்கள் எல்லாவற்றையும் பற்றிய பாடல்களின் முழு எல்லையைப் பற்றியதேயாம்.

சம்ஸ்கிருத இலக்கியப் பரப்புள், செய்யுட்கள் யாவும், தர்ம, அர்த்த, காம, மோட்சங்களாய நான்கு புருடார்த்தங்களுள் ஒன்றையோ சிலவற்றையோ விரித்துரைப்பன ஆகும். இவ்விதிதான் சம்ஸ்கிருதச் செய்யுள் இலக்கியங்களின் எல்லாப்பகுப்புக்களுக்குள்ளும் நன்கு வற்புறுத்தப் பெற்றும் கையாளப்பெற்றும் உள்ளது. ஆனால், மிகப் பழைய தமிழ் இலக்கியங்கள் எல்லாம் தமிழ் மரபிற்கிணங்க, அகம் புறம் என்னும் இரு பிரிவினுண்ணேயே அமைந்திருப்பது நமக்கு முற்படத் தோன்றுகிறது. முறையானே எச்செய்யுளும் புருடார்த்தப் பகுப்பில் ஒன்றுள் அல்லது சிலவற்றுள் அடக்கப்பெறலாம். இவ்வாறே பழந்தமிழ்ச் சங்கப் பாட்டுக்களும் இந்நால் பகுப்புட்பட்டுப் பொருந்தித் தோன்றுமாறு வகைப்படுத்தலாம். ஆனால், மக்கள் ஊதியங்கள் எல்லாவற்றையும், ஒருவன் அக வாழ்க்கை அல்லது தனிநிலை வாழ்க்கை, புற வாழ்க்கை அல்லது பொதுநிலை வாழ்க்கை என்னும் இரு பகுப்புட்படுத்தும் தமிழர் வழக்கே பெரிதும் இயற்கையதாகவும் அறிவிற்கும் பொருத்தமானதாகவும் தோன்றுகிறது. சம்ஸ்கிருத நாற்பிரிவுகள் அளவை நெறியாற் சிறிது குறைபாடுடையனவாகத் தோன்றும். எடுத்துக்காட்டாக, கல்வி அல்லது கலையறிவு தன்னியல்பில் இந்நான்கனுள் முற்றும் முறையே அடங்காததாகவும், அர்த்தம் அல்லது காமத்தை யொக்க இத்துணை கருதற்குரித்தாகவும் முதன்மைத்தாகவும் கொள்ளப்பெறவில்லை. இதற்கு மாறாக, இந்தச் சம்ஸ்கிருதப் பிரிவுகள் தமிழிலக்கண ஆசிரியர்கள் உயர்த்துரைக்கும் இருபெரும் பிரிவுகளுள் மாறுபாடின்றி எளிதில் அடங்கும். இதுவே,

தமிழர், சம்ஸ்கிருதக்காரர் இவர்கள்தம் இலக்கியங்களுள் தாம் தாம் கொள்ளும் பழமையான முதல் வேறுபாடாகத் தோன்றுகிறது.

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே ஆரியர், தமிழர் ஆகிய இவ்விரு பேராறுகளும் தலைமணந்தன. அந்நாள்தொட்டு இக்கலப்பு இடையறாது இனிதாய் ஒழுகித் தமிழகமென்ற தென்னாட்டைச் செழிப்பிக்கின்றது. பாரத பூமியின் பண்டைக் கலையறிவுப் பேராறுகள் இரண்டும் கலப்புறும் தலையிடமாகிய பிரயாகையாக நம் தொல்காப்பியர் நூலைக் கொள்ளலாம். இவற்றுள் ஒன்று கரிய தெளிநீர் யமுனையும், பிறிதொன்று செழிப்பிக்கும் செங்கலுழிக் கங்கையும் ஆம் எனலாம். இவ்விரு கலையறிவின் முதற் கலப்பினைப் பற்றிய சான்றுகள் பலவற்றையும் இத் தொல்காப்பிய நூல் உடையது. இக்கலப்பு நிகழ்ந்த ஈராயிரம் ஆண்டுகட்குப் பின்னுள்ளநாம், இவ்விரண்டும் கலக்கும் பிரயாகைக்குப் பன்னூறு கற்களுக்கு அப்பால் அத் தனிப் பேராற்றின் கரைக்கண்ணுள்ள காளிக்கட்டத்தில் நிற்பவராவோம். இவ்விரு கலையறிவுகளின் கலப்பினைக் காண விரும்பின், நாம், பிரயாகைக்குச் சென்று, இவ்விரு நீர்க் கலப்பின் வலியினையும், போக்கினையும் அறியலாம். உருவக நடையொழித்துத் தெளிவுறக் கூறின், இந்தப் பழமையான இரண்டு இந்தியக் கலையறிவுகளையும் ஒருவாறு அறிய விரும்புவாரொருவர் தமிழ்ப் பெரு நூலாகிய தொல்காப்பியத்தில் நுழைந்து ஆராயக் கடவர். தமிழருடைய கலையறிவுத் திறங்களைத் தீட்டிய இவ்வண்ணப் படம் தொல்காப்பியரை ஆராய்ந்ததனாலாகிய பயனேயாம்.

பண்டைத் தமிழ் நூற்களில் தெரிந்த அளவில், மிகப் பழமையான காலத்தே தமிழரின் கலை அறிவு தெளிவின

தாகவும், தன் வலியதாயும், அமைதியதாயும், தன்னியல் பியதாயும் இருந்தமையை நாம் இந்நூலாராய்ச்சியால் எளிதின் அறியலாம். ஆனால், ஆரியர் கலையறிவோ இதற்கு மாறாகக் கலப்பினதாயும், இணக்கின்றிக் கவர்த லுடையதாயும், தற்செறிப்புடையதாயும், பல்லியல்பின தாயும் இருந்ததாகத் தோன்றும்.

ஈங்கு இவற்றைச் சிறிது விளக்கமாகத் தெளிவிக்க யான் முயல்வேன். தமிழ்ச் செய்யுளின் அகப்பொருள் அல் லது இல்வாழ்க்கைப் பகுதியை நாம் முதற்கண் எடுத்துக் கொள்வோம். அக்காலத் தமிழர் ஏற்றமிக்க சீர்மையும், அமைவுடைய இல்வாழ்க்கையும் பொது வாழ்க்கையும் உடையராயிருந்தனரென மிக்க ஆராய்ச்சிமுயற்சியின்றித் தெரிந்துகொள்ளலாம். தமிழகமென்ற தம்நாட்டுள் பண்டுதொட்டு ஒன்றுபட்ட தொகுதியராய் அவர்கள் வாழ்ந்து வந்தனர். தமிழர் என்பர், சித்தியர் அல்லது திராவிட வகுப்பினரென்றும், இந்தியாவுக்கு வெளிநாட்டி லிருந்து வடகிழக்கு வடமேற்குக் கணவாய்களின் வழி யாய் உட்புகுந்தனரென்றும், தனக்குப் பின்னர்ப்போந்த ஆரியப் படைகளினுல் தெற்கின்கண் துரத்தப்பட்டன ரென்றும் கூறிச் சில பள்ளிப் புத்தகங்கள் இவர்களை வேற்று நாட்டினராக நாட்ட முயல்கின்றன. இக்கூற் றுக்கள் தமிழ் இலக்கியங்களுள் தெளியக் காணும் அகச் சான்றுகளுக்கு முற்றும் மாறுபட்டனவே. பல நூற் ருண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் இலக்கியங்கள், இவர்கள் வடக்கின்கண் வேங்கட மலையாகிய எல்லையினதும், தெற் கின்கண் குமரிமுனை, இலங்கைத் தீவம் இவற்றெடு தொடர்புற்றுத் தென்கடலுட் பரந்த நிலப் பரப்பினதும் ஆகிய நாட்டில் தொன்மக்களாக வாழ்ந்தனரென விளங்க உரைக்கின்றன. கலித்தொகை நூலிலுள்ள ஒரு பாடல்,

தமிழகத்தின் தென்பகுதியிலும் கடல்கோட்பட்டொழிய ஆண்டிருந்த மக்கள் வடபாற் சென்று குடியேறினரென்று தெளிவிக்கின்றது. தமிழர் யாண்டும் தென்னாட்டுத் தொன்மக்கள் என்றும், வடவாரியர் தமிழகத்திற் புக்க போது அவர்களைத் தமிழர் ஒருங்குடன்பட்டு ஏற்றுப் பேணிக் குடியேற்றுவித்தனர் என்றும் அவர்கள் இலக்கியங்களால் நாம் அறியலாம். ஆரியரை வடவாரியர் என்றும், அவர் மொழியாகிய சம்ஸ்கிருதத்தை வடமொழி என்றும், அம்மொழியோடு மாறுபட்ட தமிழ் மொழியைத் தென்மொழி யென்றும் பண்டைநூல்கள் குறிக்கின்றன. கடல் வரைப்பினதாய தமிழ்நாட்டுள் நெய்தல்நில மக்கள் இயல்பொடு பொருந்திய அமைதியான வாழ்க்கையைப் பெற்றிருந்தனரெனயான் வற்புறுத்துரைக்கின்றேன். தமிழர் பகைவரால் அலைப்பின்றி அமைதியான வாழ்வு பெற்றிருந்தனர். ஓரோர்கால் தமிழ்க்குடி மரபு வாழ்க்கைக்கு ஒத்தவாறு தம்முள் பொருதொழில் விளைத்தனரன்றிப் பிறர்பாற் போர் முனைப்பு, நாடுகவர் விளைமை இவற்றிற் கருத்திலராயிருந்தனர்.

ஆனால், வடவிந்தியாவில் ஆரியரோ எனின், தாம் குடியேறிய வரைப்பில், தம்மொடு என்றும் மாறுபட்ட பண்டைக் கானுறை மாந்தரிடையே ஒரு சிறு சீர்மையுற்ற குழுவினராயிருந்தனர். ஆதலின், ஆரியர், தம் குடியேற்ற வரைப்பகத்தே, சீர்மையில்லாத அநாரியக் கானுறை மாந்தர்களைப் பொருதுவென்று தம்சீர்மையையும் கலைச் செல்வத்தையும், நிலைமையையும் வலியுறுத்துக் காத்து வளனுறுத்தல் முதற்கடனாயிற்று. ஆதலின், ஆரியன் என்றும் பொருதொழிலினனாய்ப் பிறர் நாடு கவர் நினைப்பினனாய் இருத்தல் கடப்பாடாயிற்று. இதன் பயனாய் ஆரியன் தன்னாட்டமைதியையும்

இல்வாழ்வில் நம் இன்பங்களையும் கொள்ளுதற்கு இடன் இலதாயிற்று. அவனுக்குத் தற்காப்பே தனிக்கடனாயிற்று. இந்நிலை, அவன் தன் குடும்பத்தைப் போர்புரியும் வலியுடைய தாக்கிச் சமுதாயத் தொகுதியில் ஒரு பகுதியாய்க் கூட்டுறவுக் குறியாய்ச் சமைக்கத் தூண்டியது. அவன் என்றும் போர் செய்வார் பலரை வேண்டினன்; ஆதலின், பகைமை கொண்ட கானுறை மாந்தர்களையும் முருடர்களையும் பொருதற்குரிய ஆண்மக்களைப் பெருக்குதற்கு விரும்பினன். இந்நிலையில் ஆரியன் தன் காதலின்பத்தினும் ஆண்மக்கட் பேற்றிலேயே பெரிதும் கருத்துக் கொண்டனன். ஆதலின், அவன் காதலுக்கன்றி மகப்பேற்றின் பொருட்டே மணம் செய்தனன். அக்காலத்து ஆரியனுக்குத் தன் குடித்தூய்மை போற்றலே கடனாயிற்று. ஆதலின் தன் குலமகளிரையேனும் அந்நிய, பிற குடிப்பெண்களையேனும் விலைகொண்டாயினும் கடன் கொண்டாயினும் மணம் புரிந்து குடித்தூய்மைகாக்க விரும்பினன். குடும்ப நிலையில் காதற்குரிய பெருமையை அவன் சிறிதும் கருதவில்லை. ஆதலால், ஆரியன் மணத்தைத் தன் குடிச் சடங்காகக் கொண்டும், தன் கூட்டுநிலைக் குடியைப் பெருக்கித் தன் போர்த் திறத்தை வளர்த்துத் தன் பகைவரைப் பொருதழிக்கக் கருதினன் என நாம் அறியலாம்.

இதற்கு மாறாகத், தமிழனோ எனின், அமைதியும் செல்வமும் அளவின்றித் தந்த தன்னாட்டகத்தே பகைவரால் அலைப்பின்றி அமைதியாய் வாழ்ந்தனன். ஆதலின், அவன் இல்லின்ப வளத்தில் கவனம் செலுத்தினன். இன்புறு மணவாழ்க்கைக்கு முதலதாக அன்பு நிலையே மேலெனக் கருதினன். தமிழர் மணமுறைக்கெல்லாம் இருதலை பொருமையன்பும் காதற்கிழமையும் யாண்டும்

உரியவெனத் தமிழிலக்கியங்கள் கூறும். ஆனால், தரும சாத்திரங்களோ எனின், மணக்கப் புகும் மணமகன், தன் மணமகளை மணத்துக்கு முன் காணுதற்குத் தானும் இடம் வேண்டில. அவன் அவளைத் திருமணக் காலத்தில் தான் காணவும், தான் மணக்க நேர்ந்தவள்பால், தன் காதலைச் செலுத்தக் கற்கவும் வேண்டும். தமிழன் இன்ப வாழ்வு வேண்டியோனாதலின், தான்காதலித்தவளையே மணக்க நாடியதோடு, மணத்திற்கு முன்பே, தன்பால் அவள் ஒத்த காதலுடையாள் என்பதை அறியவும் நாடினன். தமிழன் தன் மகவின்பால், ஆரியனிற்றாழ அன்பு செய்தனனென்று கொள்ளற்க. தமிழனன்பு தன் காதலிபால் முந்துற்று நிலைத்தது. அன்பொத்த காதலர் ஈன்ற மகவு தன் காதற் பெற்றோரால் இயல்பாய் அன்பு செய்யப்பெற்றதென்க. சுருங்கச் சொல்லின் ஆரியன் மகப்பேறு காரணமாக மணந்தனன். பண்டைத் தமிழனே அம் மகவினை ஈன்ற தாயின்பாற் கொண்ட காதலால் அவள்பாற் பெற்ற மக்களைக் காதலித்தனன். தமிழ்க் குடித் தலைமகன், இன்ப இல்வாழ்க்கையே சிறந்ததென்று கருதி வற்புறுத்தினமையால், இருபாற் காதற் கிழமையே பற்றுக்கோடாக இருபாலரும் மணந்து வாழ்நெறியை நிலைபெறச் செய்தனன். மேதகு மணமுறையில் காதல் மணங்களுக்குமுன் காதலித்தலும் இரந்து பின்னிற்றலும் இயல்பான நிலை எனக் கருதினன். இவ்வேறுன்றிய தமிழர் உளப்பாடே பண்டைத் தமிழிலக்கியங்கள் எவற்றிலும் மிளிர்வனவாயின. கற்பு நெறிக்கு இன்றியமையாக் கடனாகக் களவென்னும் காதலும் இரந்து பின்னிற்றலும் வற்புறுத் துரைக்கப்பட்டன. தொல்காப்பியரும் தமிழிலக்கியங்கள் யாவும் தமிழர் உளப்பாட்டை இருபாலர் மணத்திற்கும் இன்றியமையாக் கடப்பாடாக அறிந்து

விலக்கலாகத் திருநெறியாகக்கொண்டு ஒழுக வற்புறுத்துவனவாம். இத்தகைய தமிழர் காதல்நெறித் திருமணத்திற்கு முன் வலியுற்றிருந்தமையால், தங்கள் பண்டை அறநூல்களின் விலக்கிலா ஒழுக்க விதியாக இதனை அமைத்துக் கூறினர். அன்றியும் சமக்கிருதப் பெருந் திருக்காப்பியத்தைச் செய்யுள் நடையில் பெயர்த்துக் கொடுத்த பெரும் புலவராகிய கம்பரும், தமிழர் உளப்பாடும், வழக்கும், மாறுக் கோட்பாடுமாகிய இதற்கு இணங்கவே கதை நிகழ்ச்சிகளையும் அமைப்புக்களையும் மாற்றியுரைத்தனர். தமிழிலக்கியம் வற்புறுத்துவது கடிமணத்திற்கு முன்புள்ள காதலே யன்று; அதற்குப் பின்பும் வாழ்க்கையிற் குறைவிலதும் இறவாததுமாகிய காதலேயாம். அகப்பொருள் நூலுள், துறையெனப் பெயர் பெற்ற மிகவுயர்ந்த அமைப்புக்கள் இவ்விருபாலார் மணத்திற்கும் நிலைத்த காதற் கடனைப் பற்றி வலியுறுத்தி உரைக்கின்றன. எடுத்துக் காட்டாக, நிலைமாறுக் காதலாகிய இருவயினொத்தல் ஒன்றினைக் காண்க. வாழ்நாள் முழுதும் கிழத்தியாற் கிழவோன் காதல் என்றும் தூயதாயிருத்தல் வேண்டும். என்றும் நிலையாது ஆண்டோடு தளர்ச்சியால் அறிவுறுவனவாகிய தலைமகள் இளமையும் வனப்பும் எழிலு முதலியவற்றால் இஃது ஏற்படுவது அன்று. காதலரிருவரிடையே என்றும் நிலைத்த இறவா அன்பும், கழியாப் பற்றும், மாறு அளியும், குறையாப் பாராட்டும் ஆகிய பண்புகளே காதல் மணத்திற்கு உரியனவாகும். மணவாழ்க்கை என்னும் நாற்சதுர மனைக்கு அன்பும், மடமும், சாயலும், இயல்புமாகிய நான்கும் இன்றியமையா மூலைத்தூண்களாக உள்ளன. அன்பென்பது ஒருவரை யொருவர் இன்றியமையாமை; மடம் என்பது ஒருவர் குற்றம் ஒருவர் அறியாமை. இவைகளே காதலர் இருவர்பாலும் நிலைபெறற்குரிய உயர் பண்புகளெனக் கருதப்படுகின்றன.

தமிழர் திருமணத்துக்கு எவ்வகைச் சடங்கும் இன்றி யமையாதனவாகப் பண்டைத் தமிழ்மக்கள் கருதவில்லை என்பதற்குப் பற்பல சான்றுகள் பண்டைத் தமிழ் இலக்கியங்களுள் உண்டு. முதற்கண்ணும் என்ஞான்றும் உழுவலன்பே மணத்திற்கும் இல்வாழ்க்கை இன்பத்திற்கும் உரியதொன்றாக இருந்தது. பொருந்தாதனவும் செயற்கையும் ஆகிய ஆரியர் வழக்குகளையும், முறைமைகளையும் தமிழரின் காதல்பற்றிய வழக்குகள், குறிக்கோள்களோடும் இணக்கி வேறுபாடு அழித்து ஒன்றாக்கச் சில பிராமண பிராமணீய இலக்கண நூலாசிரியர்கள் மேற்கொண்ட முயற்சிகள் எல்லாம் விளக்க வேண்டா வெளிப்படையாய் உள்ளன. எண்வகைப்பட்ட ஆரியர் மணமுறைகளுள் பெரும்பான்மைய, மணமெனும் பெயர்க்கே பொருந்தாதன. பைசாச ராட்சசக் கூட்டங்களை மணமெனக் கூறுவது, மெய்ம்மலைவும் மொழியிற் பழிப்புரையும் ஆகும். போற்றி யுரைக்கப்படும் கந்தருவந்தானும் நிலைத்த மணம் அன்று. ஓர் ஆண்மகனும் பெண்மகளும் ஒருகால் தம்முள் தலைப்பெய்தலையே குறிப்பதாகும். பின்னர் அவர் உறவு நிலைபெறல் வேண்டும் என்னும் நினைப்புத்தானும் அங்கு இல்லை. இவ்வோர் காலைக் காதல் வெளிப்பாட்டைத் தமிழர் களவுமுறையாகிய "கிழத்திமாட்டுயிர்க்காதல்" முறைக்கு ஒப்பீட்டுரைப்பது பெருங்குற்றமேயாதலின் அங்ஙனம் கருதிக் கூறுங் கூற்றுக்களை விலக்கல் வேண்டும். ஆரியருடைய மற்ற ஐவகை மணங்களும் மணத்திற்கு முன்பு உரிய காதற் கிழமையைக் குறித்து ஒன்றும் விதிப்பனவல்ல. உண்மையில் ஆரியர் மணமுறைகளில் காதல் முதற் பொருளாக விதிக்கப்படவே இல்லை. காதற் கிழமைக்கு இடனின்றாயினும் அவர் மணமுறைகள் ஒப்புடையனவாக அமைக்கப்பெற்றுப் புகழப்படுகின்றதும் யாவரும் அறிந்ததே.

## பகுதி உ

இதுவரை இருபாலர் காதற் கிழமைக்கும் நிலைக்களன் ஆகிய அகப்பொருள்பற்றிக் கூறினும். சரித காலத்துக்கு முற்பட்ட தமிழகத்தில், இக் காதல் மணங்கள் நடை பெற்று இல்வாழ்க்கை யின்பத்திற் கனிந்தன. பண்டைத் தமிழர் நாகரிகத்தின் மற்ருெரு தோற்றமாகிய புறப்பொருளைப் பற்றிப் பண்டைத் தமிழிலக்கியங்கள் கூறுவனவற்றைக் காண்பாம். ஈண்டு, மற்ருெரு பெரிய இயற்கைத் தூண்டுதலாகிய பசித் துன்பு அடிப்படையாக உண்டாய எழுச்சி, பால்விளியாலாகிய காதற் பசியொடு வளர்வித்த நாகரிகத்தை நோக்குவாம். முன்னேற்றம் என்பது இருபாலார் மணத்தொடும் இல்வாழ்வொடும் நின்றுவிடுவதில்லை. குடும்பங்கள் குடித் தொகுதிகளாகப் பெருகுகின்றன. இனவாழ்வும் சமுதாய வாழ்க்கையும் இருபாற் கலப்பின் பயனுய் அமைவனவே. பால் விழைவால் எழுந்து இயல்பிற் பலதிறத்தவாய் அழிவுறும் உயிர்களின் எதிர் வினைகளாய் ஒழியாது, மக்கள் வாழ்க்கையில் நிலைத்த உயர்ந்த பண்புகளாய் அடைவே வளர்வதாகும். நிலைத்த பசி, பால் விழைவின் வெளிப்பாட்டோடு சேர்ந்த காலை, அது மக்கள் தங்கள் முன்னேற்றத்தைத் திருத்திச் சமைக்கவும் விரைவுறப் பண்ணவும் உதவுகின்றது. வடவாரியரும் தென்றமிழரும் தம்முள் தலைப்பெய்தற்கு முன்பே, விரிந்த சமுதாய வாழ்க்கையையும் அரசியல் முறைகளையும் வளம்பட அமைத்துக்கொண்டோராவர். சங்க நூலாராய்ச்சி, ஆரியர் கலப்பிற்கு முற்பட்ட பண்டைத் தமிழரின் சமுதாயக் குடிவாழ்க்கை இயல்புகளை அறிந்துகொள்ள வுதவும். அந்நூற்ருெகுதியின் ஆராய்ச்சி கங்கைவரைப்பில் ஆரியர் அமைத்துக்கொண்ட

சமுதாய முறைகளின் வேறுபட்ட இயல்புகளையும், காவிரி, பஃறுளி வரைப்புகளில் தமிழர் அமைத்துக்கொண்ட திணையொழுக்கங்களையும் முறையே வேறுபடுத்திய அவ் வவர் சூழல்களின் வினையாற்றல்களை வெளிப்படக் காட்டு வதாகும். குடும்ப சமுதாய அமைப்புக்களில் அமைதி யுடைய தமிழர் குடிகளும், பொருதிறனுற்ற ஆரியர் குடிகளும் வேறுபட்ட சூழல்கட்கும் காலங்கட்கும் இயன்ற வாறு அமைந்த வேறு வேறு இயல்புகளையும் விளைவுகளை யும் எய்தினர் என்பதைக் காணச் சான்றுகள் பல, இப் பண்டை நூற்றொகுதிகளில் உள்ளன.

தமிழன் தன் குடும்பத்தைப் பொருதற்குரிய நிலைய தாக அமைத்துக்கொள்ளத் தூண்டுகோல் எதுவும் இலன் ஆயினன். ஏனெனின், ஆரியனைப் போன்று பகைத்துச் சூழ்ந்த பிறர் குடிகளைப் பொருது ஒழிக்குமாறு எதிர் பார்க்க நேரவில்லை. ஆதலின், அவன் தன் குடும்பத்தைத் தன்னிலைத்தாக வளர்வித்தான். தமிழன் தன் உடை மைகள், தானே ஈட்டியவேனும் தன் பெற்றோர் வழிப் பெற்றனவேனும் அவற்றில் அவன் புதல்வர் அல்லது பெயரர்கள் ஓர் உரிமையும் நாடுதல் செய்யார். ஆரியர் வலியும் உறுதிப்பாடும் பெற்ற கூட்டுக் குடும்ப நலங்களை விரைந்து எய்தினர். தமிழரோ, தனி முயற்சி வளர்ச்சிப் பயன்களையும் தனி மக்களின் உயிர்த்திற மலர்ச்சியினையும் அழுத்தமுற எடுத்து இயம்பினர். குடும்பச் சொத்துக்கள் முழுவதினும் கூட்டாளிகளின் கூட்டுரிமைக் கருத்தே ஆரியர் அக்காலத்தவர் இருப்பிட இயல்புகளுக்கு ஏற்பக் கருதித் தான் காதலித்தாளை மணந்து வாழ்ந்தமையின் கூட்டுக் குடும்ப நிலையைக் கருத்துட் கொள்ளவில்லை. அவன் புதல்வரும் பெற்றோர் நெறி பேணித் தத்தம் தனி மனை வாழ்க்கையினை அமைத்துக்கொண்டனர். இதன்

பயனாய்த் தமிழர் குடும்பங்கள் தனி நிலையவாயும் ஆரியர் குடும்பங்கள் கூட்டு நிலையவாயும் அமைந்தன.

## பகுதி ரு.

இக்கட்டுரைரை முடிப்பதற்கு முன், சமுதாய அரசியல் வாழ்க்கைத் திறத்தை நோக்குதல் ஒன்றே எஞ்சி உள்ளது. தமிழரின் போர்த்துறை இலக்கணமும் போர் அறவிதிகளும் தமிழகக் கலைவாழ்வின் புறத்திணை அல்லது புறவொழுக்கத்தின் சிறந்த பகுதியாகும். மக்களின் இப் புறவாழ்க்கைத் துறையிலும் இவ்விரு வகுப்பாரின் சமுதாய வாழ்விற்குரிய சூழல்வலி, கால இயல்புகள், அவற்றில் முறையே தமக்குரிய குறிகளைப் பொறித்துள் ளன. அவற்றால் இவ்விரு வகுப்பாரின் கலை கலந்து ஒத்து வளர்ந்த பல நூற்றாண்டுகளுக்குப் பின்னும் வியப்புக் கிடமாய் முதிர்ந்து திருந்திய அவர்தம் பழைய இலக்கியங்களில் அவ்வவர் அறப் பழைய தனி இயல்புகளைக் காணலாகுமாறு அமைந்துள்ளன. சங்க நூற்றொகுதி முழுதும் இவ்வகை ஆராய்ச்சிக்கு வளமொடு விரிந்த இடந்தருவதோடு ஆராய்ச்சி முயற்சியில் ஈடுபடும் பல மாணவர்க்கும் பெரும் பயனை அளிப்பதும் ஆகும். இது வரையில் புகுந்தறியா மணிக்குவைச் சுரங்கங்களாகிய பழந் தமிழிலக்கியங்களுள் ஆராய்ச்சி வினையைத் தூண்டுதலும் விழைவினை எழுப்புதலுமே என் கருத்து. ஆதலான் இச்சிறிய கட்டுரையில் அதன் பல திறங்களையும் யான் விரிக்கவில்லை. மேன் முயற்சியும், மிக்க திறமும் உடையார் அப்படத்தினை முற்ற முடித்தெழுதிக்கொள்ளச் சில குறிவரைகளை மட்டும் யான் இங்குத் தருவேன்.

முன்னைய பகுதிகளில் இவ்விரு வகுப்பாரின் வேறு சூழல்களாகிய வாழ்க்கை, கலைகளின் வேறுபாடுகளுக்

குரிய காரணங்களைக் கூறிக் காட்டினேன். அக்காலத்து ஆரியர் தம் வகுப்பையும் குடும்பத்தையும் இல்லத்தையும் காத்து வளர்ப்பதில் இடையீடில்லாப் போர் முயற்சி வேண்டினர். அந்நாகரிகக் கூட்டத்தாரை ஒழித்துத் தம் உயர்ந்த நாகரிகத்தை நிலைப்படுத்தப் போர் மேற்கொண்டனர். இவ்விடையீடில்லாப் பொரு தொழில் வாழ்க்கை, போரே போற்றத் தக்கது என்ற கருத்தை அவர்க்கு உண்டாக்கினமையால், அது தங்கள் சமுதாய வாழ்க்கையில் அப்போர் வினைமைக்குரிய அமைப்புக்களை நிலைப்படுத்தி வளர்க்கத் தூண்டிற்று. அதனால், கால அடைவில் உயர் மதிப்பும் உரிமைகளும் பெற்ற போர் வினையாளர் வகுப்பு ஒன்று தோன்றியது. சத்திரியர்கள் இதனால் அரச பதவியைப் பெற்றதனோடு தம்மில் உயர்ந்த பிராமணர் முதலாய பிற சாதியாரின் பாராட்டுக்களையும் பெறலாயினர். சத்திரியன் பிராமணனையொப்பக் குருக்கள் பதம் எய்தாவிடினும் பல காலங்களில் ஆசிரிய உரிமைகளை அந்தணரோடு பங்கிட்டு அனுபவித்தனன். வேதப் பகுதிகளும் பல ஆரண்ணியங்களும் போர்வினையாளராகிய இராஜன்னியர்களின் புகழ்ச்சிகளைப் பலபடப்போற்றி உரைக்கின்றன. ஆரியர் தருமசாத்திரங்கள், போர்த்திறம், அதன் சிறப்புக்கள் இவற்றை உபதேசித்ததுவும் அன்றி, சத்திரிய சாதியாரின் நீதிக் கூப்பாடாகவும் உயர்த்திக் கூறின. தொடர்ந்து வெற்றிகொள் தொழிலை சத்திரியர்க்கு விதித்தன. சத்திரிய வகுப்பினர்க்குப் பிறர் நிலம் கவர்பெட்பும், விளிவில் வெற்றி வேட்கையும், மடங்கா உள்ள மாண்பும் உரியனவாகக் கற்பித்தன. இவ்வாரியர் கோட்பாடு அவர் தம் நீதி நூல்களில் சத்திரியர் இடையறாது மேற்கொள்ளத் தக்கதாக உயர்த்திக் கூறப்பட்டுள்ளது; திருவினையாகக் கையாளப் பெற்றது.

பண்டை ஆரியர் தம்மொடு மாறுபட்ட வகுப்பினரை ஒழிக்குமாறு இங்ஙனம் இடையீடு இன்றிப் பொருதல்

மேற்கொண்டாராக, சங்க காலத்துக்கு முற்பட்ட தமிழர் பிறர் நாடு கவர் விருப்பத்தை வளர்க்கக் கருதவில்லை. வடக்கின்கண் ஆரியன் வகுப்புணர்ச்சி வலியால் மேற்கொண்டு பொருதானுகத் தென்னுட்டகத்தே தமிழன் தற்காப்பின் பொருட்டும் மானத்தின் பொருட்டுமே பொருதொழில் பூண்டான். தம்மவர் வாழ்விற்கும் வள வளர்ச்சிக்குமாகப் போரில் முனைப்புக்கொண்ட ஆரியர் கோட்பாட்டிற்கு மாருகத் தமிழர் இகல் மேற்கொண்டு போர்ப் பொருட்டாய்ப் பொருதல் ஆதரித்துரையாது தம் அறநூல் விதிகளில் இழித்துரைத்தனர். உண்மையில் தமிழன் போரினையும். போர் வெற்றியையும், தன் இல்லம், மானம் இவற்றைக் காக்கும் பொருட்டே மேற்கொண்டனன். திருக்குறள், தொல்காப்பிய விதிகளுக்குக் காலத்தானும் பொருளானும் நடையானும் பெரிது ஒத்துக் கூறும் நூலாகும். தமிழ்ப் பாணினியார் விதித்த இலக்கணங்களுக்கு வள்ளுவனுர் சிறந்த இலக்கியம் அமைத்துள்ளார். தொல்காப்பியருள் வரைந்துணர்த்திய அறிவியல் அறத் துறைகளைத் தெளித்துக் காட்டுங் கண்ணுடியே திருக்குறளாம். பழந்தமிழ்க் கலையறிவுப் படத்திற்குத் தொல்காப்பியர் வரையும் குறியும் வகுக்கத் திருக்குறள் வண்ணமும் வரைவும் வளமுறத் தருகின்றது. முன்னதில் எற்புச் சட்டமும் உடற்கூறும் அமையத் திருக்குறளில் உடம்பும் உடலியல் நூற்பொருளும் வரைந்துள்ளன. வள்ளுவனுர் குறளில் 86, 87-ஆம் அதிகாரங்களாகிய இகல், பகைமாட்சி இவைகள், பண்டை ஆரியர் போர், போர் மனப்பான்மைக்கும் எதிராய்த் தமிழ்மக்கள் கொண்ட நீதி மனப்பான்மையை வலியுறுத்திக் காட்டுகின்றன. இகல் அல்லது போர் விருப்பு எக்காலத்தும் வரைவின்றி இழித்துரைக்கப்பட்டது. இது வசையுடைத் தீமையென மறுக்கப்பட்டது; எனினும், தமிழன்

ஆண்மையில் பேடியும், எண்மை விருப்புடைப் பெண்மை யனும் அல்லன். ஏனெனின், தன் மனைக்காப்பு அல்லது •தன் மானத்தின் மாண்பு கருதியபோது கடைபோகு மட்டும் போர் செய்தற்கு நிமிர்கின்றான். தமிழ் மகளிர் வீரந்தானும் சங்கப் புலவர் பாடும் தகையதாகிய பொருட் டுறையாக இருக்கிறது. பண்டைத் தமிழகத்து ஆண் பாலரும் பெண்பாலரும் ஒத்து விரும்பிப் பங்கெடுத்து மேற்கொண்ட அறப்போர் வினையால் ஆகும் வெற்றியை யும் புகழையும் அவர்கள் மதித்துப் போற்றியதை அப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன.

பண்டை இந்தியாவின் கலையறிவு மலிந்த இவ்விரு பெரு வகுப்பினரும், காதல், போர்வினைக் கோட்பாடுகளிற் கொண்ட வேற்றுமைகள், அவ்வவர் வாழ்க்கை நோக்க வேறுபாடுகளுக்கும் பலதிறப்பட்ட சமுதாய அமைப்பு, அரசியல் அமைப்பு, அறநெறி அமைப்பு முதலியவற்றின் வேறுபாடுகளுக்கும் தம்தம் இயல்பிற் காரணங்களாயின. தமிழன் பிறப்பானே நன்னம்பிக்கையாளன்; மகிழ்வும் களிப்பும் நிரம்பியோன்; வாழ்க்கையின் நல்லியல்பைக் களிப்புடன் கைக்கொண்டு நிலவுலகில் இனிய குடும்ப வாழ்வை விரும்பி அறத்தொடு பொருந்தும் இன்ப வாழ்க்கையையே என்றும் வேண்டினவன். ஆரியனோ வெறுப்பியல் விருப்பினன்; பல்வகை இன்பங்களையும் வெறுத்தோன்; வாழ்க்கை விலக்கத்தக்க துன்பம் என வெறுத்து, வாழ்க்கைத் துயரங்களுக் கெல்லாம் துறவே நன்மருந்தென உபதேசித்து, மறுவுலக நோக்கைக் கடைப் பிடித்தோனவான்.

---

# தமிழ் வேற்றுமை மரபு

"தமிழில் முன் வேற்றுமை கிடையாது; பின் வட நூலிலிருந்து இரவல் வாங்கியது. அதனால், தமிழ் மொழியில் பொருளால் வேற்றுமை எட்டிறந்த பலவாகவும் வடமொழியிற் போலவே, தமிழிலும் வேற்றுமைகள் எட்டெனக் கொள்ளவும், அவற்றை எண் வரிசையாற் பெயரிடவும் நேர்ந்தது; அது பொருந்தாது;" எனத் தாமெழுதிய மொழி நூலில் பன்மொழி யறிஞர் "கால்டு வெல்" கண்காணிப் பாதிரியார் பகர்ந்தனர். அதைப் பின் பற்றி இன்றுவரை பலரும் வேற்றுமைவகை தமிழுக்கு வடமொழி தந்த நன்கொடையென்ற கொள்கையை நம்பிப் பரப்புகின்றனர். விவிலிய மறையோர் கால்டுவெல் அறிஞர் தாமே தென்மொழி, வடமொழி நூல் கற்றுத் தேறிய முற்றிய புலவரெனக் கருதுதற்கில்லை. அவர் தங் காலப் பண்டிதரும், பிற்காலச் சின்னூல்களும் பகர்ந் தனகொண்டு தன்னறிவிற் றோன்றியதைத் தொகுத் தெழுதியதே "திராவிட மொழி நூல்". அது, மேலாராய்ச் சித் துணையாதற்குதவும். அதிற்காணும் கருத்தனைத்தும்

முடிவடைந்த துணிபுகளாய்க் கொள்வது நம் குற்ற மாகும். வேற்றுமைகள் தமிழுக்குத் தனியுடைமையாகா என்பதற்கு அவர் கூறும் ஏதுக்கள் இரண்டேயாம். வட மொழிபோல் தமிழிலும் வேற்றுமைகள் எட்டெனவே கொண்டது ஒன்று; மற்றொன்று, வேற்றுமைப் பெயர் தமிழிலும் எண் வரிசையால் இயையக் கண்டது. இவ் வேதுக்களைச் சிறிதாராய்தல் பொருத்தமாகும்.

முதலில், ஒரு பெருநாட்டில் இரு தனித் தென் மொழிகளிலே, வேற்றுமை எட்டென்று கொண்டதனால், ஒரு மொழி மற்றதனிடத்து அதைப் பெற்றது எனத் துணியொணாது. பரந்த வுலகில் பண்டைமொழி பல வொடும் இனமில்லாப் பிற்கால மொழி பலவும் வேற்று மைகள் எட்டாகக் கொள்ளக் காண்போம். அரபி, இலத் தீன், எபிரேயம், யவனம், பாரசீகம் போன்ற தம்முள் தொடர்பற்ற மொழிகளிலும் வேற்றுமைகள் எட்டே எனக் காண்கிறோம். அவ்வாறான அவைகட்கெல்லாம் நாவல நாட்டுஆரியமொன்றே வேற்றுமையை நல்கின தாய்க் கூறுதற்குத் திராவிடமொழி நூலுடையாரும் மொழியியல்கள் ஆராய்வார் யாவருமே துணியமாட்டார். அன்றியும், வடமொழி நூலார் எல்லோரும் வேற்று மைகள் எட்டென்று கொள்ளவுமில்லை; பாணினிபோல் ஏழென்று கூறுபவர் பலராவர். வடமொழி நூற் கொள்கை யாதாயினுமாகுக; தமிழில் வேற்றுமைகள் ஏழேயாம். இதுவே முன் ஆன்ற தமிழ்ச் சான்றோர்கள் துணிந்த வுண்மை.

"வேற்றுமை தாமே ஏழென மொழிப" (தொல்—சொல்—சூ. 62) எனத் தமிழ்த் தொன்னூலார் நன் மர பைத் தொல்காப்பியர் முன்னர்க் கூறினர். பின்னர்

இந்திரன்றன் வடநூல்முடிபு தழுவி, எழுவாய்ப் பெயரை முதல் வேற்றுமையென்று அவர் எண்ணியதால், விலக் கொணு விளி வேற்றுமையைக் கூட்டி "விளி கொள்வ தன்கண், விளியோ டெட்டே" என வேறு கூற நேர்ந்தது. "ஏமென மொழிப" என்றது "பிறர் மதங் கூறல்" என்பர் உரைகாரர்; அம்மதங் கூறும் பிறர் யாரென்று ஒருவருமே விளக்குகிலர். இதுபோது வழங்கும் தமிழ்நூல் எதுவும் ஏழென்று கூருமையால், "மொழிப" எனத் தொல்காப்பியராற் சுட்டப்பெற்ருேர், அவருக்கு முன்னிருந்த தமிழ்ச் சான்ருேராதல் ஒருதலை. வேற்றுமை 'ஏழியல் முறையது'......என்ருேதிய பாணினியும், எட்டென்று எண்ணிய இந்திரனும், வடமொழி இலக்கணம் வகுத்தவராதலின், அவர் கூற்று, தமிழ் மரபு தழுவாது. ஆதலால், தமிழ் வேற்றுமை வகையைத் தமிழ் நூல் கொண்டே துணிதல் வேண்டும். அன்றியும், ஏழெனத் துணிந்த பாணினி, தொல்காப்பியருக்குப் பிந்தியவராதலானும் 'ஏழென மொழிப' என்றது பாணினியைச் சுட்டாது. "ஏழென மொழிப"வர் தொல்காப்பியருக்கு முந்திய பண்டைத் தமில் நூலாராவரன்றி வட நூலாசிரியராகார் என்பது தேற்றம்.

தொல்காப்பியர் ஐந்திரம் நிறைந்தவராதலின், அவ்விந்திரன் மதம் தழுவி "விளியோடெட்டே' எனத் தங்கோள் கூறி, அதற்கியைய "அவைதாம், பெயரே–ஐ–ஒடு–கு–இன்–அது –கண்–விளி–என்னுமீற்ற" என்று எட்டையும் நிரலே ஒப்ப நிறுத்தி எண்ணிக் காட்டினர். அதற்கு மாருக அவர் விளி வேற்றுமையின் சிறப்பின்மை விளக்கியதாயும், தனியுருபும் பல பொருளும் பிற வேற்றுமைபோற் கொள்ளாத விளியைப் பிரிப்பதற்கே "விளிமரபு" வேறு கூறப்பட்டதாயும் உரைகாரர் உரைக்

இன்றார். விளிக்குப் பலவுருபும் பல வேறு பொருளும் பின் ஒரு இயலால் தொல்காப்பியர் விரிப்பதனால், அவர் விளிக்குச் சிறப்பின்மை அளிப்பதற்கு மாறாக அதன் சிறப் புடைமை விளக்குவது வெளிப்படை. பெயர் நிலையே தன் னிலையாய் உருபெதுவும் இன்றிப் பெயர்ப் பொருளன்றிப் பிறிது பொருள் யாதுமில்லாத எழுவாயை வேற்றுமை யாய்ப் பழைய தமிழ் முதல் நூலால் கருதாமை கண்கூடு. பொருள் சுட்டலும் பயனிலை கேட்டலும் உருபேற்றலும் பெயர்களின் பொதுவியல்பு. அற்றன்றிப் பிறிதியல்பில்லா ததும், பிற வேற்றுமைபோல் தனக்குருபும் தனிப் பொரு ளும் கொள்ளாததுமானதைப் பெயரென்றும் எழுவா யென்றும் கூறுவதே தமிழ் மரபு.

எவ்வகையானும் பெயரின் வேறுபடாததைப் பெய ரென்பது முறை; வேற்றுமை என்பது பொருந்தாது. உருபாலும் பொருளாலும் பெயர்கள் வேறுபடுவதே வேற் றுமை எனப்பெறும். 'பெயர் தோன்று நிலையே' தன்னிலை யாய்ப் பிறவுருபேற்றுப் பொருளும் வேறுபடுதற்கிடமா வதை "எழுவாய்" என்பது நன்மரபு. ஐ முதல் ஏழு வேற்றுமையும் எழுவதற்கிடமாவது எழுவாய்; அதுவே பெயர். எழுவாய்ப் பெயர்க்கென உருபில்லை. பொருள் வேறுபாடும் யாதுமில்லை பெயர்ப் பொருளே எழுவாய்ப் பொருள். பொருண்மை சுட்டலும் பயனிலை கோடலும் உருபேற்றலும் காலந் தோன்றாமையும் பெயர்களின் பொதுவியல்பு; எழுவாயியல்பும் அந்நான்கே (1) எழுவாய் பொருண்மை சுட்டல் ..... "அன்றியனைத்தும் பெயர்ப் பயனிலையே" (தொல்–பெயர்—சூ 66) என்பதனாலும், (2) உருபேற்றல் "உருபுநிலை திரியாது பெயர்க்கிருகும்" (சூ 70) என்பதனாலும், (3) காலந் தோன்றாமை 'பெயர் நிலைக் கிளவி காலந் தோன்றா' (சூ 70) என்பதனாலும்

விளக்கமாகும். எனவே பெயரே எழுவாயும் எழுவாயே பெயருமாதலின், எழுவாயைப் பெயரின் வேறுபட்டதொரு வேற்றுமையாகக் கூறல் பொருந்தாமை ஒருதலை.

இனி வடமொழியில் பெயர்ச்சொல், தமிழிற்போல, நின்றாங்கே வேற்றுமையாகாது; பெயர்ச் சொற்கள் தம் வடிவம் மாறியே, அதாவது உருபேற்றே எழுவாயாகும். அவ்வாறு எழுவாயும் பிற வேற்றுமை (விபக்தி)கள் போலவே இயற்பெயர் நிலையின் வேறுபடுதலால், ஆரிய நூலார் அதையும் வேற்றுமை எனக் கொண்டது தவறு காது. அதனால், இந்திரன் முதலிய ஆரிய முன்னூலார் எழுவாய்ப் பெயரை முதல் வேற்றுமையாக்கி, அதனோடு பிற ஏழும் கூட்ட வேற்றுமை எட்டென்றெண்ணினர். ஏழே வேற்றுமை என்ற பாணினிபோல்வார் மதமும், விளியை எழுவாய்த் திரிபென விலக்கிற்றல்லால், எழுவாய்ப் பெயரை வேற்றுமையென்றே கொண்டது கருதத் தக்கது. வடநூலார் எழுவாயையும் வேற்றுமை என்றது அம்மொழியியல் மரபுபற்றி எழுந்தது.

தொல்காப்பியர் தமக்கு முந்துநூற் றமிழ்மரபு தழுவி ஏழென முதலிற் கூறினர். எனினும், தொல்காப்பியர் ஐந்திரம் நிறைந்தவராதலின் அந்நூலிற் சார்பால் எழுவாயை வேற்றுமையாகக் கொண்டதானும், தமிழில் விளியைப் பெயர்த் திரிபென விலக்கொணாமையானும், "விளியோடெட்டே" என்றதையும் சுட்டிக் கூறினர். தமிழில், விளி உருபாலும் பொருளாலும் பெயரின் வேறுபடுவதால், அது, வேற்றுமையாதல் தேற்றமாகும் மற்றெல்லா வேற்றுமைகளையும் இரு சிற்றியல்களில் விளக்கியமைத்த தொல்காப்பியரே விளியை வேற்றுமையெனக் கூறியதோடமையாமல், விளிக்கு மட்டும் அதன் சிறப்பு நோக்கி 'விளி மரபென'' நெடியதொரு வியல் வகுத்தனர்.

பிற வேற்றுமைகளுக்கெல்லாம் ஒவ்வோருருபே கூறியவர் விளிக்குப் பல வேறுருபும் அவற்றிற்குத் தனித் தனிக் குறிப்பும் விரித்து விளக்கினர். அதற்கு முரணாக, வட நூல் வல்ல உரைகாரர் "விளியின் சிறப்பின்மை விளக்கிய" அதற்கு வேறியல் வகுக்கப்பட்டதெனக் கூறியது அவர் பயின்ற பாணினி போன்ற பிற்கால வடநூலார் முறை தழுவி என்பது தெளிவாகும் ஆகவே, தமிழில் (1) பெயரே வேற்றுமைகட்கு எழுவாய் என்பதும், (2) அதை வேற் றுமை என்றல் தொன்மரபன்றென்பதும், (3) ஐ முதல் விளியீறாக வேற்றுமை ஏழென்பதும் விளக்கமாகும். இம் முறையில் இயலடைவில் தமிழ் வேற்றுமை ஏழேயாம். அவற்றின் பெயர் முறை "ஐ, ஒடு, கு, இன், அது, கண், விளி என்றேழா"கும. ஆகையால், வேற்றுமை எட்டென வும், அவை எண் முறையாற் பெயர் பெறுமெனவும் கூறும் ஆரிய நூற்கோளால், உருபாற் பெயர்பெறும் வேற்றுமை ஏழேயுடைய தமிழ் மரபு பிறந்ததெனும் மேற்புலப் புலவர் கால்டுவல் ஐயர் கூற்றுப் பொருந்தாமை வெளிப் படை.

இனித் தமிழ் முன் வேற்றுமையில்லா திருந்து பிறகு ஆரியரிடம் அதனைக் கொண்டதென்பது வரலாற்றுச் சான்று பெறாததோடு, மொழி நூல் முறையிலும் உண்மை யில்லை. தம் கூற்றுக்குக் கால்டுவல் ஐயர் சொல்லும் இரண்டாவது காரணம் முற்றும் தவறு. இந்திய ஆரியத் தில் வேற்றுமைகளை எண்முறையாற் பெயரிட்டு அமைத் திருப்பது உண்மை. பிரதமை (ஒன்றாவது) முதல் சப்தமி (ஏழாவது) வரை எண்களே அம்மொழியில் (விபக்தி) வேற்றுமைகளின் பெயராக வழங்கிவருவது யாவருமறிந்த செய்தி எனில், தமிழில் வேற்றுமைகள் எண்ணாற் பெயர் பெற்றன வென்பார் தமிழ் நூன் மரபு அறியார் என்பது தேற்றம்.

"ஐ, ஒடு, கு, இன், அது, கண், விளி" என்பன தமிழில் வேற்றுமை ஏழன் பெயர்களாகும். அவற்றை எண்ணுங்கால், எழுவாயை முதலிலும், ஐமுதல் விளியீறாக ஏழையும் இரண்டு முதல் எட்டுவரை எண்வரிசையில் வைத்தும் எண்ணுவர். அவ்வாறெண்ணுவதால் அவ்வெண்களே வேற்றுமைகளின் பெயரெனக் கொள்ளுதல் தவறாகும். மேனுட்டு யவனம். இலத்தீன், இடைநாட்டெபிரேயம், கீழ்நாட்டுச்சீன முதலிய பழையமொழிகளிலெல்லாம் தொன்றுதொட்டின்றுவரை வேற்றுமைப் பெயர் முறைகள் வெவ்வேருயினும், அவற்றை எண்ணுமுறை இதுவாகவே இருக்கக்காண்போம். செய்பொருளை (செய்வதை) முதலிலும், செயப்படுபொருளை இரண்டாவதும், துணையல்லது கருவிப் பொருளை மூன்ருவதும், பொருட்டுப் பொருளை நான்காவதும், இன்-அது-கண்-எனப்பெறும் நீக்கம்—உடைமை—இடப்பொருள்களை முறையே ஐந்து ஆறு ஏழாகவும் எண்ணுவதே எல்லா மொழிகளிலும் ஒராங்கு இயலும் நன்மரபாயமைந்துள்ளது. இதனுல் அம்மொழிகளில் வேற்றுமைப் பெயர்கள் அவ்வெண்களே என மொழிநூன் மரபறிவார் யாருங் கொள்ளார்.

தொல்காப்பியர் நூலிலும், வேற்றுமைப் பெயர்கள் மேற்கூறியாங்கு எழுவாயோடு ஐ முதல் விளியீருக எட்டேயாம். எண்ணுங்கால் அவற்றை ஒன்று முதல் எட்டு வரை வரிசையாய் எண்ணினர் தொல்காப்பியர். வேற்றுமையாக எழுவாய்ப் பெயர்முதல், "ஐ"யெனப் பெரிய வேற்றுமைக் கிளவி, "கண்" ணெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி, "விளியெனப்படுப" என வேற்றுமை யெல்லாம் அதனதன் உருபுக்குறியைப் பெயராய்க் கொண்டு வழங்குவதே பிறழாத பண்டைத் தமிழ் மரபென்பதைத்

தொல்காப்பியர் தம் நூலில் தெளித்து விளக்கியுள்ளார். அவற்றை வரிசைப்படுத்துமிடத்து, ஐ முதல் கண் வரை ஆறும் முறையே இரண்டாகுவதே, மூன்றாகுவதே, நான்காகுவதே, ஐந்தாகுவதே, ஆறாகுவதே, ஏழாகுவதே, என்றெண்ணப் பெறும் எனவும் குறித்தனர். இவ்வெண்கள் வேற்றுமைகளின் பெயராகா; அவற்றிற்கின்றியமையாத் தொடர்புங் கொள்ளா. ஒடுவை ஐந்தாவதும், இன்னே மூன்றாவதுமாக எண்ணுவதெனத் தமிழ் நூலார் துணிவரேல், அதனுல் மட்டும் அவ்வேற்றுமைகளினியல்பும் உருபும் பொருளும் திரியாதியலும். உருபுகளே வேற்றுமைகளின் பெயரும் விளக்கமுமாய், அவற்றின் உயிராய் நின்றியக்குவன; எண் அவற்றிற்கு உறுப்பாகா; வரிசைக்குறியே. வேற்றுமைத் தொகுதியை ஏதாவதொரு வரிசைப்படுத்தி யெண்ணல் வேண்டும். அதனுல் எழுவாய் பெயரொடு ஏழுவேற்றுமைகளின் இயலியைபின் நெருக்கும் நெகிழ்வுங்கருதி வைப்புமுறை எண் வரிசையில், பிறமொழிபோல், தமிழிலும் அமைந்துளது.

முன்னைய தொன்னூல்களில் இவ்வுண்மையை ஐயந்திரிபறத் தெளித்திருக்கவும், நன்னூல், இலக்கண விளக்கம் போன்ற பின்னூல்களில் வேற்றுமையியல் விரிக்குமிடத்து, நிறுத்தசொற் பெய்யாது நெகிழக் கூறியதனுல், எண்களே வேற்றுமைப் பெயரென நினைக்க நேர்ந்தது போலும். நன்னூலார் "எட்டே வேற்றுமை" எனக் கூறிப் பிறகு "இரண்டாவதனுருபையே", "மூன்றாவதனுருபு ஆல் ஆன் ஒடொடு" என்றிவ்வாறே தொடர்ந்தெண்ணி, எட்டனுருபே என முடித்துக் கூறியதால், தொன்னூல்களில் தோய்ந்து துருவி யாராய்ந்து பயிலாதார், எண்களே வேற்றுமைகளின் பெயரெனவும் ஐ முதலிய, அவற்றிற் குருபுகளாய் மட்டும் அமைவன எனவும் கருதலாயினர். எட்டே வேற்றுமையென்ற பின்னூலாரும், வேற்றுமைகளின் பெயருமுறையுங் கூறுமிடத்து

எண்கொண்டு சுட்டாமல், "பெயரே, ஐ, ஆல், கு, இன், அது, கண், விளி யென்ருகும் அவற்றின் பெயர் முறை" என்றே விளக்குதலானும், உருபால் வேற்றுமைக்குப் பெயரிடும் தமிழ் நன்மரபு வலியுறுதல் கண்கூடாம்.

இனி, முழுமுதலாய் வடித்தெடுத்த இயலமைந்து எழில் நிறைந்த பண்டைப் பெருமொழிகளில், வேற்றுமைகள் பெயர் கொள்ளுமுறை முத்திறப்படுகின்றன:- எண்ணுற் பெயர்கொளல், பொருளாற் பெயர்கொளல், உருபாற் பெயர்கொளல், எனுமிவை மூன்றே—ஆற்றல் நிறைந்த மக்கள் மொழிகளில் வேற்றுமைப் பெயர் முழு முறையா யிருக்கக் காண்பாம். எண்ணுற் பெயர்கொளல், வட மொழி போன்ற சில மொழியியல்பு; பொருளாற் பெயர் கொளல், இலத்தீன் முதலிய மேல்புல மொழிமுறை; உருபாற் பெயர்கொளல், அடிப்பட்ட தமிழ் மரபு. இவற் றுள் எண்முறை, வேற்றுமைப் பெயர்க்குக்கு இன்றி யமையாத இயற்ருெடர்பு ஒருதலையன்மையால், சிறந்த தன்று. பொருண்முறை ஒருவகையால் முன்னதிற் சிறந்த தெனினும், வேற்றுமை யொவ்வொன்றும் பலவேறு பொருளுடைத்தாதலின், அப்பொருள்களை விதப்பின் பற்பல வகைகளாய் விரிந்து விரவி வரையறுத்துப் பெய ரிடுதல் கூடாமையின், அதுவும் ஒரு தலையாய்ச் சிறந்த தெனத் துணியவொண்ணுது. ஆதலின், தமிழ்ச் சான் ருேர் அவ்விரு முறைகளினும் அடிப்பட்ட உருபுகளால் வேற்றுமைகளுக்குப் பெயரிடுதல் இயலடைவில் ஏற்ற தெனக் கண்டுகொண்டார். தம்முட்டொடர்புடைய பல பொருட்குமொரு குறியாயமைந்து நிற்கும் ஒவ்வோருருபும் அவ்வப் பொருட்டொகுதி வேற்றுமைக்குப் பெயரா யமைய, ஐயமும் மயக்கமும் அகன்று, எண்மையும் தெளி வும் ஒண்மையோடெழிவும் ஒருங்கியைந்தொளிரும். இச் செம்முறையால் வேற்றுமைப் பெயர்முறை யாப்புற வமைந்த நன்மரபுடைமை தமிழ் மொழியின் தனிச் சிறப் பாம்.

# மணிமேகலையின் காலமும் அதை இயற்றியவரும்

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஒருகாலத்து இரு புலவர் ஒருங்கியற்றி முறையே ஒருவர் முன்னிலையில் மற்றொருவரால் அரங்கேற்றப்பெற்றன என்பதும், சிலப்பதிகாரம் புகழும் சாத்தரே மணிமேகலை நூல் செய்தனரென்பதும் பண்டிதவுலகு கொண்டுள கொள்கை. அதற்காதாரம் இருபெருஞ் செய்யுட்பதிகமும் ஒருமுகமாகத் தருமுறையென்பர்.

"சிலப்பதிகாரமென்னும் பெயரால்
.............................. .... ... ..
உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்
உரைசா லடிகள் அருள, மதுரைக்
கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்"[18]

எனச் சிலப்பதிகாரப்பதிகமும்,

18. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்-இடையிட்ட உரையும் பாட்டுமுடைய காப்பியம்; உரைசால்-புகழமைந்த.

"இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப
வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
மாவண் டமிழ்த்திற மணிமேகலை துறவு
ஆறைம் பாட்டினுள் அறிய வைத்தனன்"[19]

என மணிமேகலைப் பதிகமும், தம்முள் மாறி எதிரொலி யதிரக் கேட்பார் அவற்றை மெய்யெனக்கொண்டு மயங்க லும் கூடும்.

இப்பதிகங்கள் யாரால் எப்பொழுது இயற்றப்பெற் றன? இவற்றின் இயைபும் உண்மையும் எவ்வளவு ஏற்றற் குரியன? என்று ஆராயாமலே ஒருவர் சொல்லியதை வழி மொழிவது* அறிவறமாகுமா?

பதிகமென்பதே பண்டை நூலறியாப் பின்னோர் புகுத்திய புதுவழக்கு. பழம்பெரு நூல்களை முயன்று பயின்று கைவரக் கற்கப் பொறுமையும் அறிவும் குறுகிய பிற்காலத்திற் பெருநூல்களுக்குச் சுருக்கம் அமைக்கும் வழக்கம் எழுந்தது. சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தா மணி, கம்பர் காவியம் போன்ற விரிந்த தொடர்நிலைக் செய்யுட்கெல்லாம் சுருக்கங்கள் தொகுக்கலானார். வட மொழியில் இத்தகைய சுருக்கங்கள் 'பிரதீகம்' எனப்படும். பிரதீகம் என்றால், சங்கிரகம் அதாவது சுருக்கம் எனப் பொருள்படும். பிரதீகத்தின் மரூஉ பதிகமாதல் வெளிப் படை. ஒருபது பாட்டைப் "பதிக"மென்பது வடகலை

19. இளங்கோ வேந்தன்-இளங்கோவடிகள்; மாவண்டமிழ்த் திறம்-மிக்க வளம்பட்ட தமிழின் இலக்கண நெறியால்; ஆறைம்பாட்டு-முப்பது காதைகள்.

* பட்டினப்பாலை கரிகாலனைப் பாடியதென்றும், ஆதிமந்தி கரிகாலன் மக ளென்றும், ஒட்டாதுரைத்தவர் கட்டுரை இன்னும் வழங்குதலும் இதன்பாற் படும்.

வழக்கின் வடுவுடைத் தமிழ்ச் சொல். நூற்பொருட் சுருக்கம் நுவலும் "பதிகம்" தமிழில் தளிர்க்கும் முளிந்த வடமொழி. ஆன்றோர் நூலும் சான்றோர் செய்யுளும் ஆளாத பதிகத்தை, இளங்கோவடிகள் தம் முத்தமிழ்ப் பனுவல் முன் வைத்திலரென்பது, அவர் பாவொடு பொருந்தாப் பதிகமுரண்களைப் படித்தறிவார்க்கு வெள்ளிடை மலை போல் விளங்குவதாகும்.

முதலில், (கதை வரலாற்றைக் காட்சிக் காதையில் அடிகள் விளக்கும் முறையொடு முழுதும் முரண்படப் பதிகம் உரைப்பதை யாரும் மறத்தற்கில்லை. குடக்கோச் சேரன் செங்குட்டுவன், தான், மலைகாண்குவமென...... வஞ்சிமுற்றம் நீங்கிச் செல்வோன்,.......

"பெருமலை விலங்கிய பேரியாற் றடைகரை
இடுமணை லெக்க ரியைந்தொருங் கிருப்ப"[20]

(சிலம்பு: காட்சி: 22–23)

அவனைக் காணக் கையுறையாகப் பல பொருள்களையும் மலைமிசை மாக்கள் தலைமிசைக்கொண்டு (வந்து வணங்கித் தந்து பணிந்து)

"ஏழ்பிறப் படியேம் வாழ்கநின் கொற்றம்
... ... ... ...
பன்னூ ருயிரத் தாண்டு வாழியர்'[21]

(ஷை: 56, 63)

என வாழ்த்திக்,

---

20. விலங்கிய-குறுக்கிட்டுச் செல்லும்; எக்கர்-மணல்மேடு.

21. ஏழ்பிறப்படியேம்-ஏழு பிறவியின்கண்ணும் நினக்கு யாம் அடிமையாவோம்; கொற்றம்-அரசு.

'கான வேங்கைக் கீழோர் காரிகை
தான்முலை யிழந்து தனித்துய ரெய்தி
......................வானகம் பெற்றனள்;
எந்நாட் டாள்கொல்? யார்மகள் கொல்லோ?
நின்னாட் டியாங்கள் நினைப்பினும் அறியோம்' [22]

(ஷை: 57, 58, 60–62)

(என்ன),

'மண்களி நெடுவேன் மன்னவற் கண்டு
கண்களி மயக்கத்துக் காதலோ டிருந்த
தண்டமி ழாசான் சாத்தன்' [23]

(சிலம்பு: காட்சி: 64-66)

மதுரையில் நிகழ்ந்ததை மன்னற்குரைத்து 'ஊழியூழி' 'வழிவழி சிறக்கநின் வலம்படுகொற்றம்' என்று வாழ்த்தினன். அத்தீத்திறம் கேட்ட மன்னர்கோமான்,

'மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக வில்லெனத்
துன்னிய துன்பந் துணிந்துவந் துரைத்த
நன்னூற் புலவர்க்கு நன்கன முரைத்'தான், [24]

(ஷை: 103-6)

என்பது அடிகள் கூற்று. எனவே மலைக்குறவர் திறை யொடு வந்து மன்னனை வணங்கித் தம் கட்புலங்காணக்

---

22. வேங்கைக் கீழ்-வேங்கை மரத்தடியில்; காரிகை-பெண்; வானகம்-துறக்க உலகு; நினைப்பினும்-எண்ணத்திலும்.

23. மண்-நிலமக்கள்; களி-மகிழ்ச்சி அடைவதற்கு; மயக்கம்-மருட்சி, வியப்பு.

24. மன்பதை-குடிமக்கள்; நன்குடி-அரசர் குடியில்; தொழுதகவு-போற்றத்தக்கது; துன்னிய-உற்ற; நன்னூற்புலவர்-சாத்தனூர்.

கண்ணகி விட்புலமெய்திய செய்தியைச் சேரன்செங்குட்டு வற்குத் தெரிவித்தனர். அவ்வழிப் பரிசிற்கு அரசன்பால் •வந்திருந்த தண்டமிழ்ச்சாத்தனுர் தாம் முன் மதுரையில் அறிந்த செய்தியைக் குட்டுவற்கு உரைத்தார். [வேந்தனுேடிருந்த இளங்கோவடிகள் அதனைக்கேட்டுக் கண்ணகி கதையைப் பண்ணுேடு பயிலும் செந்தமிழ்ச் செய்யுளிற் சிலம்பின்பெயராற் செய்து முடித்தனர்:] என்பது அடிகளின் வடித்தசொற்றுணிவாம்.

இனி இதைப்பற்றிப் பதிகம் சொல்வதை நோக்குவோம்.

'. இளங்கோவடிகட்குக் குன்றக் குறவர் ஒருங்குடன் கூடி ஒருமுலையிழந்தாளோர் திருமாபத்தினி......எங் கட்புலம் காண விட்புலம் போயது இறும்பூதுபோலும்; அஃதறிந்தருள் நீ' என அவனுழை (இளங்கோவுடன்) இருந்த தண்டமிழ்ச்சாத்தன் "யானறிகுவன் அதுபட்ட" தென்றுரைப்போன்..."மதுரைமூதூர்...(வெள்ளியம்பலத்து நள்ளிருட் கிடந்தேன் ... வீரபத்தினிமுன் மதுரைமாதெய்வம் வந்துதோன்றி...முதிர்வினைமுடிவைக் கூறக்) கோட்டமில் கட்டுரை கேட்டனன் யான்" என, ...(சிலப்பதிகாரச் செய்யுள், 'உரைசாலடிகள் அருள, மதுரைக் கூலவாணிகன் சாத்தன் கேட்டனன், இது பால்வகை தெரிந்த பதிகத்தின் மரபு'

என்பது பதிகவரலாறு.

இதில், குன்றக்குறவர், இறைவனை யிகழ்ந்தாங் கிளங்கோவடிகட்கு எய்தியதுரைத்தாரென்றும், அப்பொழுது அவரொடிருந்த சாத்தன் மதுரை நிகழ்ச்சியை அடிகட்கு உரைத்தனன் என்றும், சாத்தன்வேண்ட அடிகள் அக்கதையைச் செய்யுளாக்கிச் சாத்தன் கேட்க உரைத்தனர் என்றும் கூறக் காண்குவம்.

செய்யுளில் தாமே விளக்கும் செய்தியொடு முற்றும் முரண்படப் பதிகம் பாடும் குற்றம் அடிகள்பாற் கூறுதல் கூடுமா? அன்றி, மரபிறந்து மன்னனை மறந்து தமக்குத் தாமே தலைமைதரும் தவறு அரசுதுறந்த அடிகளின்சால் பொடு பொருந்துமா? இம்முரண் ஒன்றே பதிகம் அடிகள் பாடியதன்றெனற்குப் போதியசான்றாகும்.

இனி இதனினும் பெரியதோர் இழுக்குமுளது;அதனை யும் ஆய்ந்து நோக்குவம். மணிமேகலையின் பதிகவரலாற் றால், சாத்தனார் செய்யுளைப் பாடி அடிகள் முன் படித்துக்காட்ட, அவர் அதை முழுவதும் கேட்டன ரென்று தெரிகிறது, அச் செய்யுளில் ஆபுத்திரனொடு மணிபல்லவம்சென்ற மணிமேகலை அங்கிருந்து தந்தை கோவலன் தாய் கண்ணகி—எனும் 'இருவர்தம் கடவு ளெழுதிய படிமங்காணிய வேட்கைதுரப்ப'(அந்தரத்தாறு வடக்குவழி கூடிச்) செங்குட்டுவன் அவர்க்கெடுத்த கோட் டம்புகுந்து வணங்கிப், பிறகு வஞ்சியுட்படர்ந்து சமயக் கணக்கர்பலர்திறங்கேட்டுப், பின் தன் பாட்டன் மாசாத் துவானைத் தொழுது அவனால் தன் தாயாரான மாதவி சுதமதி இருவரும் அறவணவடிகளும் புகாரைக் கடல் கொளக் காஞ்சிசென்றிருப்பதறிந்து, அந்நகர்சென்று அம்மூவரையும் அங்கே கண்டனளென்றும், அறவண வடிகளாலும் புகார் கடல் வாய்ப் பட்டழிந்ததைக் கேட்டாளென்றும், பிறகு அவரால் புத்தபிடக அருளறங் கேட்டுத் துறவுபூண்டனள் என்றும் விளங்குகிறது.

ஆகவே மணிமேகலையின் துறவுக்குமுன்னமே, பட்டி னம் கடல் வாய்ப்பட்டதும், கண்ணகி வஞ்சியிற் கற்படி மத்தே கடவுளாய் நின்றதும் கழிந்த செய்திகள் என்பர் வாணிகச்சாத்தனார்.

அதைக் கேட்டறிந்த இளங்கோவடிகள், குட்டுவன் கண்ணகி கோயிலெடுத்து, அவள் கடவுள்படிமக்கல் அதில் நட்டு, அப் பத்தினிக்கோட்டத்துக் கைவினைமுற்றிய (அவள்) தெய்வப்படிமத்து வித்தகர் இயற்றிய விளங்கியகோலத்து முற்றிழை நன்கலம்பூட்டிப் பூப்பலிசெய்து ......கடவுண்மங்கலம் (பிரதிஷ்டை) செய்து வாழ்த்தும் போதே,

"மாசாத்து வான்துறவும் கேட்டாயோ அன்னை!
மாநாய்கன் தன்துறவும் கேட்டாயோ அன்னை!"
"மாதவி தன்துறவும் கேட்டாயோ தோழி!
மணிமேகலை துறவும் கேட்டாயோ தோழி!"[25]
(சிலம்பு: வாழ்த்து: 6;7)

என்று புகாரிலிருந்துபோந்த தேவந்திமுதலியோர் அரற்றியதாய்ப் பாடியுள்ளார்.

அன்றியும், புகாரில் இந்திர விழா அறைந்து, அவரவர் மரபிற் சிறப்புச்செய்கென முரசுமுழங்க, அதற்கு முறைப்படி அரங்கக் கூத்தியரான

"மணிமேகலையோடு மாதவி வாராத்
தணியாத் துன்பம் தலைத்தலை மேல்வரச்
சித்திரா பதிதான் செல்லலுற் றிரங்கி
............தன்மகள் தோழி
வயந்த மாலையை வருகெனக் கூஉய்"[26]
(மணிமேகலை:ஊரலர்: 4-8)

25. மாசாத்துவான்-கோவலனின் தந்தை; மாநாய்கன்-கண்ணகியின் தந்தை.

26. தலைத்தலை-மென்மேலும்; சித்திராபதி-மாதவியின் தாய்; தன் மகள்-மாதவி; கூஉய்-அழைத்து.

கோவலன்சாவ நாடகப்பரத்தையர் நற்றவம் புரிவது நாணுடைத் தென்றனூரலர் அவட்குநீ சென்றுரை யென்ன, மாதவிக்கு அதனைத் தோழிபோய்ச் சொல்ல, மாதவி 'மாபெரும் பத்தினிமகள் மணிமேகலை' யாதலின், அவள் இனித்'திருந்தாச்செய்கைத்தீத்தொழிற்படாஅள்'; 'அறவணவடிகள்பால் ஐவகைச் சீலத்தமைதிகேட்டு உயிர் உய்வகைகொள்ள யான் உறுதிகொண்டுளேன்; சித்திராபதிக்கு இதைச் செப்பு நீ' என மாதவியுரைத் ததாய் மணிமேகலைப்பா கூறுகின்றது. இதற்கு மாறாக,

"மையீ ரோதி வகைபெறு வனப்பின்
ஐவகை வகுக்கும் பருவங் கொண்டது
... ... ... ... ...
தலைக்கோ லாசான் பின்னுள ளாக
குலத்தலை மாக்கள் கொள்கையிற் கொள்ளார்
யாதுநின் கருத்து? என்செய் கோ?என
மாதவி நற்றாய் மாதவிக் குரைப்ப"[27]

(சிலப்பு: வரந்தரு: 10, 11, 20-23)

அவ்வளவில் மாதவி,

"வருகஎன் மடமகள் மணிமேகலை யென்று
... ... ... ... ...
கோதைத் தாமம் குழலொடு களைந்து
போதித் தானம் புரிந்தறம் படுத்தனள்"[28]

(ஷை: 24, 27, 28)

---

27. மை-கருமையான; ஓதி-கூந்தல்; வனப்பு-அழகு; தலைக்கோல்ஆசான்-தலைக்கோலுடைய நட்டுவன்; குலத்தலைமாக்கள்-உயர்குடிப்பிறந்தோர்.

28. மடமகள்-இளமகள்; கோதைத்தாமம்-ஒழுங்குபட்ட மாலை; போதித் தானம்-புண்ணியதானம்.

என்று செங்குட்டுவற்குத் தேவந்திகையே 'மணிமேகலை தன் வான்றுறவுரைக்கும்' என்பது வரந்தருகாதையில் இளங்கோவடிகள் வடித்துக்கூறிய வரலாறுகும்.

எனவே, காதலனுற்ற கடுந்துயர்க்கிரங்கிக் கைம்மை நோற்கும் கணிகை மாதவிசெய்கையை வெறுக்கும் சித்திராபதி, மணிமேகலையையும் அணியரங்கேற்றுது அவளெழில்கழியக் குலநல மொழிய வாளாவளர்க்கும் மாதவிபால் அவள் தோழியை அனுப்பி ஊர்த்தெருவிழவில் தன் மகள்மகளைத் தன் குலவிருத்திக்கு விடுமாறு திருத்த முயன்றாளென்பர் சாத்தனுர்.

மங்கைப்பருவமெய்திவிளங்கும் மணிமேகலை தங்குலக் கொள்கை தழுவாமையால் வாளாகழியும் அவள் எழிலிள வளத்துக்கிரங்கும் மாதவிநற்றாய், தானே தன்மகள் மாதவிக்கு இனத்தவர் பழியைத் தன் மனத்துறும் வெறுப்பொடு சொன்னதாய் அடிகள் கூறுவர்.

பெருவிழாச் சிறப்பில் மாதவியும் மணிமேகலையும் வாராமைக்கு வருந்திய கிழவி, திருந்தி அவர் திருவுறச் செய்யத் தூண்டினளென்பர் சாத்தர்.

இந்திர விழவூரெடுப்பதைப் பாடும்இளங்கோவடிகள் பேரூர் விழவில், காதலனிழவு மாதவிதனக்கு வந்துரைத்து, மணிமேகலையின் துறவோடு அதற்குத் தொடர்புகூறிலர்.

தாயின் வாய்மொழி தோழிசொல்லக் கேட்ட மாதவி, மணிமேகலை 'மாபெரும் பத்தினிமக'ளாதலினுல் "அருந்தவப்படுத்த லல்லது திருந்தாச்செய்கைத் தீத்தொழிற் படாஅள்" எனச் சித்திராபதிக்குச் செய்தியனுப்பியதாக

மட்டும் சாத்தனுர் உரைப்பர். பிறகு மணிமேகலை, தன் ஊரை (காவிரிப்பூம்பட்டினத்தை)க் கடல் கொண்டு உற வினர் அறியப் பலஇடம் அலைந்து பின் காஞ்சியில் அறவணவடிகளின் அருளால் துறவுபெற்றனளென்று அவர் விளங்கவைத்தனர்.

அடிகளோ, நற்ருய் தன்பால் உற்றுக் கழறி ஊரல ருரைத்ததும், உடனே மாதவி விடை பகராமல், மணிமேகலையை வருகென அழைத்துக் "கோதைத்தாமம் குழலொடுகளைந்து போதித்தானம் புரிந்தறம்படுத்த துறவு அவள் பெற்றதாய்ச் சொல்லி முடித்தார்.

ஆகவே, கண்ணகி படிமக் கடவுண் மங்கல வாழ்த் துக்கு முன்னமே, தந்தையும் தாயும் தாம் நனியுழந்த வெந்துயரிடும்பை கேட்டுளம் வெதும்பி மணிமேகலையும் மாதவியோடு துறந்தசெய்தியைச் சிலப்பதிகாரம் கூறக் கேட்போம்.

எனவே, மணிமேகலை துறவுக்கு முன்னரே பட்டினம் கடல் வாய்ப்பட்டு அழிந்தொழிந்ததென்று ஈரிடத்து இரு முறை மணிமேகலையில் மதுரை வாணிகச் சாத்தர் சொல் லுவர்.

சிலப்பதிகாரம் முதலிலும் முடிவிலும் பொன்றுதலறி யாப் புகார்ப்பட்டினம் குன்ருவளத்தொடு கோநகராக ஊழியூழியாய்ச் சோழரொடு சிறக்குமென வாழிபாடுவர் ஈரிடத்திளங்கோ.

இவ்வீருசெய்யுளும் செவ்விதின் இயற்றிய இருபெரும் புலவரும் அவற்றை ஒருவர்முன் ஒருவர் ஒருங்கு அரங் கேற்றிக் கேட்டனராயின், ஒரு மகள் துறவை ஒராங்

குறையாது இருவகையாய் அதை முரணவுரைப்பது இயற்கையாகுமா? அன்றே.

இன்னும் கண்ணகி செய்தியைக் குறவரும் புலவரும் கூறக் கேட்ட குட்டுவன், வடபால் படையொடு சென்று ஆரியவரசரைச் சீர்குலைத்து இமயக் கல்லினையெடுத்துக் கங்கை நீர்ப்படுத்து வஞ்சிக்கு வந்து கண்ணகி படிமக் கல்லினை நிறுத்திக் கடவுண் மங்கலஞ்செய்யு முன்னமே, காவிரிப்பூம்பட்டினம் கடலால் அழிந்ததாய்த் தம் பெருஞ் செய்யுளிற் பன்முறை சாத்தனார் பகருகின்றனர். அது கேட்டறிந்தும், அடிகள் தம்பாட்டில்,

"பொதியி லாயினும் இமய மாயினும்
பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பிற் புகாரே யாயினும்
நடுக்கின்றி நிலைஇய என்ப தல்லதை
ஒடுக்கம் கூறார் உயர்ந்தோர் உண்மையின்
முடித்த கேள்வி முழுதுணர்ந் தோரே" 29

(சிலம்பு: மங்கல: 14–19)

என்று மங்கலவாழ்த்தில் வற்புறுத்துவர்.

அழிந்தொழிந்த ஓரூரை மலைபோல் நிலையியதென்று தூய துறவியாய் வாய்மை பிறழாத அடிகள், அவ்வூரழிவு சாத்தனார் வாயாற் கேட்டபின், தாம் தம் நெஞ்சறிந்த பொய்சொல நினைப்பரா? அழிந்த பாழூரை வாழ்த்திச் செய்யுள் பாடத் தொடங்குதல் மங்கலமாகுமா? அது

---

29 பொதியிலாயினும்-பொதிய மலையிலும்; பதியெழு அறியா-ஊரினின்றும் நீங்குதலை அறியாத; பொதுஅறு சிறப்பு-பொதுமை நீங்கிய சிறப்பு (தனக்கே உரிய சிறப்பு); நடுக்கு-சலிப்பு; ஒடுக்கம்-முடிபு; முடித்த-முற்றிய.

மட்டோ! கடவுளர்காயக் காவிரிப்பட்டினம் கடல்கொளப் பட்டபின் அதனைப் 'பதியெழுவறியாப் பழங்குடிகெழீஇய பொதுவறுசிறப்பிற் புகார்' என்றும், ஊர் ஆழியில் ஆழ்ந்தபின் அங்கே 'உயர்ந்தோர் உளர்' என்றும் உரைப்பது வாய்மையா?

புகார்நகர் என்றும் 'நடுக்கின்றி நிலைஇய' என்று வாழ்த்தொடு தொடங்கும் சிலப்பதிகாரம், 'சோழன் புகார்நகரம் பாடேலோரம்மானை' என அம்மானை வரியும்,

**'தீங்கரும்பு நல்லுலக்கை யாகச் செழுமுத்தம்**
**பூங்காஞ்சி நீழ லவைப்பார் புகார்மகளிர்'** [30]
(சிலம்பு: வாழ்த்து: 26)

என்று வள்ளையும் பாடி வாழ்த்தொடு முடியக் கேட்டு மகிழ்கிறோம்.

ஆகையால், காவிரிப்பட்டினம் கடல்கோளால் அழியா முன்னே இளங்கோவடிகள் சிலப்பதிகாரமியற்றினர்; பின்னர் அந்நகர் முந்நீர்விழுங்கி முடிந்த காலத்தில் மணிமேகலை கதையை ஒரு சாத்தனர் பாடினர்—என்று இச்சான்றுகளாலே தோன்றுகிறது.

மேலும், இளங்கோவடிகள் கபிலபரணர் காலத்திருந்தவர் அவர்தம் சிலப்பதிகாரம் தொல்காப்பியனார் நூற்படி பாடப்பெற்றதாய் யாவரும் கூறுவர். "பதிகம்", "நூன்முகம்", "பாயிரம்" என்பவை பண்டை நூலறியாப் புதிய கொள்கைகள். தொல்காப்பியனார், செய்யுட்கெல்லாம் பொதுவாய் வாழ்த்தியல் நான்கு வகுத்துளர். அந்நால்வகையுள் பொருளொடு பொருந்தும் வாழ்த்திய

30 பூங்காஞ்சி-அழகுமிக்க காஞ்சி மரம்; அவைப்பார்-குற்றுவார்.

லொன்ருேடு செய்யுளைத் தொடங்குதல் ஆன்ற புலமைப் பழமரபாகக் காண்குவம். கடவுள்கண்ணிய புறநிலை வாழ்த்து, மாந்தர்க்கெல்லாம் வழிநனி பயக்கும் வாயுறை வாழ்த்து, அவையடக்கியலொடு, செவியறிவுறூஉ என வாழ்த்தியல் நால்வகை. அந்நால்வாழ்த்தும் அழகுற அமைந்த வள்ளுவர் குறள் யாவரு முவக்க உலகினில் இலகும். சிலப்பதிகாரம் குறள்போல அறநூலாகாது புலமையின்பக் காப்பியமாதலால், செவியுறை தவிர மற்றைய வாழ்த்தியல் மூன்றும் சேர மங்கல வாழ்த்தொடு தொடங்கக் காண்போம். உலகெலாம் வழுத்தும் அலகிலா ஒளிதரும் இருசுடர் போற்றும் புறநிலைவாழ்த்தும், குறளைப்போலவே எல்லா மாந்தர்க்கும் வழிநனிபயக்கும் மாமழை போற்றி வாயுறை வாழ்த்தும், ஒடுக்கமறியா நடுக்கின்றிநிலை இய உயர்ந்தோர்ப் போற்றும் அவையடக்கியலும், முறைபெற வாழ்த்தியல் மூன்றும் முதலில் நிறைவுறத் தொடங்கும் சிலப்பதிகாரம். அதன் முன்னிற்கும் பதிகம் பழநூல்மரபொடும் செய்யுள் வரலாற்ருேடும் முரணக்காணலால், அடிகள் அதனை ஆக்குதல் கூடாது. அதனுலும், சிலப்பதிகாரம் புகார் அழியாமுன் வஞ்சியில் இளங்கோ இயற்றியதென்பதும், அதன்பின் சிலபல ஆண்டு சென்றபின் மதுரைக் கூலவாணிகன்சாத்தன் மணிமேகலை கதை எழுதினன் என்பதும் விளக்கமாகும்.

மேகலை துறவு பட்டினம் அழிந்து கெட்டபின் எழுந்த செய்யுளாதலின், பின்ஞேர் புகுத்திய புதுமரபு தழுவி, மணிமேகலைக்குப் பதிகம் அமைந்ததை வியத்தல் வேண்டா. எனினும், அதனைப் பாடிய சாத்தன், செங்குட்டுவனேடு தங்கியிருந்த தண்டமிழ்ப் பாவலர் சீத்தலைச் சாத்தர் அல்லரெனச் சுட்டும் சான்றுகள்தம்மையும் ஆய்ந்து தெளிதல் அறிவறமாகும்.

சிலப்பதிகாரச் செய்யுள் அவரைத் "தண்டமிழ் லாசான் சாத்தன்" என்னும். அஃதலால் அவர்தம் ஊரொடு தோற்றமொன்றையும் இளங்கோ உரைத்திலர். மணிமேகலை நூற்பதிகம் அதனைச் செய்தவர் பெயரைக் "கூலவாணிகன் சாத்தன்" என்று கூறுகிறது. ஒருபெயருடையார் பலர் உளராயின் அவ்வவர் பெயரொடு ஓர் அடைபுணர்த்து வேறுபாடுணர்த்தல் நன்மரபாகும். தொல்காப்பியர், காப்பியாற்றுக் காப்பியனார், சேந்தன்தந்தை காப்பியனார் எனக்காப்பியர் பலரை ஏற்பதோர் அடையால் விளங்கச் சுட்டும் வழக்கம் அறிவோம். இன்னும், நக்கீரனார், கீரங்கீரனார், குட்டுவன்கீரனார், சேந்தன்கீரன், மோசிகீரனார் என்று பலர் கீரரை வேறுபாடறிய வெவ்வேறு அடையொடு விளித்துளர் முன்னோர். அதுவே போலப் பழந்தொகைப் பாக்களையாக்கிய புலவருள் சாத்தன் என்று ஏத்தப்படுப வர் பலர் உளர். ஊரையும் தொழிலையும் உறுப்பையும் குறிப்பதாய் வெவ்வேறு அடைகொடுத்து அவ்வப் புல வரை ஐயுறுதறியச் செய்வது வழக்கு. பெருஞ்சாத்தன், பேரிசாத்தன், பெருந்தலைச்சாத்தன், மோசிசாத்தனார், சீத்தலைச்சாத்தனார், செய்தி வள்ளுவன் பெருஞ்சாத்தன், செல்லூர் இளம்பொன் வாணிகன்சாத்தன், மதுரைக் கூல வாணிகன் சாத்தன் எனப் பலர் சாத்தர் புலவருலகில் நில வக் காண்போம். இவருள், ஊரால் வேறுபாடுணர்த்தப் பெறுபவர், சீத்தலை, செல்லூர், மதுரைத் தொடர்பால் முறையே வழங்கப்படும் மூவருமாவர். கழாத்தலை, குளித் தலை, செந்தலை, பிடர்த்தலை என்பன போலச் சீத்தலை யென்பது ஓர் ஊரின் பெயரே. திருச்சிவளாகம் பெருமா னூர்க்கூற்றத்து இன்றும் அப்பழவூர் நின்று நிலவ நாம் நேரிற்காணலாம். ஊரடை புணர்ப்பது வேறு பாடுணர்த்தற்காதலின், ஒரு பெயர்க்கு ஈரூர் தொடுப்பது

மிகையாகும். மதுரைச் சாத்தனும் சீத்தலைச் சாத்தனும் ஒருவனேயாயின் ஊரடையே போதியதாகும். ஓரூரிருவர் ஒரு பெயர்கொள்ளின் ஊரடைபோதா; உறுப்போ தொழிலோ சிறப்பதை அடையாய்ச் சேர்ப்பது முறையாம்.

சீத்தலைச் சிறப்படைச் சாத்தனார் பண்டு பரணர் காலப் புலவர் என்பது தொகை நூற்பாக்களைத் துருவுவோர் அறிவர். அவர் பாடிய தலைவரும், பல பழஞ்செய்தியும், சிலப்பதிகாரக் குறிப்பும் அவர் தொன்மை சுட்டும் சான்றுகளாகும்.

மணிமேகலை கதை பாடிய புலவன் மதுரைக் கூலவாணிகன் சாத்தன். அவன் காவிரிப்பட்டினம் கடலாற் கெட்டு அழிந்தபின் இருந்த பாவலன். புத்தரின் தூய தத்துவம் மறந்து பேதைமை புகுந்து ஊக்கமும் உரனும் போக்கிய சாக்கியர் பிறமதம் பழித்துப் புன்கதை புனைந்து தம்மதம் புகழும் பிந்தியகாலப் பௌத்தக் கொள்கையன்.

சீத்தலைச்சாத்தர் வைதிகவழக்கொடு மாறுபடாத பொதுநோக்குடைய விரிந்த பொதுவறவுள்ளமுடையவர். இன்னும் சீத்தலைச்சாத்தர், தொல்பெரும்புலவர் எல்லோரையும்போற் புரவலர்ப்பாடி வாழ்க்கைபேணும் இரவற்பாவலர். அதனால் பாண்டியன் மாண்டதும் சேரனைத் தேடிச்சென்று அவனோடும் தங்கியிருந்தவர்.

மணிமேகலையெனும் கணிகையின் துறவுபாடிய சாத்தன் மதுரையிற் கூலவாணிகனாதலின், இரந்துயிர்வாழ் தலை யிகழும் நிலையினன்.

இவர் இருவரையும் ஒருவரென்பது தெருமரலுளத்தர் தேராக்கூற்றும்.

பீடுயர்கூடலிற் பிற பெரும்புலவர் கூடுதல்போலவே சாத்தப் பெயருடைத் தமிழ்ப்பாவலர் பலர் வாழ நேர்ந்ததால், பிறர் பலர் அப்பெயருடையருள் வேறிவற் பிரித்துச் சுட்ட ஊர்போதாமல் தொழிலையும் கூட்டிக் "கூலவாணிகன் சாத்தன்" என்று இவனை ஆலவாய்ப் புலவர் அழைத்தனர் போலும்.

தொல்லோர் பாக்களைத்தொகுத்த பிற்காலத்தவர் இப்புலவனும் சீத்தலைச்சாத்தரும் ஒருவரென மயங்கி, இருவர் பெயரொடும் ஈரூர்த் தொடர்பையும் மருளவழங் கத்தொடங்கியதால் பின், தெருளாப்புலவர் தேரு து இணையடை சேர்ப்பாராயினர். "மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார்" என்று ஒரு பெயர்க்கடையாய் ஈரூரி ணைத்தும் போதாமல், தொழிலையும் சேர்த்துச் சுட்ட வேண்டுவதேன்?. அன்றியும் ஒருமை பன்மைகள் விரவு தல் எதற்கு? வாணிகர் சாத்தனுர் என்பதால் எழும் ஏதம் என்ன? தொகைநூற் புலவர் வரிசையில் வேறு யாரும் இவ்வாறு ஈரூரிணையடைபெறுமையாலும், சாத்தற்கும் ஓராங்கு நிரந்தரமாகப் பாட்டுக்கள் தோறும் சீத்தலை யோடு மதுரையும் சேர்ந்துவாராமையானும், வந்த சில இடம் எழுதுவோர்பிழையெனத் தெளிதல் எளிது. தொழிலோடு ஊரும் சொல்லாதுவிடுத்துத் 'தண்டமி ழாசான் சாத்தன்' என்றே இளங்கோவடிகள் இயம்பக் காண்போம். மதுரை வணிகன் மற்றைய சாத்தன் இல் லாப்போது தொழிலடை கூட்டிச் சொல்லாதமைந்ததிற் பொல்லாங்கு இல்லை. பதிகம் இரண்டும் சீத்தலைச்சார் பைச் சாத்தற்கு ஏற்றிக் கூறவும் இல்லை. "மதுரைக் கூலவாணிகன் சாத்தன்" என்றே சிலப்பதிகாரச் செய் யுட்பதிகமும், "கூலவாணிகன் சாத்தன்" என்றே மணி மேகலைப்பதிகமும் சுட்டியமையும்.

அகத்தில் 53, 134, 330 பாக்களின்கீழும், நற்றிணை, 36, 127, 336 மூன்று பாட்டோடும், குறுந்தொகை 154-ஆம் பாட்டோடும் கூடலூம் கூலவாணிகக் குறிப்பும் விடப் பட்டுச், சீத்தலையொன்றே சிறப்படையாகச் சுட்டக் காண்குவம். அதன்மேல், சீத்தலைச் சாத்தருக்கு யாண்டும் பலர்பாலீறும், வாணிகன்சாத்தற்கு ஆண்பாலீறுமே புணர்த்து வேறுபாடுணர்த்துங் குறிப்பும் நாம் மறத்தற் கில்லை. பண்டைப்புலவர் கொண்ட மதிப்பு இவ்விருவரி டத்தும் வேறுபடுவதை இவ்வீறுகள் காட்டும்.

இன்னும் இவ்விருசாத்தரும் வெவ்வேறுபுலவரென்று விளக்கும் குறிப்புகள் வேறும் உளவாம். சீத்தலைச்சாத்தர், செங்குட்டுவனெடு கிள்ளிவளவன் நெடுஞ்செழியன் எனும் வண்புகழ் மூவர் தண்டமிழ்வரைப்பை ஆண்ட நாள் வாழ்ந்து மாண்ட புலவர். அவர் காலப்பாண்டியன் வடவாரியர்படைகடந்த நெடுஞ்செழியன். அவனுக்குப் பிறகு மதுரையை ஆண்ட பாண்டியருள், தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் ஒருவன். அவ னுக்கும் பிறகு சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறனைப் பாடியவன் மணிமேகலைதுறவுபாடிய வாணிகன் சாத்தன். சீத்தலைச்சாத்தர், கரிகாலன் தந்தை இளஞ்சேட்சென்னி யையும், செங்குட்டுவனையும் அவனுக்கு முன் வஞ்சியி லாண்ட நெடுஞ்சேரலாதனையும் பாடிய பலரோடு ஒரு காலப்புலவராவர்.

எனவே, பதினெட்டு நூற்றாண்டுகளுக்குமுன் செங் குட்டுவனெடுதங்கும் தகவினரென்று சிலப்பதிகாரம் புக ழும் பழம்புலவர் சீத்தலைச்சாத்தர், பொதுவறு சிறப்பிற் புகார்மகளிர் தம் சோழனின் பாழித்தடவரைத்தோள் பாடிப் பாராட்டிய பழங்காலப்புலவராவர். மணிமேகலை கதை அணிபெறப்புனைந்த மதுரைக் கூலவாணிகன் சாத்தன், காவிரிப்பட்டினம் கடலில் ஆழ்ந்தபின் சாக்கிய மதத்தரை ஊக்கமுயன்ற வேறோர் பிற்காலப் புலவரு தல் ஒருதலை.

---

# மெய்கண்டார்நூல் மொழிபெயர்ப்பா? தமிழ்முதல்நூலா?

சிவநெறிச் செல்வரான மெய்கண்டார் பெயரால் வழங்கும் நூற்பெயர்யாது? அதை முதலில் இயற்றியவர் யார்? சுத்தாத்துவித வைதீக சித்தாந்த சைவசமய குரவர்களே இவற்றை வேறுபடக் கூறுகின்றனர். மாதவச் சிவஞான யோகிகள் வடகைலயில் சங்காரக் கடவுளான உருத்திரனுரிடம் உபதேசம் கேட்ட நந்தி தாம் கேட்டபடி சனகாதி முனிவருக்குத் 'தேவபாடை'யில் இயற்றித் தந்தது சிவஞான போதமென்றும், அதைச் சுவேதவனப் பெருமாள் என்னும் பிள்ளைத்திருநாமமுடைய மெய்கண்ட தேவர், பரஞ்சோதி முனிவர்பால் பெற்றுத் தமிழில் மொழிபெயர்த்தார் என்றும் வற்புறுத்துகிருர்கள். சைவசரபமான விருதைச் சிவஞான யோகிகள், சிவபெருமான் தமிழில் இயற்றிய சிவஞான போதம் நந்தி முதல் பரஞ்சோதி முனிவர்வரை பரம்பரையாய்க் கேட்டு வந்ததை, மெய்கண்டார் ஏது திருட்டாந்தம் கூட்டி மீட்டுரைத்தாரென்று தம் "போதவினவிடை"யிற் புகலுவர்.

தனித்தமிழ்ப் பேருரையாளர் தன்னிகரற்ற சிவானுபூதிச் செல்வர் மறைமலையடிகள், நந்திமுதல் வழிவழியே உபதேச முறையிற் கேட்டுவந்த வுண்மைகளை வடித்து நூல் வடிவில் சிவஞான போதத்தை மெய்கண்டதேவர் இயற்றியருளினாரென்று கருதுகிறார்கள். ''மாபாடிய''ச் சிவஞானயோகிகள் இதன் முதல்நூல், வடமொழி இரௌத்திராகமத்தில் ஒரு படலம் என்பர். போதவினாவிடைப் பிந்திய யோகியார் இது சிவனார் இயற்றிய தமிழ்த்தனி முதனூலென்பர். முனிவரான முந்திய யோகிகள் மெய்கண்டாரை மொழிபெயர்ப்பாளர் என்பர். இந்திரபோகப்பிந்திய யோகியார் சிவன் சொல்ல நந்தி யெழுதிய தமிழ்ப்போத ஏட்டை வாங்கித் தமிழ் நாட்டிற்கு ஏதுக்கூட்டி மீட்டுரைத்தவரே மெய்கண்டார் என்று கூறுவர். மறைத்திருவடிகளாரும் விருதை யோகியாரொடு பெரிதும் உடன்படுவர்.

இவ்வாறு தம்முள் மாறுபடினும் ஒருவந்தம் இவர்கள் ஒருப்படுமொன்றிரு முடிபு முண்டு. ''வடநூற் கடலுக் கெல்லை கண்ட மாதவ முனிவரும், வேதாகமங்களும் போதமும் ஆதியில் சிவனே தமிழில் செய்தவை யென்று முழங்கிய தமிழ்ச் சிவயோகியும் மறைமலையடிகளும், சிவநெறித்தமிழ்நூல் ''சிவஞானபோதமென''வட மொழிப் பெயரோடு எழுந்ததென்பர். அதன்மேல் பிறரால் பிறந்த பெரும் பொருள் நூலைத் தானாக்கியதுபோல் நெஞ்சறிந்த பொய்யை அஞ்சாதுரைத்தவர் மெய்கண்ட தேவர் எனும் குறிப்பும் இவர் கூற்றில் உள்ளுறை முடிபாய் விளங்குகிறது. தமிழ்ப் ''போதம்'' மொழிபெயர்ப்பாயின் இதன் வடமொழி முதனூலையும், முதனூலாயின் இதனையுமே சிவன்பால் கேட்டு நந்தி கையிலெழுதினார் என்பதே, தவயோகியும் சிவயோகியும் துணிந்த

முடிபு. எனவே, வெண்காட்டு வேளாளர் மெய்கண்டவர் அல்லர், கைக்கொண்ட கைலை நூலை வையத்து வெளிப் படுத்தியவரே, மெய்யை மறைத்ததைச் செய்தது தாமெனக் கொள்ளவைத்தவர் அவர் என்று உள்ளக் கருத்தைத் தெள்ளத் தெளியக் கண்டதுபோல் இவர் கூறுகின்றனர்.

“சிவஞானபோதம்” நூற்பெயரென்றும், அதை முத லிற் செய்தவர் நந்தியென்றும், ஆரியமொழியில் இரௌத் திராகமத்தின் ஒரு படலம் தமிழில் மொழிபெயர்த் துரைக்கப்பட்டதென்றும் கூறுதற்கேற்ற குறிப்பு எது வேனும் தமிழ் முதனூலினும், அதன் வழி நூலாகிய சித்தியாருள்ளும் சிறிதும் பெறுகிலம். அதற்கு மாறாக மெய்கண்டார் நூலை மெய்கண்டாரிடமே நேரிற் கேட்டுத் தெளிந்த அருணந்தியார் அதன் விளக்கமாகத் தாமியற் றிய சிவஞான சித்தியாரென்னும் வழிநூலில் “மின்னா மர் பொழில் சூழ்வெண்ணெய் மேவிவாழ் மெய்கண்டார் நூல், சென்னியிற் கொண்டு சைவத்திறத்திறத்திணைத் தெரிக்கலுற்றாம்” என்று பாடினர். முதல்நூற் சிறப்புக் கூறும் செய்யுளிலதன் பெயரைச் “சிவஞானபோதம்” என்னாது, “மெய்கண்டார்நூல்” என்றே கூறியிருக்க, அதைவிடுத்துப் புதிய வடமொழிப் பெயர் புனைந்து சூட்டுவானேன்? நூற்புலவரின் நாற்பத்தொன்பது மாண வருள் முதல்வராய், அந்நூலை விளக்கப்புகுந்த அருணந்தி யார் அறியாத பெயரை, யாங்ஙனம் கண்டு யாரிடம் கொண்டு யாவர் புகுத்தினர்? சிவன் தமிழர் தனிமுதற் கடவுள் எனவும், மாயாவாத ஆரிய வேதாந்தத்துக்கு மாறாகத் தமிழர் சிவநெறி மெய்கண்ட நூலென்றும் பறையடித்து மகிழும் சான்றோர், தமிழ்ச் சிவநெறி அறிவு நூலை “ஞானபோதம்” என ஒரு பொருளுக்கு இரு வட

மொழிச் சொல்லை இணைத்துப் பெயரிட்டுக் களித்து மயங்குவதேனோ?

இனி, மக்களுக்குய்யத் தக்க நூல்களைத் தரக் கருதிய தமிழ்ச் சிவனார், தமிழையிகழ்ந்து வேதாகமங்களை ஆரியர் மொழியிலாக்குவாரா? அதுமட்டோ? தன்னை வணங்குந் தமிழர்க்கு விலக்காய், வேதங்கேட்பின் உருக்கிய செம்பவர் காதில் ஏற்றுச் சாதற்குரியராய் விதிப்பாரோ? பலப்பல குட்டித் தேவரைப் பரசும் வேதம் தமிழருக்கு வேண்டாமென்று அதை ஆரியர் மொழியிலாக்கினரெனினும், தன்னுயர் கடவுட்டன்மையை விளக்கும் ஆகமங்களையும் தமிழரறியா வடவர் மொழியி லியற்றியருளிய எண்ணம் ஏதோ? இனித் தமிழர் உய்யக் கருதி யனுப்பிய உயர் ''சிவஞானபோத''த்தையேனும் தமிழிலன்றி ஆரிய மொழியிலாக்கிய நோக்கம் யாதோ? சங்கப் புலவராய்த் தங்கிய சிவனார் தமிழிகழ்ந்தாலும், மொழிபெயர்த் தனுப்பத் தமிழறிந்தவர் கையிலையிலில்லையா? ஆரியமறியாக்குதலைத் தமிழ்ச் சேய் சீரிய நுண்பொருள் கல்லாமொழியுளதெல்லா முணர்ந்து சொல்லவல்லதென்று தெரிக்கத் திருவுளமிருந்தபெற்றியோ? அவ்வருட்பேறுபெற்ற கடவுட் குழவி தான் மொழிபெயர்த்தளித்த மெய்வரலாற்றை மறைத்துளத்து அதைத் தனது முதனூல்போல அவை யடக்கியலொடு நவைபடச் செய்ததை நயக்க வொண்ணுமோ.

விருதையார் கூற்றினை மெய்யெனக்கொள்ளின், மெய்கண்டார் பொய்மை வையங்கொள்ளா வழுவாய் முடியும். நந்தி செய்து தந்த நூலைச் சொந்தமாக்கிய சுவேதவனர் செய்கை அந்தமில் பழிக்கு அவரையாளாக்குமன்றோ? கடவுட் சிவனே, கையைநந்தியோ கண்டு தந்ததைக்

கொண்டு தான் கண்டதாய்ப் பொய்யுரைத்தவரைப் "பொய்கண்டகன்ற மெய்கண்ட தேவர்" எனப் புகழ்வது தகுமா? சாக்கியர் போதமுற்றதால் புத்தரானது போல், சுவேதவனப்பெருமாள் சிவநெறியுண்மைகளைச் சிந்தையிற் றெளியக் கண்டதால் அவர் புதிய புகழ்ப் பெயரால் துதிக்கப் பெற்றனர். தாம் கண்ட வுண்மைகளைத் திரட்டி வடித்தவர் செய்த நூற்கவர் புகழ்ப் பெயரே ஆகுபெயராய் "மெய்கண்டார்" என வழங்குகிறது. பிறர் கண்டதை இவர் கொண்டுரைத்தனரேல் இவர் மெய்கண்டாரென்பது பொய்யாகும்.

இன்னு மிவ்வுண்மையைத் தெளிக்கும் சான்று வேறுமுளது. சுவேதவனர் செய்த தமிழ்ச் சிவநெறி நூல்மொழிபெயர்ப்பென்போர் அதற்கு முதனூலாகக் காட்டும் வடமொழிச் சிவஞானபோதம், பன்னிரு சுலோகமுள்ளதோர் சிறு செய்யுள். அது, சிவனருளிய இரௌரவாகமத்தினொரு படலமென்பர். அவ்வடமொழிப் போத நூலிறுதிச் சுலோகமே அவர் கூற்றைப் பொய்யாக்கி அது முதனூலாகாமையையும், சிவஞானபோதமென்னும் பிறிதொரு நூலிலுள்ள எல்லாப் பொருள் நிச்சயத்தையும் அது எடுத்துரைப்பதென்பதையும் விளக்குகிறது.

"ஏவம் வித்யாத் சிவஞாந போதே சர்வார்த்த நிர்ணயம்" என்பது இறுதிச் சுலோகவீற்றடி முடிவு. "இவ்வாறு சிவஞான போதத்தில் எல்லாப் பொருள்களும் நிச்சயிக்கப்படுதலறிக" என்பது அதன் செம்பொருள். எனவே, வடமொழிச் சுலோகம் சிவஞானபோதமன்று, சிவஞானபோதத்திலிப்படி கூறப்படுகிறதென்று அது எடுத்துரைக்கின்றதென்ற உண்மை தெளிவாகிறது. சிவஞானபோதமென வடமொழியில் வேறு நூலின்மையாலும், மெய்கண்டார் தமிழ்நூலே நாளடைவில் சிவஞான

போதமென வழங்குவதாலும், அச்சுலோகங்கள் மெய்கண்டார் பன்னிரு நூற்பாக்களின் மொழிபெயர்ப்பென்பது வெள்ளிடை மலையாய் விளங்குகிறது. சிவனே முதலிற் செப்பியது அந்தச் சுலோகங்கள் ஆமேல், "இவ்வாறு உண்மைகள் சிவஞானபோதத்தில் நிச்சயிக்கப்படுவதறிக." என்னும் கடையடி பொருள் முரணுகிய பொருந்தாக் குளறுபடையாகுமன்றோ? அதனுல் அவ்வீற்றுச் சுலோகக் கடையடி கூறுவது உண்மையென்பதும், தமிழில் விழுமிய நூல்களையெல்லாம் வடவர் மொழிபெயர்த்துத் தமதாக்கும் வழக்குப் பற்றி மெய்கண்டார் நுண்பொருணூலும் வடமொழியில்பின்னர்ப்பெயர்க்கப்பெற்றதென்பதும், அது மொழிபெயர்ப்பாதலின் பாயிரம் அவையடக்கின்றி யாக்கப்பெற்றதும் தெள்ளத்தெளிய, இறுதிச் சுலோகமியம்புகிறது. அப்படியிருந்தும், தமிழ்நூலே மொழிபெயர்ப்பென்று மொழிபவர், அத்துவித சைவ சுத்த வைதிக சித்தாந்திகளாதலின், அதினமக்கு வியப்பின்று.

தென்றமிழ்ச் சிவனை வடவாரியரின் பனிமலை யேற்றி, நூற்புரி தோளில் நுடங்கச்சாத்திப் பார்ப்பானுக்கி வாழ்த்தி மகிழும் மனப்பாங்குடையார், நம்மவர் பேசும் தமிழை யிகழ்ந்து, தெய்வ நூலெல்லாம் தேவ பாடையிலிருப்பதே முறை யென்றெண்ணுதல் இயல்பு. தாமறியாத ஆரியர் வேதம் ஏமமென்று எண்ணுமவர் இயற்கைக்கேற்ப வேதாந்தத்தின் வேறும் தமிழ்ச் சிவநெறியைச் சுத்தாத்துவித வைதிக சைவ சமயமாக்கினர். வடமொழி பெயர்ப்பை முதனூலாக்கி, மெய்கண்டார் செய்த தமிழ் முதனூலை மொழிபெயர்ப்பென்றூர். அதனுலவ்விரு நூற்பெரியாரும் பொய்யராவதைப் பொருளாயெண்ணிலர்.

மெய்கண்டார் தமிழிற் றனிமுதனூலே இயற்றின ரென்பதும், அதன் மொழிபெயர்ப்பே வடமொழிப் "போதம்" ஆகுமல்லது வடநூற்கது மொழிபெயர்ப் பாகாதென்பதும், புதிதாய் நானே புகலுவதன்று; முன் மூத்தறிஞர் சொன்னதுமுண்டு சித்தியாருக்குரை வகுத்த வித்தகர் பலருள், முனிவர் மட்டுமே "மெய்கண்டதேவன் மொழிபெயர்த்தருளின" தாகக் கூற, அவருக்கு முந்திய மறைஞானதேசிகரும் சிவாக்கிரயோகியும் நிரம்ப அழகி யரும் மெய்கண்டநூலை சுவேதனப் பெருமாள் தாமே இயற்றிய முழுமுதநூலெனப் பாராட்டியுள்ளதும் ஆரா யற்பாலது. அதை மொழிபெயர்ப்பென்ற பிற்றைக்கூற் றுக்கு இற்றைஞான்றுவரை எனைத்துச்சான்றும் எவரும் கூறாமையும் கருதற்குரியது.

இனி, இவ்வுண்மைக்கு மாறாக, தம் கூற்றுக் கிவர் சாற்றும் சான்று, தமிழ்ப் போதத்தின் சிறப்புப்பாயிரச் செய்யுளேயாகும். முதலில், சிறப்புப்பாயிரம் செய்தவர் யாவர் என்பதிதுவரை யாரும் தேராச் செய்தியாகும். யாவரேயாயினும், மெய்கண்டார்க் கதிற் பொறுப்பில்லை என்பதொருதலை. ஒரு நூற்குச் சிறப்புப் பாயிரம் செய் தற்குரியவர், அந்நூற்புலவன் றன்னோடு கற்றோன், அவன்பாற் கற்ற நன்மாணுக்கன், தகுமுரைகாரனென் றின்ன மூவகைத்தன்மையராவர். பனுவற் புலவன் பாயிரங் கூறல் நூல்மரபன்று; ஆன்ற சான்றோர் வழக்கு மில்லை. அன்றியும் பாயிரச் சொற்களை ஆய்ந்து பார்க் கினும்,அவை சுட்டும் உண்மையும் அதுவே. "உயர்சிவ ஞானபோதமுரைத்தோன், பெண்ணைப்புனல் சூழ் வெண் ணெய்ச் சுவேதனன், பொய்கண்டகன்ற மெய்கண்ட தேவன்" எனப் படர்க்கையிற் பாயிரம் பேசுதலாலுமது தேற்றமாகும். இனி அவரொடு கற்றோர் யாருமிலரால்,

அவர்பாற் கற்ற மாணவர் யாருமப் பாயிரம்பகர்ந்ததாய்க் கேட்கிலமாதலால், இவ்வரும் பொருள் நூற்குரைதரும் பெரியாரெலாம் நூலொடு பாயிரம் சேர்த்துரைகூறி, அதைச் செய்தவர் யாரெனச் சுட்டாமையினுல், மூவகைத் தகவினர் யாவரும் பாயிரம் செய்திலரென்பது தெற்றென விளங்கும். ஆகவே, நூலை ஆக்கிய புலவரும், நூற்குப் பாயிரம் போக்கற் குரியருமல்லாத, தம் பெயர் சொல்லத் துணியாத ஒருவர் செய்து சேர்த்த பாயிரம், நூல் வரலாற்றை நுனித்தாய்ந்து நுவலச் சாலாது.

மேலும், சிறப்புப் பாயிரச் செய்யுளை நோக்கினும், மெய்கண்டதேவர் பொய்விண்ட குறிப்புப் புலப்படவில்லை. அவர், நந்தி செய்ததைத் தமிழில் பெயர்த்துத் தந்தன ரென்றேனும், செந்தமிழ் மொழியில் நந்தியார் செய்து வந்ததை வாங்கி வழங்கினரென்றேனும், சிறப்புப் பாயிரம் செப்பவுமில்லை. அது வருமாறு:—

''மலர்தலை யுலகின் மாயிருள் துமியப்
பலர்புகழ் ஞாயிறு படரி னல்லதைக்
காண்டல் செல்லாக் கண்போல், ஈண்டிய
பெரும்பெயர்க் கடவுளிற் கண்டுகண் ணிருடீர்ந்து,
அருந்துயர்க் குரம்பையி னுன்மா நாடி,
மயர்வற நந்தி முனிகணத் தளித்த
உயர்சிவ ஞான போத முரைத்தோன்,
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்ச் சுவேதவனன்
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவன்,

பவாநனி வன்பகை கடந்த
தவராடி புனைந்த தலைமை யோனே"[31]
(சிவஞானபோதம்: சிறப்புப் பாயிரம்).

சுவேதர் சொன்ன மெய்ந்நெறித்தமிழ் நூலை, அவர் மாண வருள் முதல்வரும் சகலாகம பண்டிதருமான அருணந் தியே "மெய்கண்ட நூல்" என்று விதந்து கூறினர். சக லாகம பண்டிதர், வடமொழிப் போதமோர் படலமாய்க் கொண்ட இரௌரவாகமம் கற்றில ரென்பது சற்று முண்மையா? கற்றிருந்தால், அவர் அவ்வாகமப் படல மொழிபெயர்ப்பாவதை மறந்தோ மறைத்தோ முத னூற் பெயரையும், உண்மையையுமழித்துத் தமது குர வரே மெய்கண்டுரைத்ததாய்ப் பொய்யைத்துணிந்து புகன்றனர் என்பதா? முதனூல் உண்மையை முழுது மறைத்துத் தாமொழிபெயர்த்ததைத்தமதறிவாலேகண்டு தாமுரைத்த மெய் நூல்போல வழங்கினராயின், சுவேத வனப் பெருமாள் "பொய்கண்டகன்ற மெய்கண்டா" ராவதெப்படி? அவர் தமிழ் நூலின் உண்மை வரலாற்றை மெய்கண்டாரினும் அருணந்தி யாரினும் அதிகமாய் அறிந்து கூறுமாற்றல் பிந்திய பிறர் பெற்றவாறென்னே?

இனிப்பாயிரப் பொருளையே ஆய முயல்வோம். "காணுமுறுப்பாய கண்ணும், எல்லொளியின்றி இருளில்

31. மலர்தலை-விரிந்த இடம்; துமிய-கெட; ஞாயிறு-சூரியன்; குரம்பை-உடம்பு; ஆன்மா-உயிர்; மயர்வு-மயக்கம்; நந்தி-நந்தியம்பெருமான்; முனிகணம்-சனற்குமார முனிவன் முதலிய முனிவர்கள்; பெண்ணைப் புனல்-பெண்ணையாற்றுநீர்; வெண்ணெய்-திருவெண்ணெய்நல்லூர்; சுவேதவனன்-மெய்கண்டதேவரின் பிள்ளைத் திருப்பெயர் சுவேத வனப் பெருமாள்; பொய்கண்டு-பொய்ச் சமயங்களின் பொருள் இது இது என்று கண்டு; பவம்-பிறவி; கடந்த-வென்ற; தவர்-தவத் தோர்.

பொருள்களைக் காண்கிலாதது போல், கெடு முடலுள்ளே நிலை யுயிர்ப் பரிசை, கடவுள் துணையின்றி உயிர்கள் தாமே உணரவொண்ணுது; இவ் விழுமிய சிவநெறி மெய் யறிவு, முன் நந்தி முனிவருக்குச் சொன்னது; அவ்வுண் மையைக் கடவுள் அருளாற் கண்டு தெளிந்து மக்களுக் குரைத்தான், சுவேதவனன் என்ற மெய்கண்ட தேவன்", என்பது பாயிரப் பொழிப்பு. இதில், நந்தி முனிவருக் களித்தது, ஒரு நூலென்ற குறிப்பில்லை, "சிவஞான போதம்" என்ருல் சிவஞானமாகிய போதம். அதாவது மெய் அறிவு என்று பொருள். நந்தியாற் போதிக்கப்பட் டதும் அம்மெய்யறிவே. சுவேதனர் கண்டுரைத்ததும் அவ்வுண்மையே.

அதனுலவர் "மெய்கண்டா"ராயினர். அவர் செய்த நூலும் "மெய்கண்டானூலா"யிற்று. கடவுள் துணை யின்றிக் கடவுளை உயிரறியாதென்பதே சிவஞான சார மென்பதும், அதுவே மெய்கண்டார் நூலி னுண்பொரு ளென்பதும் பாயிரப் புலவர் கருத்து மெய்கண்டார்கூறும் உண்மைகளுள் அதுவுமொன்ருவதன்றி அதுவே நூல் முடிபன்று. உலகு—உயிர்—கடவுளின் நிலை வினைத்தொடர் இயல்களை அறுதியிட்டளவையா லுறுதிகண்டுரைப்பது மெய்கண்டார் நூல். அதற்குப் பாயிரம் பாடிய பேரிலாப் புலவர் தாங் கண்டவாறு கூறிச் சென்ருர்.

இனிக் கடைப்பாயிரம் கடைச் செருகலாதல் வெளிப் படை. நூலி னிறுதியிலோதும் பாயிரம் புலனெறி வழக் கில் கேட்கப்படாத ஓர் புதுமையாகும். அதன்மேல், முதற் பாயிரம்பெற்ற இந்நூற்குக் கடையிலொரு பாயிரமுடைவ தெதற்கு? ஓதும்நூ லெதற்கும் வேதச் சார்பு வேண்டும் என்னும் ஐதிகம் புகுந்த பிற்கால வைதிகப் பண்டித

உலகில், வட கைலைச் சிவனார் வாயாற்கூறிய ஆரிய வேதா கம சாரமாய்ப் போதநூலை நந்தி ஓதின உண்மை பரவிய பின்னர், ஊர் பெயரறியா ஒரு பெருஞ் சைவர் செய்து கூட்டியகடைப்பூட்டிதுவாம். "மெய்கண்டார் நூலியற்றிய வரல்லர்; மொழிபெயர்த்ததற்கு வார்த்திகப் பொழிப் புரை சேர்த்த அவ்வளவே! சுவேதவனர் செய்தது;" என்ற கதையை இணைக்க நினைத்துப் பிணைத்த பின் கூட்டு. ஏது திருட்டாந்த வார்த்திகம் பொழிப்பு மெய்கண்டார் நூலில் முன் இருந்ததில்லை என்று தோன்றுகிறது. அதை நூற் பாவாரி எழுத்து விடாமல் மொழிபெயர்த்துள்ள வட மொழிப் போதத்தில், ஏது திருட்டாந்தம் எதுவும் குறி யாமை கருதற்குரியது. முன்னவை முதநூலிற்குப் பின் னிருந்தால், வடமொழிப் பெயர்ப்பிலவை விடுபடமாட்டா. அதிற் சுட்டது விட்டதால், அம்மொழிபெயர்ப்பின் பின் னிவை செருகப்பெற்றன என்னில் பிசகாகாது. அப்புதுக் கூட்டுக்காதரவாகக் கடைப்பாயிரக் கதை முடைந்திருக்க லாம். முதற்பாயிரமதற்கு நூலொடு சிற்றுரை விரித்த சிவஞான முனிவரர், கடைப்பாயிரத்தைப் பொருட்படுத் தாமையும் கருதற்பாலது.

கடைசியாக நான் விடை தரவேண்டிய வினா ஒன்று ளது. மாபாடிய கர்த்தர் மாதவ யோகிகள் கூற்றைக் கடுப்பது சமயமரபோடமையுமா? எனச் சிலர் வினவ லாம். மெய்கண்டார் செய்தது முதனூலா? மொழி பெயர்ப்பா? என்பதை ஆராய்ந்து, தக்க சான்றும் மேற் கோளும் காட்டித் தம் முடிபு கூறியிருந்தால், அவர்கள் கருத்தை எவரு மதியாதிருக்க இயலாது. தமக்கு முன் னமே, தம்மடக் குழுவினர் தழுவி வழங்கிய கொள்கையை முனிவரர் கடுத்திலா தெடுத்துக் கையாண்டுள்ளார். உப தேச முறையிற் குரவர் கூறியதை அவமதியாமற்கொண்டு

தாமும் கூறினர்போலும். கூர்த்ததம் மதியின் ஓர்பா லுண்மைபார்த்துத்தேர்ந்துதெளிந்துகூறிலர். முனிவர்பா லெனக்குத் தனி மதிப்புண்டு. ஆங்கிலச் சுவடியே முதலிற் றொடங்கி 'அம்மொழிப் பயிற்சியி லமூந்திய எனக்குத் தோன்றாத் துணையாய்த் தமிழறிவுறுத்திய முதற்பெருங் குரவர் சிவஞான முனிவர். எந்தையார் நண்பர் எனக்குத் தந்த நைடதம் வெறுத்து, நான் முதல் விரும்பிப் படித்து வியந்தது காஞ்சிப்புராணம். சிவன்பாலன்பு தடிக்கச் செய்தெனைப் பதினாலாண்டுப் பருவத்து விசேடதீக்கை பெறவைத்து, தமிழ்ச் சுவையோடு நுண்புல நுகர்வில் வேட்கை விளைத்ததவர் பன்னூற் பயிற்சியே. பிறரெவர் கூற்றையும் அறிவாலாய்ந்து கண்ட மெய்யை நான் கடைப்பிடித்து ஒழுகும் பண்பினை வளர்த்ததவர் நுண் பொருளுரைகளே. பழந்தமிழ்ச் சிவநெறி அழுந்திய உணர்வினேன். 'அத்துவித வைதிக சித்தாந்தமென்பது பழந்தமிழ் அறியா வடமொழிப் புதுப்பெயர் ஆதலின் அதனை யென் தமிழ்ச் செவி வெறுக்கும். தமிழில் விளங்க வழங்காதவைகள் தமிழர் கடவுட் கொள்கைகளாகா வென்பதென் கருத்து. சிவநெறி தமிழர் பழவழிபாடு. நவநனிமதங்களை விரும்பேனாதலின், நாத்திகமென்பதும் நானறியாதது. மெய்கண்ட பெரியார் நல்ல தமிழர். கடவு ளறிவால் கண்ட மெய்ந்நிலையைஅரிய இனியதமிழ் நூற்பா வில் தெளியத் திரட்டிச் செறிய யாத்துளர். அவர் சொன்ன உண்மைகள் என்றும் மன்னியதன்மைய எனி னும், அவற்றைத் தொகுத்து அளவை முறையில் வரிசைப்படுத்திச் செய்யுளுருவில் முதலில் செய்தவர் சுவேதவனராகிய மெய்கண்ட தமிழ்ப் பேரறிவாளர். அறிவே மக்களை ஆன்றோராக்கும் கடவுட் பண்பு. அறிவை யிகழ்ந்து பிறர்வழிமொழிவார் உறுப்பொத்துப் பண் பொவ்வா வேறு திறத்தினர். அறமறி அறிவின் திறத்

தொழுகுவது தமிழரியல்பு அறிவினும் தங்குழு மரபினைப் பேணல் ஆரியர் வழக்கு. வடமொழிக் கடலை மாந்தி ஏக் களித்தவர் மாதவப் பொதியைப் புதிய அகத்தியர் ஆதலின், அவர் நம் தமிழ் முனியாயினும் வைதிக வழக்கில் ஊறிய உணர்வினர்; ஊன்றிய காதலர். அவர் மதிநுட்பம் நூலோடுடையராயினும் அதி நட்பு மடத்து மரபினில் வளர்த்த உளத்தினர். அவரிடத்தன்பும் மதிப்புமுடையேனுயினும், மெய்கண்டார்பால் பெருமதிப்புடையேன். முனிவர் பெருமையை முழுதும் பேணும் நான் அவரினும் பெரியவர் மெய்கண்டாரெனக் கருதுகின்றனன். அவர் அறிவாலே ஆய்ந்து துணியாமல் மடத்துமரபால் உரைத்ததைக்கொண்டு மெய்கண்டாரைப் பொய்யராக்கத் துணிகிலன். அதனுலிதனை வெளியிடத் துணிந்தேன். தவச் சிவஞான முனிவர்க்கன்பு தணிதலாலன்று; தமிழ்ச் சிவ நெறியிலும் தவா மெய்கண்ட பெரியாரிடத்தும், பெருகு மன்பாற்றூண்டப் பெற்றிதைப் பன்முறை முன்னே பல்லோரிடத்தும் சொன்னதையின்று* எழுதலாயினேன். தவமுனி பிறந்த பாண்டி நாட்டினேன், அவரும் வணங்கும் சோணுட்டறிஞரை மீக்கூறுவது மிகையாகாதென வைதிகச் சைவரும் வையாதுண்மையை நடுநிலை உளத்தால் நாடுவரென்று நம்புகின்றேன்.

---

* மே 1944.

# கல்வியும் படிப்பும்

தமிழகத்தில் படிக்கத் தெரிந்தவர் நூற்றுக்குப் பத்துப் பேர்கூட இல்லை என்பது, கணக்கெடுத்துத் துணிந்த முடிபு. படித்த பத்துப் பேரில், ஒருவர் இருவர் வீதம் உயர்ந்த வகுப்புக் கல்லூரிப் படிப்புடையாரைக் காணலரிது. அன்றியும், படித்தவரெல்லாரும் கற்றுத் தேர்ந்தவராகக் கருதவும் முடியாது. படிப்பு வேறு; கல்வி வேறு. அறிவு வளராமல் நினைவைப் பெருக்கி, உள்ளி உணர்தல் பள்ளிப் படிப்பு. ஆய்ந்து துருவித் தேர்ந்து தெளிதல் கல்வி. தெளிவற்ற படிப்பு சுவடிப் பயிற்சி ஆவதல்லால், அறிவு தருவது அருமை. தமிழ் நாட்டில் படியாதவரே மிகப் பலர்; படித்தவர் வெகு சிலர்; அவருள்ளும் நூல்களைக் கற்றுத் தேர்ந்தவரைக் கைவிரல் கொண்டு கணக்கிடலாம் என்பது மிகையாகாது. பண்டிதர் என்று கொண்டாடப்படுபவர் பலர் இந்நாட்டிலுண்டு; அவர் பயில் நூல் பல ஏட்டிலுண்டு. ஏட்டுச் சுவடிகள் எழுந்து நடவா. நாட்டில் பண்டிதர் நடக்கும் சுவடிகள்.

வரம்பில்லா ஏடுகள் நிரம்ப ஓதும் படிப்பு வேறு; தெளிந்து பொருள் துணிந்தறியும் கல்வி வேறு வறண்ட சொல்வாணிபம் படித்த பண்டிதர் பண்டமாற்றாகும். அறிவுத் துலையில் நிறுத்துப் பொருட்பயன் அளந்து கைமாறுதல் கற்றவர் கச்சவடம். "கொள்வதும் மிகை கொளாமல், கொடுப்பதும் குறை கொடாமல்" வாழ்க்கையின் அறவரம்பு இகவாத அறிஞர் செட்டு, சமனிலை வாணிபம். அது அளப்பரிய வளப்பமும் வாழ்வழிக்கும் வறுமையும் என்றுமின்றி, நீதியில் நிலைத்த ஊதியம் உதவுதல் ஒருதலை. பயனிலா மதிப்பும், பணமும்கூடப் படிப்பால் வரலாம். ஆனால், நயனறிவார் நாடும் மாண்பு அறிவு தரும் கல்வியால் மட்டும் செறிவதாகும். படித்த நூற்சுமை தடித்த பெருமிதம், ஆழாதகன்று நீர் ஊறாத கிணறுபோல, பிஞ்சாக உதவாத "இணர் ஊழ்த்து நாறா மலர்" போல, பாழ்த்த களர் நிலத்தில் உழுது விதைத்த விழல் போல, பயன்படாது. கல்வி நல்ல அறிவைத் தரும். "மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு"-என்பது பொய்யா மொழி.

இன்னும், படிப்பு ஓரளவு ஒட்பமும் உதவலாம். ஒட்பம்' வெறிதே கூர்த்த மதி நுட்பம். அறிவு ஒட்பத்தின் மறுதலை, கல்லாமலே ஒட்பம் படிப்பால் உண்டாகலாம். கல்வி ஒன்றே அறிவுதவும்.

"கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்
கொள்ளார் அறிவுடை யார்" [32] (குறள் 404)

என்ற வள்ளுவர் குறளால், கல்லார் ஒட்பமும், கற்றவர் அறிவும், முனையிலும் விளைவிலும், துலையிலும் விலையிலும்

32. ஒட்பம்-ஒண்மை, அறிவுடைமை; கழிய நன்று-மிக நன்று; கொள்ளார்-மதியார்.

வேறுபட்டவை என்பது விளங்கும். 'ஒட்பம்' நிலையுதலை இன்றி, இமைத்துடன் மறையும் மின்னலின் பின் எழுந்து குமுறும் இடிமுழக்கின் வெற்றொலிபோல்வது. அறிவு, வானில் நிலைத்த நிறைகதிர் ஒளியும், உடுக்கணத் திடை எழும் ஓவா இசையும்போலாம். ஒட்பம் பேய்த் தேர்; அறிவு. எண்ணிலா உயிரினம் ஓம்பும் தண்ணிழல் தருவ தோர் ஆல் போல்வது. அறம் அதன் ஆணிவேர், நடுநிலை நெடுமரம், அளி என்னும் பரிவு அதன் குளிர் தளிர். ஒட்பம் விளக்கிய செம்பு. படிப்பு அதை விளக்கும் புளி. மீண்டும் செம்பில் விரைந்து களிம்பூரும். அறிவு கழுவாப் பொன்; கல்வி அதை மினுக்கும் நுண்மணல். பழியஞ்சி வழுவிலக்கல் ஒட்பத்தின் இன்றியமையா இயல்பன்று. அறிவு பழிப்பகை; தீயதில் வெறுப்பும், தூயதில் விருப்பும் விளைக்கும் ஆற்றல் உடையது. "தீதுஒரீஇ நன்றின் பாலுய்ப்பது" அறிவின் பண்பு. விருப்பின் வழிப்படரல் விலங்கின் தன்மை; மாக்களியலும் மக்கள் உருவுமுடைய கயவரின் தன்மையும் "மேவன செய்தொழுகல்" ஆம். வேட்கையை அறிவால் வென்றடக்கி அறிநெறி ஓம்புதல் மக்கட் பண்பு ['மக்களே போல்வர் கயவர்". எனினும் மக்களை அவர் "உறுப்பு ஒத்தல் மக்கட் பண்பன்றால்; வெறுத்தக்க பண்பு ஒத்தல் ஒப்பதாம் ஒப்பு]—இவ் வுண்மை உணர்ந்தே, கற்றதனாலாய "அறிவுடையார்—எல்லாம் உடையார்;" படித்தும் அறிவிலார் "என்னுடையரேனும் இலர்"—என்று வள்ளுவர் வற்புறுத்துவர்.

அறிஞர் படிப்பால்வரும் ஒட்பத்தை மதியார்; அறிவு தரும் கல்வியையே அவர் என்றும் போற்றிக் கையாள்வார். "கல்வியில் பெரியவன் கம்பன்"— என்பது முதுக் குறைவுடைய மெய்ப்புலவர் பாராட்டும் முதுமொழி. கம்பருக்குப் பிறகு, கல்வி வேண்டா வம்பப் புலமை மதிப்

பொது நாட்டில் வழங்குகிறது. கிடைத்த ஏட்டைக் கிழித்து எறியாமல் துடைத்து வைப்பர் ஒரு சிலர்; படிப்பவர் மிகச் சிலர்; கற்பவர் இலராயினர். அறிவைப் 'புலம்' என்பது பழைய வழக்கு. கம்பர் காலம் வரை அறிஞரே புலவர் என்று அழைக்கப்பட்டார். பிறகு புதிய பண்டிதர் எல்லோரும் அறியாமையை வளர்க்கும் படிப்பையே பாராட்டிக் கையாளத் தொடங்கினர். அதனால் அதை வம்பப் (புதுப்) புலமை என்பதே பொருத்தமாகும்.

பிற்காலத் தமிழுலகில் பொருள் நிறையாமல் வறண்ட சொற்களை மனனமாக்கி, பணமிகுந்து 'அறிவில்லாத் துரைகளைத் தெட்டித் தேசமெலாம் புலவர் எனத் திரி கின்ற' பண்டிதரே பரிசும் வரிசையும் பெறுவாராயினர். வழக்கு-மரபு-எனும் சமூக்குப் பெயர்களால் மடம்தரு முதலிடம் பெறுபவர் தொகையே பெருகி வருகின்றது. கலை நிலையங்களில் விலை மதிப்புடையது புதிய புலவர் படிப்புச் சரக்கே. பண்டிதர் சந்தையில் வேண்டுவாரற்ற விலையிலாப் பொருள் - அறிவுதரும் கல்வி ஒன்றே. அறிவிலா மரபு பேசி, முறையிலா வரிசைதேடுவதே பண்டிதர் படிப்புப் பயக்கும் ஆக்கமும் அவர் நயக்கும் நோக்கமும் ஆகும். படிப்பதன் பொருளும், அது பயன்படு துறையின் அறமும், பண்டிதர் உளத்தைக் கவரா. சொற்பொருள் முரண் எனக் கற்கும் மாணவர்கண்டு வெறுக்கும் வழுக்களை வரன்முறை வழக்கென வம்பப் பண்டிதர் வாழ்த்திப் போற்றுவர். கற்றறிவுடையவர் குற்றம் கடிவர்.

"தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்"[33] (குறள் 433)

என்பது தமிழ் மறை. கல்வியால் வரும் "அறிவு

33. தினைத்துணை-தினையளவு; பழிநாணுவார்-பழிக்கு அஞ்சுபவர்.

அற்றம் காக்கும் கருவி" (குறள் 421). இவ்வுண்மையை வலியுறுத்தவே வள்ளுவர் தம் அறநூலில் முறையே கல்வி-கல்லாமை (யின் பொல்லாங்கு), கேள்வி, அறிவுடைமை என்னும் இயல்களை வகுத்து உடன் அடுத்து, அவற்றின் பின் "குற்றம் கடிதல்" என்னும் பொருளை இயலடைவில் தொடுத்த பெற்றியும் உய்த்துணர்ந்து பாராட்டற் பாலதாம். கல்லாப் படிப்புதவும் பொல்லாப் பேதைமை, ஏதம்கொண்டு ஊதியம் போகவிடும், கல்வி எல்லாமுதவும், அறிவைத் தரும். கல்லாப் படிப்பால் வருவது அறிவிலா ஒட்பம், அதாவது ஒருவரை "என்னுடையரேனும் இலர்" ஆக்கும் பேதைமதி. அறிவு உதவாத படிப்பு–"தான்தேராப் பேதைமை" மாட்சி தருவதோடமையாமல், அறிவும்-அறிவிலா ஒட்பமும், முறையே கல்வி-கல்லாப் படிப்புக் காரணமாக வளரும். கற்றறிவார்–"குற்றமே காப்பர் பொருளாக'. படித்தறிவில்லார் தம் குற்றம் காண்கிலார். "குற்றமே காணேணுவிழிகண் குருடர் புல்லறிவாளர்" ஆய்ந்து பொருள் காண்பது அறிவு. தோய்ந்தறியாப் படிப்பால் தடிப்பது புல்லறிவு. மடத்தை அடர்ப்பது அறிவு, அறிவை வளர்ப்பது கல்வி; அறிவை மறைப்பது பேதைமை; அதை அறமடிப்பது புல்லறிவு; அம்மாசூர வைப்பது செருக்கைப் பெருக்கும் படிப்பு. மலட்டுப் படிப்பைக் கல்வி என மயங்கிய பிற்காலப் புலவர் ஒருவர் "கல்லாத பேர்களே நல்லவர்கள், நல்லவர்கள்; கற்றுமறிவில்லாத என்" எனப் புலம்பக் கேட்போம். "படியாத பேர்களே நல்லவர்கள்; படித்து மறிவில்லாத என்" என்று அதை மாற்றிப் படிப்பதே பொருட் பொருத்தம் தரும். அல்லாக்கால், "கற்றனைத்தூறும் அறிவு"—என்ற பொய்யாமொழியைப் பொய் மொழியாகக்கொள்ள நேரும். இத்தகைய அறிவை வறட்டும் வெறும் படிப்பால் புதிய தமிழ்ப் புலமையும்

அதைமதிக்கும் தமிழரும் முன்னேறுதற்கு மாறாக எல்லாத் துறைகளிலும் நாள் தோறும் வாழ்விழந்து, அறிவு குன்றி, 'தாழ்வுற்று வறுமை மிஞ்சி' தயங்கி மயங்கும் பரிபவ நிலை பார்ப்பார் தாழும் பரிந்து வருந்தற் குரியது. சமயம், சமுதாய நிலை, இறைமாட்சி, உரிமை, பொருளாட்சி, கலை, தொழில் முதலிய துறைதோறும் தமிழர் தம் பழம் பெருமை இழந்து தாழ்வார்க்கும் ஆழ்வாராய் தொழும்பில் தருக்கி அழுந்துவதை எண்ணி இகழும் பகைவரும் இரங்குவர். நிறை அறிவின்றி, துறைதோறும் மூழ்கும் புலவர் துயர்க் கடல் எய்க்காது; அவரை ஏற்றும் அலைத்திரள் எண்ணத் தொலையா, ஏட்டிலுமடங்கா.

> "அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை
> செறுவார்க்கும் செய்த லரிது"[34] (குறள் 843)

அறிவை அவமதிக்கும் புதிய புலவரால் நேரும் தமிழ் மக்களின் தாழ்வுக்குத் தங்கு தடையில்லை. அவற்றை நாம் இங்குக் காட்டி அளக்க வேண்டாம். எட்டு நூற்றாண்டுகளாய்ப் பண்டிதர் திளைக்கும் தெளியாப் படிப்பின், கலுழியை, அவர் களிக்கும் புலமைத்துறையில் படரும் பாசியை இடறி மீண்டது தொடருமுன் பார்ப்பின், அதன் வேகமும் சுழியும் நமக்கு அச்சமும் வெறுப்பும் விளையாமல் போகா. தாமரை, குளத்தில் தன்னொடு நீர்நிலை அளக்கும், பாமரர் அறிவையும் நாட்டில் பண்டிதர் நாட்டுவர். ஆதலால், இனி நம் சோதனைக் குதவியாய், பண்டிதர் நூல்களைப் படித்து, அவற்றின் பயனை வடித்து எடுத்துக் கொடுத்து மகிழும் பொருட் பொலிவையும், கொண்டதை விடாமல் போற்றும் அவர் வித்தகப் பத்தியையும் அளவு கோலாக்குவோம்.

34. பீழிக்கும் பீழை-வருத்தும் வருத்தம்; செறுவார்-பகைவர்.

தொகை நூற் புலவருக்குப் பிறகு, கல்வியால் அறிவும், அறிவினால் சிறப்பும் கைவரப்பெற்று, புலவர் தலைவராய்ப் புகழொடு திகழ்ந்த பாவலர் கம்பரும் சேக்கிழாரும் ஆவர். உவர்க்கடல் முழுதும் சுவறக் குடித்த குறுமுனி கதை வெறுங் கற்பனை. பரந்த நூற் பரவையைப் பருகி முடிவேந்தர் தம் அடிதொழப் புலவரை அடக்கி ஆண்ட கூத்தரும் கந்தபுராணக் கடலை உமிழ்ந்த கச்சியப்பரும் முடிவிலாப் படிப்பின் முடிமிளிர் மணிகளாம் நாவலர் தலைவர்.

அவ்வாறே உரைகாரருள் பரிமேலழகரும் அடியார்க்கு நல்லாரும் கற்றுத்துறைபோகிய நற்றமிழ்ப் புலவர்; நச்சினார்க்கினியரும் பேராசிரியரும் ''படியை அடியால் அளந்த'' கடவுள்போல, பண்டை நூல்களைப் படித்து முடித்தவர். இளம்பூரணர், இவ்இருதிறப் புலவரின் இடை நடந்துலவுவர். கல்வியும் படிப்பும் கலந்த கூட்டவியல் அவர் உரை. அதை உற்றுநோக்கின் கற்றதில் தெளிவும், கல்லாது படித்த மற்றதில் மயக்கமும் அறிந்தறியாமல் செறிந்து தோன்றும்.

நச்சினார்க்கினியரின் எச்சில் இழையாத பழந்தமிழ்ச் செய்யுள் எதனையும் பார்ப்பதரிது. அவருரை எதையும் அச்சமும் ஐயமும் அணுகத் துணியா. தெளியா இடத்தும் துணிபு அவர் இயல்பு. ஒருவரும் கருதாப் புதுமை புகல்வதவர் காதல். தாமெழுதும் ''அருத்தத்தை'' மூல பாடத்தோடு பொருத்திக் காட்டும் பொறுப்பை வெறுப்பார். சொற்களின் பொருளையும் அவற்றின் முடிபையும் அற்பமாகக் கருதுபவர். சொற்கள் சுட்டும் பொருளைக் கொள்வது புன்மை என்றிகழ்ந்து, தங்கோள் நிறுவச் சொற்களை வருத்துவர், அன்றேல் திருத்துவர். அவர் படி

யாத நூலும் அவற்றில் அவர் ஓடியாத சொற்களும் காணல் அரிது 'அச்சமே கீழ்களது ஆசாரம்' ஆதலால் நெஞ்சால் எதையும் அஞ்சாது துணிவையே நச்சுவர்.

இவை ஓரளவு உரையாசிரியரின் சில சிறப்பியல்புகள். இனி, அவர் அனைவர்க்கும் பொதுவான இரண்டொரு பெருங் குறைகளையும் குறிப்பது முறை. உரைகாரர் அவர் காலத்தவர்நாட்டு வரலாறுகூட நன்கறிய முயலாதவர்; இடத்தாலும் காலத்தாலும் வேறுபட்ட மாந்தரின் எண்ணம் இயல்வேறுபாடுகளை எண்ணவும் ஒண்ணாதவர். தம் நாட்டில் தம் காலத்தில் தம்மவர் அளவில் தாமறிந்த ஒழுக்க வழக்கங்களே உலகில் மக்கள் தோன்றிய கால முதல் என்றும் எங்கும் எல்லாராலும் கையாளப்பட்டு வருவதாகக் கருதியவர். அதனால் என்றும் ஒன்றுபோல் எல்லவர்க்கும் வல்லது சொல்லுதல் ஒல்லும் என்பது அப்புதிய புலவரின் பொது முடிபு.

அதுபோலவே ஏட்டில் எழுதிய பாட்டுரை எதையும் வழுவென நினைப்பது பிழை எனப் பழித்து, குற்றமாயினும் முற்றும் போற்றுதல் படித்த பண்டிதர் பிடித்த கொள்கை பொருள் விளங்காமை புரையாகாது. ஆனால் தேரும் தெளிவிலா மருளை அறிவுடையார் யாரும் பொருள் என மதியார். பொருத்தம் காணுமிடத்துக் கருத்து வேறுபடுவது புலவர் இயல்பு. எனில் சற்றும் ஐயமின்றித் தெற்றென மூலபாடத்தோடு முற்றும் முரணும் உரையை அரும்பொருள் என்று நயக்கும் புதிய பண்டிதர் மயக்கம் வியக்க வேண்டுவதொன்றே. அவர்பால் படிக்கும் மாணவர் நிலையும் இரங்கற்பாலதே.

பண்டிதரின் பொதுவும் சிறப்புமாக மேலே குறித்த இருவகைக் குறைகளாலும், தொகை

நூற்களுக்குப் பிறகு செறிமடம் நிறைந்து விடியா நெடிய இடை இரவின் இருளாலும், கல்லாமற் படிக்கும் பண்டிதர் புலமை மருளாலும் பழைய கற்ற புலவர் பாக்களின் பொருள் தெரியா மயக்கம் உரை எழுதிய புதிய புலவர் மதியை மறைத்தது. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன், இரண்டாம் ஊழியில், வான்மீகர் புகழும் பழைய பாண்டியர் "கபாடம்" அழியு முன்னமே எழுதப்பெற்ற தொல் காப்பியர் தனித்தமிழ் நூற்பாக்களை வரலாற்று முறையில் பண்டை நூன்மரபோடு முரணுமல் நடுநிலையில் துருவி ஆராயின், அவற்றின் தெளிபொருள் எளிதில் விளங்கும். அதைவிட்டுக் கடல்கோளுக்கும் அதன்பின் சில நூற்றாண்டு கட்கும் பிந்தி வந்தேறி, தமிழரொடு கலவாமல் உலவைச் சேரிகளில் திரிந்த புதிய நெர்துமலர் வட நூற் கருத்துக்களை வாங்கிக் குழைத்து நுழைத்து இழைத்த பண்டிதர் உரைக்குழம்பில், பண்டைத் தனித் தமிழ் நூற்பொருட் தெளிவைத் தேட முயல்வது இயலுமா? பயன் தருமா?

தொல்காப்பியர் நூலைக் கல்லாது படித்தவர் ஒல்லா உரைகளில், புலவரும் அலமரும் புரைகள் பலவற்றை நான் வெளியிட்ட பொருட் படல மூன்று இயல் உரையில் இடைஇடை குறித்துத் தடைவிடை நிறுத்துக்காட்டியுள்ளேன். ஆயினும் அந்த உரைகளே இன்னும் நூலினும் அதிகமாய் ஆட்சிபெறுகின்றன. மாணவர் மலைவை வளர்ப்பதே பொருளாய்க்கொண்ட பண்டிதர் குழுவே நாட்டில் பல்கலைப் பள்ளிகள் எல்லாவற்றிலும் தமிழ் மொழிப் புலமையை ஆளுகின்றது. அதனுல் அத்தகைப் "புலவர் உச்சிமேற்கொள்ளும் நச்சினர்க்கினியரின்" தெருளா மருளுரை நூலினும் சிறப்பொடு வற்புறுத்தப்படுகிறது. வருந்தினும் பொருந்தா மருளுரையாலே

திருந்திய நூலையும் அறிஞர் அவமதிக்குமாறு பிடித்ததை விடாத படித்த உரைகாரர் பெரும் பிழைகளுள்ளே, யாருமே மறுக்க முடியாமல் வெறுக்கும் இரண்டை மாதிரிக்கெடுத்துக்காட்டுகிறேன்.

(1) முதலில் தொல்காப்பியர் நூலில் செய்யுளியலில், "வாழ்த்தியல் வகையே நாற்பாற்கும் உரித்தே"–எனும் சூத்திர உரையை ஆராய்வோம். பட்டாங்கே சொற்களின் செம்பொருளைச் சிந்திப்பார்க்கு இடத்திற்கும் முடிபுக்கும் இயையச் சூத்திரக் கருத்து எளிதில் தெளிவாகும். "வாழ்த்தியல் வகை என்பது, அதன் பகுதிகளாக வகுத்து விளக்கப்படும் நான்கிற்கும் உரியதாகும்" என்பதே இந்நூற்பாவின் நேரிய பொருள். எந்தச் செய்யுளுக்கும் "வாழ்த்தியல்" வேண்டும். அது நான்கு வகை அல்லது பகுதியாகவரும். இதில் யாதாம் ஒன்றே வாழ்த்தியலாகப் போதுமானது. நான்கும் வேண்டும் என்றுவது, இன்னது இன்றியமையாததென்றுவது நியதியில்லை. அடுத்து விளக்கப்படும் நான்கும் வாழ்த்தியலின் வகைகளேயாதலின், அவற்றுள் ஒவ்வொன்றும் "வாழ்த்தியல்" ஆதற்கு உரிமையுடையதாம், என்பதை இந்த முதற் பொதுச் சூத்திரம் தெளிக்கிறது. அதை அடுத்து ஆசிரியர் "வாழ்த்தியல்" வகை நான்கையும் தனித்தனியே விளக்குகிறார். இதை அறியாமல் உரைகாரர் இதற்குப் பொருந்தாப் புத்துரை கூறுகிறார். அதன் அதிசயப் புதுமையைக் கிளறிப் பார்ப்போம்.

இதில் "நாற்பாற்கும்" என்பதே மூலபாடம். எல்லாப் பழைய ஏடுகளிலும், முந்திய அச்சுப் புத்தகம் அனைத்திலும் வழங்கிய பாடம் அதுவே. அண்மையில் ஒரு பதிப்பில் "நாற்பாக்கும்" என்று அது மாற்றப்பட்டுளது. இம்

மாற்றம் ''பாஷாகவி சேகரர்'' – மகாவித்துவான் ரா. இராகவய்யங்கார் அவர்களின் செய்யுளியல் திருத் தத்தைப் பின்பற்றியது. ''பாற்கும்'' என்பதைப் ''பாக் கும்'' என மாற்றியது பழைய நூல்களின் பெருமையை அறியாமல் மதிப்பார் பதிப்பாளராக முற்படுவதன் தீமையை வற்புறுத்தும். திருத்தக் கருத்தின் பொருத்த மின்மையும் பழைய பாடத்தின் விழுமிய பொருளியையும் கூர்மையினும் நேர்மையுடையார்க்கு எளிதில் விளங்கும்.

பழைய உரைகாரர் இருவரும் ''நாற்பாற்கும் உரித்தே'' எனும் பழைய பாடத்தை உடன்பட்டே பொருந்தாப் புரை உரை தருகின்றனர். இளம்பூரணர் இதற்கு ''வாழ்த்தியலின் வகை நான்குபாவிற்கும் உரித்து'' என உரை கூறுவர். பெரும்பாலும் அவர் உரை யைக் கொள்ளாமல் வேறு கூறும் வழக்குடைய நச்சினார்க் கினியரும் இதற்கு வாளா 'வாழ்த்துதல் பகுதி நான்கு பாவிற்கும் உரித்து'' என்றே பொருள் தருகின்றார். உரை காரர் இருவரும் மாறுபடாமல் ஒரு பொருளே கூறியதால் போலும், இயைபும் முடிவும் கருதாமல் பண்டிதர் அனை வரும் அவர் கொண்ட பொருளைக் கொண்டாடக் காணு கிறோம். இந்த உரை கண்டவர் இருவரும் படிப்பின் கரை கண்ட பண்டிதர். அவரேனும், அவர் உரையை ஏற்றுப் போற்றும் புலவர் யாரேனும் இவ்வுரையொடு மூலத்தி லுள்ள ''பாற்கு'' எனும் சொல் இயையாமல் முரணுவ தைக் கருதவில்லை. ''பாற்கு'' என்பதில் ''பால்'' பகுதி யைக் குறிக்கும்; பாட்டுக்கு அது பெயராகாது. மகா வித்துவான் ராகவையங்கார் அவர்கள் மட்டும் பொருத்த மின்மை கண்டார்கள்; உடனே, உரைக்கேற்பச் சூத்தி ரத்தையே திருத்தினார்கள். அவர்களும் மதித்த உரையா சிரியர் இருவரும் ''பாற்கு'' என்ற பாடத்தை மாற்றாமல்,

அதற்குரிய "பகுதி"என்றும், "வகை"என்றும் பொருளுங் கூறியதால், பாடத்தில் ஐயத்திற் கிடமின்மை தேற்றம். எனினும், "வாழ்த்தியல் பகுதி நான்கு பாவிற்கும் உரித்து" என்ற உரையைப் பேணுதற்காக, "பாற்கும்"-என்ற அடிபட்ட மூலபாடத்தை "பாக்கும்" என மாற்றத் துணிந்தனர்.

"வாழ்த்தியல் வகை நான்கு பாவிற்கும் உரித்து" என்ற கருத்துச் சரியாமேல் பழைய பாடம் பொருந் தாமை ஒருதலே. எனினும், நேர்மையை விரும்புவோர் யாவரும் நெடுவழக்குடைய சுவடிப் பாடத்தை அறவே மறைக்கவோ மாற்றவோ துணியமாட்டார். அதையும் குறித்து, நேரான புதிய பாடத்தையும் சுட்டுவதே முறை. அம்முறையின் பீடும், பழைய பாடங்களைக் குறி யாமல் மறையவிட்டுத் தத்தமக்குத் தோற்றியபடி சொற் களை மாற்றுவதன் பிழையும் இங்குக் காண்போம்

அடிப்பட்டு வழங்கும் மூல பாடமும் புதிதாய்ப் புகுந்த உரையும் பொருந்தாத இடங்களில், உரையைத் தள்ளி மூலச் சொற்கேற்ற பொருளைக்கொள்ளுவதே அறிவறமும் புலமைக் கடனுமாகும். முரணாத பொருள் எதுவும் உதவாமல், பழைய பாடத்தை வழுவெனத் துணிவதன்றி வேறுவழிகாணாத இடங்களிலும்கூட, பொருள் பிறழாமல் எழுத்து வழுக்களைத் திருத்துவதல் லால் சொற்களை மாற்றத் துணிவது தவறு. பழைய பாடத்தைக் குறித்து, அது பொருந்தாமையைக்காரணம் காட்டி விளக்கி, பொருத்தம் எனத் தோற்றும் நேரிய பாடத்தையும் சுட்டுவதே முறை. நிற்க

இதுவரை வழங்கியது தொல்காப்பியர் காலம் தொட்டுப் புலவர் யாரும் பிழைஎன உணராதாண்ட

பழைய பாடம். அதில் எழுத்துப் பிழை எதுவும் இல்லை; பொருள் தராத சொல்லும் இல்லை 'பால்', என்பது பகுதி எனும் பொருள் உடையது. அதை உரைகாரரும் உடன் பட்டே கையாண்டுள்ளார். அப்பாடத்திற்கு அமைந்த பொருள் காணுவதே புலமை அறம். அக்கடனைத் துறந்து, ''பாற்கு'' என்பதற்குரிய ''பகுதி'' — அல்லது ''வகை''எனும் செம்பொருளை மறந்து, அதை ''பாக்கு'' எனத் துணிந்து மாற்றியது அறிவறமும் நேர்மையும் ஆகாத குறை. நூலாசிரியர் கருத்தை அவர் சொற் கொண்டு துணிவதன்றோ முறை?

வாழ்த்தியல் வகை நான்கென்பது இதை அடுத்து வரும் சூத்திரங்களால் தேற்றமாகும். அதை மறந்தோ துறந்தோ சூத்திரம் சுட்டாத நான்கு பாவகைகளை இழுத்துப் புகுத்தியதால் இடர்ப்பட நேர்ந்தது. இடர் உணராமல் படித்த பண்டிதர் எழுதிய வழுஉரை வழுக்க யாவரும் இழுக்கினர்.

இதற்கடுத்த சூத்திரங்களில், தொல்காப்பியர் வாழ்த் தியல் வகை நான்கினுக்கும் பாவகை நான்கில் இரண்டு வரப்பெறா என்று வரையறுத்து வற்புறுத்துகிறார். அதற்கு நேர்மாறாக இதில் பாவகை நான்கும் வாழ்த்தி யல் வகை நான்குக்கும் உரியது என உரைக்கும் துணிவை வியப்பதா? வெறுப்பதா? வாழ்த்தியல் வகை 1. ''புறநிலை வாழ்த்து'', 2. ''வாயுறைவாழ்த்து'' 3. ''அவையடக்கி யல்'', 4. ''செவியறிவுறூஉ'' என்று நான்கே என்பது, இதை அடுத்து முறையே ''வழிபடுதெய்வம்''—''வாயுறை வாழ்த்தே'' எனத்துடங்கும் இரு நூற்பாக்களாலும் தெற்றெனவிளங்கும். இவற்றிற்கு, ''கலிநிலைவகையும், வஞ்சியும் வாரா'' என்றும், அகவலும் வெண்பாவுமே

வரற்குரிய என்றும் தொல்காப்பியர் நூலில் வரையறுத்ததையே உரைகாரரும் உடன்பட்டு வழிமொழியக் காணுகிறோம். "புறநிலை வாழ்த்தே ....கலிநிலை வகையும் வஞ்சியும் பெறா" என்று புறநிலை வாழ்த்தியல் சூத்திரம் (செய்-சூ. 110) வலியுறுத்துகிறது. அதை அடுத்து, "வாயுறை வாழ்த்தே அவையடக்கியலே -செவியறிவுறாஉ -என அவையும் அன்ன" எனும் (111ம்) சூத்திரம், மற்ற வாழ்த்தியல் வகை மூன்றுமே வஞ்சியிலும் கலிவகையிலும் வழங்கப்பெறாமையைத் தெளிக்கின்றது. செய்யுளியல் 161வது சூத்திரம் மீண்டும், "திறனிது மூன்றும்......வெண்பா இயலினும் ஆசிரிய இயலினும் பண்புறமுடியும் பாவின என்ப" என்று வலியுறுத்துகிறது.

இனி உரைகாரரும் அக்கருத்தையே உடன்பட்டுரைக்கின்றனர். இளம்பூரணர், "வழிபடுதெய்வம்" எனத் துடங்கும் (110-ம்) சூத்திரத்தின் கீழ்த் தம் உரையில், "புறநிலை வாழ்த்து, கலிப்பா வகையினும், வஞ்சிப்பா வகையினும் வரப்பெறாது" என்றும், அடுத்த (111-ம்) சூத்திர உரையில் "வாயுறை வாழ்த்தும் அவையடக்கியலும் செவியறிவுறுத்தற் பொருளும் கலியினும் வஞ்சியினும் வரப்பெறா" என்றும் தெள்ளத்தெளிய உரை எழுதி உள்ளார்.

அது போலவே, நச்சினார்க்கினியரும், "வாழ்த்தியற் செய்யுள் கலிப்பா உறுப்பாகியும் வஞ்சிப்பாவினும் வரப்பெறாது" என்று புறநிலை வாழ்த்தியல் (110-ம்) சூத்திர உரையிலும், அடுத்த (111-ம்) சூத்திர உரையில் "வாயுறை வாழ்த்தும் அவையடக்கியலும் செவியறிவுறாஉவும் என மூன்றும், மேலைப்புறனிலை வாழ்த்துப் போல், வாழ்த்துப் பகுதிய ஆகலும் கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாமையும் உடைய" என்றும் கூறுகிறார். இங்குத் தாம் கூறும்

இப்பொருளைச் சிறிதும் கருதாமலும், இதற்கு முற்றிலும் மாறாகவும், இவரே மேல் "வாழ்த்தியல் வகையே-நாற் பாற்கும் உரித்தே" எனும் சூத்திரத்திற்கு, "வாழ்த்தியல் வகை நான்கும், வஞ்சியும் கலியும் உள்பட பாவகை நான் கினும் வழங்கும்' எனப் பொருந்தாப் பொருள் கூறி வாளா அமைந்தது அறிவை மறைக்கும் மறதியாலா? புத் துரை கூறித் தாம் தம் மகிழ்ச்சியின் மைந்துறும்" பெரு மிதத்தாலா? துணிதல் எளிதன்று. சொற்பொருள் அழிக் கும் வழியில் அறிவைப் பழிக்கும் இப்பிழையை மறுக்க வும் வெறுக்கவும் மாட்டாத, கல்லாமல் படித்த புலவரால் தமிழ்நிலை எய்தும் தாழ்வுக்கு ஓர் எல்லையில்லை. அழலும் நுதற்கண் திறப்பினும் அஞ்சாமல் இறையனார் குற் றத்தை இகழ்ந்த புலவனைப் புகழ்ந்த நாட்டில், பாமரரும் கேட்டவுடன் பழிக்கும் பிழைகளை நயக்கும் பண்டிதர் பள்ளியில் பயிற்றும் மாணவர் பரிபவ நிலைக்குப் பரிவு காட்டுவோம்.

படித்த பண்டிதர் அறிவை அவமதித்துப் புரை உரைக்கயத்தில் நீந்தாமல் நிலையாமல் ஆழ்ந்தழுந்த நேர்ந்த காரணம் ஓர்ந்துய்த்துணரலாம். இயற்றும் நூல் எதற்கும் வாழ்த்தியல் கூறும் பழந் தமிழ் மரபு வள்ளுவர் முதல் இளங்கோ ஈருகப் பண்டைப் புலவர் கொண்டு கையாண் டனர். அதன் பிறகு கல்லாமல் படித்த பண்டிகர் உலகில் அத்தமிழ் வழக்கொழிந்து, ஆரியர் புகுத்திய பாயிரம் பதி கம் ஆயிரம் புதுவகை பரவலாயிற்று. வரன்முறை வந்த வரம்புகள் அழிந்தன. எதையும் எந்தப் பாவிலும் புதிய துறை-தாழிசை-விருத்தம் என்ற பாவின வகைகளில் புலவர் ஆக்கினர். தாமறிந்த தங்கால வழக்கே தொன்று தொட்டென்றும் நின்று நிலவுவதாகப் படித்தவர் நினைத் தார். பாயிரமே வாழ்த்தியல் எனத் துணிந்து, அதன்

வகை அனைத்தும் எல்லாப் பாவகையிலும் வழங்கும் என எண்ணினர். ஆதலால், எல்லாப் பாக்களும் வாழ்த்தியல் வகைகளுக்குரிய என்றுரையும் எழுதினர்.

"பா" எனும் சொல், "உ"கரச்சாரியை-வகர உடன் படுமெய்-இரண்டும் பெற்றன்றி உருபேற்றல் வழக்கில்லை என்பதையும் மறந்து, 'பாற்கு" என்பதை "பாக்கு" என வாளாகொண்டனர். நா-மா-பா-என்ற ஓரெழுத் தொரு சொல் எல்லாம், நாவை மாவை-பாவை எனவும், நாவால்-மாவால்-பாவால் எனவும், நாவுக்கு-மாவுக்கு-பாவுக்கு எனவுமே வழங்குவதல்லால், முதனிலை தனியே உருபேலாது. அறிவற்ற புதிய படிப்பின் உழக்கால், கற்றுத் தேரற்குரிய குருணியும் பதக்கும் கொள்ளாத் தொல்காப்பியரின் பழைய நூற்பாப்பொருளைப் படித்த உரைகாரர் அளக்கத் துணிந்தார். "நாழிமுகவாது, நாழுழி" என்ற முதுமொழி உண்மையையும் மறந்தார். பழைய எட்டுப்படி மரக்கால் அளவை புதிய பட்டினம்படி ஐந்தால் முகந்தால் கணக்கு அறுபடாது. எட்டில் ஐந்துபோக மீதம் மூன்று. மூன்று பேருக்கொன்று முடியாத கணக்கு. அதைத் தீர்வார் நச்சினார்க்கினியர் உரையையும் தேர்வார். அறிவை அலமரச் செய்யும் இத்தகைய அதிசய வழுக்களை அவர் உரையில் எண்ண இயலாது.

(ii) இனி பண்டிதர் நயக்கும் வியத்தகு வழுக்களில் இரண்டாவது பிசி (பிதிர்) இன்னும் ஒன்றாய்வோம். முன்னதிலும் இது முழுவழுவாவது. மயக்கால், புலவரை வியக்கச் செய்வது. முன்னே சொன்னது, மூலத்தில் இல்லாத அரிய உரை வழு. இனி நாம் காண்பது மூலமும் உரையும் முற்றிலும் அறிவை அலைக்கும் பிசிவகை. இது, இறையனார் களவியலில் வரும் ஒரு சூத்திரம்.

"இரவு மனையிகந்த குறியிடத் தல்லது
கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை"[35]

(இறையனார் களவியல் சூத்-21)

இதற்குப் பட்டாங்கே பேரில்லாப் பழைய உரைகாரர் கூறும் பொருள் வருமாறு:- "இரவின்கண் மனையகத்து நீங்கிய குறிக்கப்பட்ட இடத்தல்லது தலைமகனைக் கூடுதல் தலைமகட்கில்லை." இத் தெளிவுரையோடு இச் சூத்திரத்தை வழிமுறையாகப் பண்டிதர் இன்றும் இளைஞருக்குப் பாடம் சொல்லி வருகின்றனர்.

இதில் சூத்திரச் சொல்லுக்கும் அதன் உரைக்கும் மாறுபாடில்லை. ஆயினும் இது அகப்பொருள் நூலின் அடிப்பட்ட மரபுக்கும் அறிவுக்கும் வழக்குக்கும் முற்றிலும் மாறாக முரணுகிறது. மானம்பேணும் குடியில் வளர்ந்த மணவாத பெண்கள் எவளும் கற்பறக் களவில் காதலனைக்கூட இரவில் கூசாமல் தன் மனைவரைப்பைக் கடந்து புறம் பெயர்ந்து போகத்துணியாள். அறக்காதலோடு அவள் நலம் விரும்பும் ஆண்மகன் எவனும் இரவில் "இல்" இறக்க, தன் தலைவியைத் தூண்டான். இறையனார் களவியலுக்கு முதல் நூலான தொல்காப்பியர் களவியலும் இரவில் தலைவி தன் "இல் இகவா" மரபைத் தெளிவாய் வற்புறுத்துகிறது.

"இரவுக் குறியே இல்லகத் துள்ளும்
மனையோர் கிளவி கேட்கும்வழி யதுவே
மனையகம் புகாஅக் காலை யான"[36]

(தொல்-பொருள்-களவியல்: 40)

35. இகந்த-நீங்கிய; குறியிடம்-குறிக்கப்பட்ட இடம்; கிழவோன்-தலைவன்; கிழத்தி-தலைவி.

36. கேட்கும் வழியது-கேட்கும் இடத்தது; மனையகம்புகாஅக்காலையான-மனைக்குள் ஓரிடத்தே புகுந்து கூட்டம் நிகழ்த்தாத முதற்காலத்தில்.

இரவில், தலைவன் தலைவியின் மனையில் கரவில் அகம் புகக் கருதுவதியல்பு. கூடாதாயின், அகத்தவர் பேசும் அரவம் கேட்கும் வரைப்பினுள் கூடுவன். படைப்பையின் வரம்பைக் கடப்பது வழக்கேயில்லை. இது தொல்காப்பியர் நூற்பாவால் தேற்றமாகிறது. அதற்கு நேர் மாறாக இறையனார் நூலில் இழுக்காம் வழக்கை இயம்பல் வியப்பன்றோ? அதற்கு மேல் இறையனார் நூலில் இதற்கு முன் நிற்கும் சூத்திரத்தோடிது முழுதும் முரணக்கண்டும் பண்டிதர் இதனைக்கொண்டு கையாள்வது இறும்பூதாகும். "இரவுக்குறியே "இல்" வரை இகவாது," என்பது இதற்கு முந்திய (19ம்) சூத்திரம். அதன்கீழ் இவ்வுரை காரரே, "இரவின்கண் குறியிடம் "இல்" இடத்தை விட்டு நீங்காது" என்று பொருளும், "இரவுக்குறி வீட்டின் புறத்தன்று" என விளக்கமும் எழுதி உள்ளார். முழுதும் தம்முள் முரண்படும் இவ்விரு சூத்திரங்களையும் இயற்றியவர் ஒரே புலவர்; அவரும் குறையிலா இறைவர். அவ்விரண்டுக்கும் ஒன்றோடொன்று மலைந்து மாறுபடும் பொருள் எழுதியவரும் ஒரே பண்டிதர் என்று கூறப்படுகிறது.

முழுதும் தம்முள்முரணும் கூற்றிரண்டை இருவேறு புலவர் கூறினால், அஃதவருள் கருத்து வேறுபாடென்று கருதலாம். ஒருவரே கூறின், இரண்டும் பிழையாகலாம்; அன்றேல் ஒன்றேனும் வழுவாதல் இன்றியமையாது. இரண்டும் சரி எனல் இயலாது. இங்கு முற்றிலும் முரணும் இவ்விரு கூற்றையும் இயையப் பொருத்த இறையனாராலும் இயலாது. இவை இரண்டையும் இயற்றியவர், "இறையனார்" என்னும் இயற்பெயருடைய ஒரு புலவராயிருந்தால், உரைகாரரே இரண்டில் ஒன்றைக்கொள்ளாமல் வழுவெனத் தள்ளியிருப்பார். உரை இலாதிருந்தால்,

ஒருகால் எழுதுவோர் பிழை என எண்ணவும் கூடும். களவியல் இயற்றியவர் மனிதப் புலவர் அல்லர், கண்ணு தற் கடவுளே என்று கதை வழங்குவதால், பின் சூத்திரம் அறிவொடு பொருந்தா வழுவே ஆயினும், கடவுட் புலவர் தம் நெற்றிக்கண்ணின் நெருப்புக் கஞ்சிக் குற்றம் கூறத் துணியாமல் உரைகார்ரர், இயைபாக் கூற்றிரண்டையும் அயலே நிறுத்தி, மயலை வளர்க்கும் உரையும் வகுத்தார். இறையனுருக்குப் பித்தர் என்ளெருரு பெயருண்டு. பித்தர் பிழையைப் பேசுதல் பாபம்; பேசாதுடன்பட்டு மெச்சு தல் புண்ணியம். ஆதலால் தம் புரை உரை, தரை உறைவை விலக்கி வட கயிலைமலையேற வழிகாட்டும் என நினைத்து நெஞ்சறிந்தபொய் உரையை வரைய மனம் துணிந்தார் போலும்.

சூத்திரப் பாடமும் புரை உரையும் எக்கேடும் கெடட் டும். அவ்வழுவை மறுக்காமல் மாற்ருமல் பண்டிதர் பழிபடுவானேன்? மறுக்காமைமட்டோ? படித்த பண்டி தர் இன்றும் அதைப் பாராட்டவும் பார்க்கிருேம். அது அறிவறமா? புல்லறிவா? சொல்லுவதென்? சொன்னுலும் கேட்பவர் யார்? பண்டிதரின் பழிமறைக்க உரைகாரர் புரை எதுவும் உதவமாட்டா. ஆயும் அறிவும் வாய்மை யில் துணிவுமில்லாப் பண்டிதரை மாணவர் வந்திக்கும் வேளையிலும் வாய்வாளா துள்ளத்தே நிந்திப்பதியல் பன்ருே?

உண்மையில் பின்னைய சூத்திரம் பிழை என்பது தேற்றம். பொருளறியாமல் ஏடு பெயர்த்தெழுதுவோர், "அநத்து" என்பதை, 'இகத்து' — 'இகந்து' என வழு வாய் எழுதியிருக்கலாம். படித்த பண்டிதர் இன்றுவரை திருத்தத் துணியாத பிழையைப் பொருளுணர வேண்

டாத எழுத்தாளர் ஆராய்ந்து அறிந்து திருத்தாதது வியப்பன்றே.

"இரவு மனையகத்த குறியிடத்தல்லது கிழவோற் சேர்தல் கிழத்திக்கில்லை." என்றிருந்த மூலபாடம், எழுத்தாளர் அறியாமையால் பிழைபட்டு "மனையிகந்த குறியிடத்தல்லது" என மாற்றியிருத்தல் வேண்டும். கல்லாது படித்த பண்டிதர் பிழையை அறியாமல் பேணியதால், அது திருத்தப்படாமல் நிலவுகிறது. பழைய பாடம் எதுவாயினும் ஆகுக. வழங்கும் பாடம் அறிவைப் பழிக்கும் என்பது வெளிப்படை.

பானைச்சோற்றைப் பதன் பார்க்கப் பருக்கை ஒன்றே போதும் என்பது பழமொழி. கல்லாப் படிப்பின் பொல்லாங்குணர அறிஞருக்கிங்கே படித்த புலவரின் மறுக்கொணா வழுக்கள் இரண்டை எடுத்துக் காட்டினேன். இன்னும் இப்படிப் புலமைக்கும் அறிவுக்கும் பழிதரும் பிழைகள் பலவற்றை நான் வெளியிட்ட பொருள் படல மூன்றியல்களின் உரையில் குறிப்பிட்டுள்ளேன். அரும்பழ நூல்களின் பெருமை அழித்து, கற்பவர் உரனைக் கலக்கி வற்றடித்து, தமிழில் வெறுப்பைத் தரும்படி புரை உரைகளைப் பாடமாக்கி, மாணவர் அவற்றையே படித்துருவேற்றித் தடித்த மனத்தில் தெளிவிலாப் புலவராய்த் திரியக்காண்குவம். கற்றறிவு பெற்றுக் குற்றம் உணராமல், படித்து மடம்பட இளைஞரைப் பண்டிதர் பயிற்றுகின்றனர்.

குறை அறியாதவர் திருந்த வழிகாணார். அயலவர் அறிவால் பயனுறக்கண்டும், அறிவை வளராதபடிப் பையே பண்டிதர் இன்றும் கொண்டாடுவர். "தீதொரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு". அறிவைத் தருவது கல்வி.

கல்லாமல் நூல்களை எல்லாம் படிப்பினும் உதவாச்சுமை யாய்ச் செருக்கைப் பெருக்கும்.

"உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களர்அனையர் கல்லா தவர்"[37]

(குறள் 406)

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்"[38]

(குறள் 410)

---

37. உளர்-வடிவத்துடன் இருக்கின்றனர்; என்னும்-என்று சொல்லப் படும்; மாத்திரையர்-அளவினராவர்; களர்-உவர் நிலம்.

38. விலங்கு-மிருகம்; இலங்கு-விளங்கும்.

# தாய்மொழியில் உயர்தரக் கல்வி

---

உயிர்களின் சிறப்பியல் உணர்தலும் அறிதலும். இன்பமும் துன்பமும் எல்லாச் சுவைகளும் உணர்வில் எழுவன. நினைப்பு, எண்ணம், சூழ்ச்சி, துணிவு, தூண்டுதல், விலக்குதல், போல்வன யாவும் அறிவின் பாலன. பொறிகளின் துணையால் உணர்ச்சி நிகழும். அறிவின் கருவியாய் உறுதுணையாவன புலன்கள் எனப்படும். பொறியால் உணர்வும், புலனால் அறிவும் முறையே விளைப்படும். அறிவும் உணர்வும் அகத்தில் வளர்வன. அவ்விரண்டல்லால் வாழ்வில் ஒன்றில்லை. ஆக்கமும் கேடும், இன்ப துன்பங்களும், நுகர்வதும் தவிர்வதும், இந்த அகத்திறம் இரண்டையும் பொறுத்தவை. அவற்றின் ஆக்கம் பெருக்கும் கருவி, கல்வி எனப்படும். தொழில் இல்லாதிருப்பது, அழிவினில் முடியும். வளர்தலும் தளர்தலும் தொழிலின் இருதிறம். தொழிற்படாதிருப்பது கடவுள் தன்மை; உயிரியல்பு அன்று. செயலறவு உயிர்களின் முடிவு. தளர்தல் சாவுக்கும், வளர்தல் வாழ்வுக்கும், வழிகாட்டும் அறிகுறிகள். புறத்தில் உடலுறுப்புக்களை வளர்க்க உணவு

துணையாவது போல், அக உறுப்பாம், உணர்வு அறிவுகளை வளர்க்கும் கருவி, கல்வி. எனவே, அறிவையும் உணர்வையும் வளரச் செய்வதே கல்வி. உணர்வின் கூறுகள் அகத்தில் சுவைகளும், புறத்தில் மெய்ப்பாடுகளும் ஆம். அவற்றின் கல்வியால் கலைகள், காவியம், ஓவியம், இயல், இசை வளரும். அறிவின் பகுதி பலதிறப்படலாம். பகுத்தறிவு, சிந்தனை, சீர்தூக்கல், சூழ்ச்சி, துணிவு, போலப் பல திறப்படும். அவற்றுள் ஒவ்வொன்றையும் வகுத்து, நிறுத்து, தொகுத்து, முறைப்படுத்த நூல்கள் துணையாகும். நூல்களை வடமொழியாளர் சாத்திரம் என்பர். அறிவும் உணர்வும் ஒவ்வோர் உயிரின் பண்பொடு வினையாம். ஆதலின், அவை ஒன்றனோடொன்று தொடர்பும் துணைமையும் உடையவையாகும். உணர்வொடு புணரா அறிவும், அறிவொடு செறியா உணர்வும் உயிர்க்கு இயல்பு இல்லை. அதனால், அறிவும் உணர்வும் அறவே வேறாய் வினைப்படமாட்டா. ஆகையால் கலையும், நூலும் தனித்தனி நிலை உயர இரண்டையும் வளர்ப்பது கல்வி. எனவே நல்ல அறிவு கல்வியால் வளரும். "மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு" என்பது பழைய தமிழ் மறை. கல்வியும் தாய்மொழியில் பயில்வதே தெளிவும் திட்பமும் எளிதில் உதவும். பிறிதொரு மொழியால் அறிவுபெற வேண்டின் தாய்மொழிப் பயிற்சி தானே குறையும். பிறமொழிக் கல்வியும் பெருகி வளராது. தாய்மொழி தன்னையே படிக்க இயலாதிருக்க, அயல்மொழிக் கல்வியைப் பயில முயல்வரோ? ஒரு மொழி கற்பதே அருமையாய் இருக்க, இரு மொழி பயில, பொருளும் முயற்சியும் போதிய காலமும் பெறுவதெப்படி? எந்த நாட்டிலும், எக்காலத்திலும், எல்லாரிடையுமே, அவரவர் தாய்மொழிக் கல்வியே, தலையாகக் காண்போம். இந்தியப் பெருநிலம் வந்த அயலாருக்கு அடிமைப் பட்டதால், ஆள்பவர் ஆங்கிலம், ஆதிக்கம்பெற்றது. தாய்

மொழிக் கல்வி ஆதரவின்றித் தளர நேர்ந்தது. அறிவு நூல் ஆக்கம் செறியப்பெருமல், குறுகி, நம் மொழிகள் வறுமையுற்றன. அடிப்படை, நடுத்தர முடிநிலைக் கல்விகள் எல்லாம், நாட்டு மொழியில், முன் நடந்து வளர்ந்தன. அரசியல் நோக்கமும், பொருள் தொழில் ஆக்கமும், ஆங்கிலப் பயிற்சியால் ஓங்கிய நிலையில், தாய்மொழி வளர்ச்சி ஓய்ந்து தேய்ந்தது. உயர்தரக் கல்வி தாய்மொழிகளில் இனி இயலுமோ என ஐயுறுவாரோடு, கூடாது என்று கூறுபவர்கூட நம்மவரிடையே நாளும் காண்கிருேம்.

ஓரிரு நூற்ருண்டுகளின் முன் பாரில் ஆங்கிலப் பயிற்சி மிகக் குறைவு. வடமொழி அன்றி, பிறமொழி எதுவும் எய்தப்பெருத, பழமையும் பெருமையும், மொழி நூல் முடிவும், இலக்கிய வளமும் உடையது தமிழ். காவியச் சுவையிலும், கவிமணிக் குவையிலும், தமிழின் நிலைமை, உலகில் சிறந்த மொழி எதனேடும் ஒக்கவும் உயரவும், உரிமை தந்தது. ஆயினும் புத்துயிர்பெற்ற புதுக்கலை வகையிலும், விஞ்ஞான நூல்களின் வித்தகத் துறையிலும் அரசியலார் தம் ஆங்கிலமொன்றிலே கல்வியை நமக்குத் தந்ததன் பயன், தமிழைப் போன்ற தாய் மொழியிலும் நாம் உயர்தரக் கல்வி பயில இயலாதது. இந்த இழிநிலை வந்த காரணம் இரண்டு. ஒன்று: நம் மொழியில் புதுக் கலைச் சொற்களைப் போதுமளவு இடம்பெற விடாதது. ஆங்கிலச் சொற்களை அப்படியே எடுத்தாளத் துணியின், அம்மொழியறிவே வளருவதன்றி, தாய்மொழி வளமும் வளர்ச்சியும் குன்றும். வேணவா உடைய மாணவர்க்கெல்லாம் அயல் மொழி பயிலும் துயர் ஒழியாது. இரண்டாம் குறை: நம் தாய் மொழிகளிலே அவ்வக் கலைக்குச் செவ்விய நூல்கள் செய்யப்பெருமை. கலைதொறும், பயில்பவர் நிலைகளுக்கேற்பப் பலதர நூல்களும் நிலவாமொழிகள், உயர்தரக்

கல்விக்கு உதவமாட்டா. அதனால் முதலில் நாட்டுமொழியில் இக்கேட்டை ஒழிக்கக் கலைச்சொல் வளத்தை நாம் பெருக்குதல் வேண்டும். அதனோடும் உடனே பல்வகைக் கலையிலும் நல்லறிவு உயர, தரம் தரமாகவும் இதம்பதமாகவும் நூல்களை இயற்றித் தாய்மொழி வளர்ச்சி ஓய்ந்தொழியாமல் பேணுதற்கான செயன்முறை வகுத்து, ஆம் வழி எல்லாம் முயலுதல் வேண்டும். மொழி வளமின்றி, விழுமிய நூல்களை எழுத இயலாது. நூல் வளமில்லா மொழிகளில் கல்வி, சால்பு உயராது. ஆதலால் இந்தக் குறைகளை நீக்கினாலன்றி நாட்டு மொழுகளில் உயர்தரக் கல்வியை ஊட்ட இயலாது.

இனி, முறையே நம் மொழிக்குறைகளை நீக்கிப் பொருத்தமான திருத்தமும் செய்து, எல்லாத்துறையிலும் நல்லறிவோங்க, உயர்தரக் கல்வியை விரைவில் பரப்புதற்குரிய வழிகளை, ஆராய்வோம்.

கலைச் சொல் ஆக்கம்; முன் அறியாத பொருள்களும் கருத்தும் எழுங்கால், பழைய நம் பமொழிகளில் அதுவதற்குரிய புதிய சொற்களைப் படைத்தல் வேண்டும். இதுவரை இல்லாப் புதுக்கருத்தும் கலைகளும் உலகில் நிலவுகின்றன. பூத பௌதிகங்களும், தனிப்பொருள் கூட்டுப் பொருள்களும், நாள் தோறும், நாட்டில் எண்ணவும் பண்ணவும் ஏற்படுகின்றன. அவற்றிற் கெல்லாம் பழைய நம் மொழிகளில், உரிச்சொல் முதனிலை உள்ளன கொண்டு, புதிய சொற்களைப் புனைய இயலுமேல் அவ்வாறு அவற்றை அமைத்துக் கொள்ளலாம். அஃதியலாதெனில், வடசொல் திசைச் சொல். வாய்ப்புள கொள்ளலாம். அயல் நாட்டுப் பிற மொழிச் சொற்களும் வேண்டுமிடங்களில் வாங்கி வழங்கலாம். பிறமொழிச் சொற்களை

எடுத்தாளுகையில், தமிழ் எழுத்தியல்பு, மொழி மரபு, எதுவும் பிறழவிடாமல் மாற்றி வழங்கலாம். மொழி இயல் மரபொடு, முழுதும் முரண, எழுத்தையும் சொல்லையும் புகுத்துதல் வழுவாகும். அப்படிச் செய்வது தமிழை வதைத்தொரு புதுமொழி படைப்பதாகும்.

அன்றியும் புதிதாய் ஆக்கியும் இரவலாய் வாங்கியும், தமிழில் கூட்டும் சொற்களைப், பெயர் வினை உரி இடை வகைகளாக்கிப் பிரிக்கவும், திரிக்கவும், பெருக்கி விரிக்கவும், ஏற்ற முறையில் அமைத்தல் வேண்டும். ஆக்கச் சொற் பொருட் போக்கில், அதன் தொடர்புடைய புதிய கருத்து எழுமேயானல், அச் சொல்லடியாய் அப்புதுக் கருத்தைச் சுட்டுதற்கான சொல்லும், பிறக்கத் தக்கவாறு அதனைச் சிந்தித்து அமையச் செய்வது நல்லது. எவ் வகையானும் தமிழ் மொழிஇயலின் தகவிகவாமல், புதிய சொற்களைப் புகுத்துதல் வேண்டும். அன்றேல் வளரும் தொழில்களும், உள்ளமும் உணர்வும் இனிக்கச் செய்யும் கலைகளும், அறிவும் வளம்பெறமாட்டா. வானொலி மாட்சியும், நெடிய காதம் பல நூறுடைய சேய்மையில் நடக்கும் செயல் பொருட்காட்சியும், அணுவால் உலகை அழிக்கும் ஆட்சியும், பொறிகளுக் கெட்டாக் கதிரொளி கதுவும் புதுமையும் அறிந்து, அவ்வறிவால் நன்மை ஆக்கவும், தின்மை நீக்கவும், முயல இயலாது. அன்றியும் கலைகள் எல்லாம் தலை சிறந்தோங்க, நிரம்பிய அறிவைத் தரும் பெருநூல்களைத் தாய்மொழிகளிலே இயற்றச் செய்வது இன்றியமையாதது. ஆங்கிலம், பிரஞ்சு, செர்மனி முதலிய பிறமொழிகளில் திறம்பட எழுதிய அறிவு நூல் அனைத்தையும் மொழிபெயர்த் துதவுதல், முதற் பெருவேலை. அவ்வம் மொழியில் உள்ள நூல்களைச் செவ்வையாய்க் கற்று, வழுவறத் தத்தம் தாய்மொழி பயின்று,

விழுமிய நூல்கள் எழுதப் போதிய ஆற்றலும் பெற்று மொழிகளிரண்டிலும், சொல்லின் திட்பமும், பொருளின் நுட்பமும் ஓர்ந்து, சீர்தூக்கி, ஒளிரும் நடை ஒட்பமுடைய அறிஞரைப் பிறமொழி நூல்களைப் பொருள் பெயராமல் மொழிபெயர்த் துதவத் தூண்டுதல் வேண்டும் இன்னும். நூலறிவும் மதிநுட்பமும் சாலச் சிறந்த மேதைகள், நுனித்திங்கு ஆராய்ந்து தெளிந்த அரும் பொருள்பற்றி அவர்களைக் கொண்டு புதிய நூல்களை ஆக்குதல் வேண்டும். இருவகை நூல்களும் உயர்தரப் பள்ளிகள் பெரிய கல்லூரிகள் எங்கும், கூர்த்த மதியுடையோர்க்கெலாம் அருந்திறலுடைய பேராசிரியரால் நித்தமும் பயிற்றப்படுதல் வேண்டும். அயராது இந்த முறை கையாளில், உயர்தரக் கல்விக்கு, ஆங்கிலப் பயிற்சியை ஐயிரண்டாண்டில் அறவே விடலாம். தாய்மொழியாலே எத்தரக் கல்வியும் எவர்க்கும் தரலாம். நாட்டு மக்கள் புத்தறிவு எய்தாக் கேட்டினை, எளிதில் போக்கவும் கூடும். கல்விக்கு அயல்நாடு செல்லும் இளைஞரின் அல்லலும் ஒழியும். ஏழை இந்தியரின் வாழ்வும் உயரும். அஞ்ஞானப் பழி அகன்று, நம்மவர் விஞ்ஞான உலகில் விழுப்புகழ் எய்துவர். உழவும் தொழிலும் வளம்பட, நாளும் வாணிபம் வளரும். செழித்துச் செல்வமும் தழைத்து, நம் நாடு பண்டைப் பெருமையினும் பத்து மடங்கு வெற்றியும் வீறும் பெற்றுயர்ந்து ஓங்கும். வாழி நம் தமிழ்! வாழியர் இந்தியர்!*

---

* திருச்சி அனைத்திந்திய வானொலி நிலையத்தில் பேசிய பேச்சு 20-5-48.

# அறமும் தருமமும்

தருமம் அறமும் ஒரு பொருள் குறிக்கும் இரு மொழிச் சொற்களாகக் கருதப்பட்டு, புலவ ருலகிலும் ஆளப்படுகின்றன. ஆரியதருமம் தமிழ் அறமாகாமை ஆழச் சிந்திப்பார்க்கு இனிது விளங்கும். 'தருமம் மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியா ஒழிதலுமாம் கடமையைக் குறிக்கும் வடசொல். அறத் துக்கும் அப்பொருளே கூறும் பரிமேலழகர், 'தருமத் தைக் குறிக்கும் தமிழ்ச் சொல்லே அறம்' எனக் கருதியது கண்கூடு. உண்மையில், பண்டைத் தமிழ்ச் சான்றோர் 'மாறா இயற்கை முறையே அறம்' எனக் கொண்ட னர். எனவே, "தருமம்" ஆரிய அறிஞர் தம் நூல்களில் மக்களுக்கு அறுதியிட்டமைத்து அரசியலாரால் வற்பு றுத்தப் பெறும் ஆணைகளாகும். அதனால், தரும சாத்தி ரங்களை இயற்றிய ஆசிரியர்கள் கருத்திற்கேற்ப, தருமம் அல்லது அரசியலாணைகள் மாறுபடும். "அறமோ" என் றும் எவ்விடத்தும் எல்லார்க்கும் பொதுவியல்பாம் இயல் முறை. அது ஒருவரால் ஆக்கப்படுவதன்று; முதலும் முடிவுமின்றி என்றும் ஒன்றுபோல் நடைபெறும் இயல்

முறை. அதைத் தமிழில் ஊழ் எனலாம். வடமொழியில் 'நியதி' என்பது ஓரளவு அப்பொருள் தருவதாகும். அறம் எங்கும் எஞ்ஞான்றும் நிலைத்த இயல்முறை. நெருப்புச் சுடும் - என்பது இயற்கை அறம்; எவ்விடத்தும் எப் போதும் தொடுபவர் யாரையும் அது சுடாது விடாது. அதுவேபோல் ஒழுக்கற இயலும் பிழையாது. இழுக்கும் என்றும் எவர்க்கும் பீழை தரும்.

அறம் இயற்கைத் திறம். ஆங்கிலத்தில் அறத்தை "லா" (Law) என மொழி பெயர்க்கலாம். நியதிகள் எல் லாம் அறமாகும். அவை இயற்கை அறம் (Natural Law), மக்கள் அறம் (Law of Humanities), என இரு திறப்படும். எனின், இயல் அறம் அனைத்தும் அவ்வத் துறையில் மாறுமல் நிகழும் நிலைமுறை, அதாவது நியதி யாகும். ஆனால் ஒழுக்கறத்தில் ஒரு பகுதி மக்கட் சமு தாயக் கூட்டுறவு வாழ்க்கை நலம் கருதி நாகரிக மாந்த ரிடை வற்புறுத்தப்படும். அதை இறை இயல் அல்லது ஆட்சி அறம் (State Law) எனலாம். அதைப் பின்னும் வழக்கு (Civil Law), ஒறுப்பு (Criminal Law)எனவும் பிரிக் கலாம். இவ் இறை அறமாம் தருமம் அல்லது சட்டங்கள் ஆட்சி முறைக்கேற்ப அதிகாரிகளால் அமைக்கப்பெறுத லால், இயலறமாகாமல், மாந்தரின் செயலறமாகும். அத னுல் அவை மாறுபடுவதியல்பு. ஒழுக்கறங்களுள் நாட்டு மக்கள் கூட்டுறவாட்சிக்கு இன்றியமையாத சிலவற்றை மட்டும் ஆட்சி முறைக்கேற்ப அமைத்து அரசியலார் வற்புறுத்துவர். ஒழுக்கறம் மக்கள் இனமுழுதுக்கும் ஒத் தியலும் மாறுத பொது நியதி. தருமமாம் இறைமை அறமென்பது ஒரு நாட்டார் கூட்டுறவாட்சிக்கு ஏற்ற படி அந்நாட்டரசியலார் அமைத்தாலும் கட்டளைகள்; ஆதலால் அவை நிலைமாறும் தருமங்கள், அல்லது சட்டங்

களாம். அவற்றை அறமெனல் உபசாரம்; உண்மையில் அவை தருமமேயாம். அன்றி, அறமாகா. ஆன்ற அறிவுடையாரமைத்த அரசியல் தருமம் (சட்டம்) எல்லாம் ஒழுக்கறத்தின் பகுதியாகும். ஆனால் ஒழுக்கற மனைத்தும் அரசியலில் வற்புறுத்தப் பெறா. அரசியல் தருமங்கள் அயலார்க்குத் தீமை பயவாத பொது நலத்திற்திற்காக ஆளுவோர் அமைப்பவை. அரசியலர் ஆட்சிக்கு வேண்டாத அறங்களை வற்புறுத்த விரும்பார். பிறருக்குத் தீங்கற்ற பொய்—ஒழுக்கற இழுக்காம்; ஆயினும் அரசியல் தரும முறையில் அது ஒறுப்புக்குரிய குற்றம் ஆகாது. சுருங்கக் கூறில், அறமெல்லாம் வற்புறுத்தப் படும் தருமமாகா. நல்லாட்சித் தருமம் அனைத்தும் பிறழா அறத்தின்பாற் படுதல் முறை.

அறத்திற்கும் தருமத்திற்கும் பிறிதொரு வேறுபாடு முளது. அறம் மக்கள் அனைவருக்கும் எக்காலும் ஒத்தியலும் இயன்முறை அல்லது ஒழுக்கியல். பிறப்பு – வகுப்பு – பால்-வயது-இடம்-காலம்-நிலை-கலை முதலிய எதுபற்றியும் ஒருவருக்கும் அறம் பிறழாது, வேறுபடாது. பொய்-கொலை போன்ற வழுக்கள் எல்லார்க்கும் இழுக்கே; என்றும் யார்க்கும் அவை அறமாகா. நிலைதோறும் மாந்தருக்கு மாறுபட அமைவது தருமம், அறமன்றும். பொய்யும் சூதும் செய்து அரசெய்திய ஒருவனை 'தருமன்' என்பது ஆரிய தருமம். குருகுல அரசனுக்கு நூறு புதல்வரிருக்கவும், அரசுரிமையற்ற அரசன் தம்பி-சேனாபதி பாண்டு மகன் அவ்வரசை விரும்பினான். தன் தம்பி விசயனுக்குப் பெண் தர வேண்டிப் பாஞ்சாலன் தவம் கிடந்து வரத்தால் பெற்றவளைத் தானும் பொதுமகளாக அவள் நலத்தை நுகர விரும்பி, அவள் தந்தை வெறுத்து மறுத்தும், துணிந்து மணந்தான். பிறர் எவர்க்கும் பழி

தரும் இப்பிழைகள், போரில் தகவற்ற மறத்தால் வென்ற அவன் நிலையால் தருமங்களாகவே கருதப்படுகின்றன. கண்ணனாயினும் வெண்ணீற்று வண்ணனாயினும் எண்ணி இயற்றுவது இழுக்காயின் அதை இகழ்ந்து வெறுப்பர் தமிழ் அறவோர். பிறந்த வருணமும் சிறந்த நிலையும் அறம் திறம்பும் உரிமை தரும் பெருமையுடையது தரும மென ஒரு வகுப்பினர் கூறலாம். குடிதோறும் படிமாறும் நீதிகள் தருமமாகலாம்; அவை ஒருகாலும் அறமாகா. தமிழற நூல் சாதி-ஆச்சிரமம் முதலிய துறைதோறும் முறைமாறக் கூறமாட்டா. தரும சாத்திரம் சந்நியாசிகளை ஆசார தருமங்களுக்கு அதீதர் என உரைக்கக் காண் போம். தமிழற நூல் துறவியையும் அற வரம்பில் ஒழுக விதிக்கும். 'ஒழுக்கத்தை நீத்தார் என்னாது, "ஒழுக்கத்து நீத்தார்க்கே பெருமை" எனத் துறவிக்கும் அறனை வலி யுறுத்திக் கூடாவொழுக்கத்தை இகழும் வள்ளுவர் மாறாத தமிழறம் கூறினர். இதனால் ஒரு குலத்திற்கொரு நீதியாக மாறுபடக் கூறும் சாத்திர தருமம் வேறு, என்று ஞான்றும் எல்லார்க்கும் ஒத்து மாறாமல் நிலைத்த தமிழ றம் வேறு எனும் உண்மை தேற்றமாகும். பிறப்பால் மாறுபடும் ஆசாரங்களை மாறாதஒழுக்கறமெனப் பிழைபட நினைத்துப் பிறழ்ந்து கூறும் பரிமேலழகரும், தருமம் "வரு ணந்தோறும் வேறுபடும்" என்றும், அறம் "எல்லார்க் கும் ஒத்த பொதுவியல்பிற்று" என்றும் அவற்றின் வேறு பாடு விளங்கக் கூறியிருப்பதும் இதை வலியுறுத்தும். அறமனைத்தும் தருமமாகலாம். தருமம் எல்லாம் அற மாகாமையை மறவாமல் பேணுவதே அறிவறமாகும்.

---